சென்னை
மதுரை
கோவை
திருச்சி
திருநெல்வேலி
வேலூர்
தருமபுரி
புது தில்லி
விழுப்புரம்
நாகப்பட்டினம்
http://www.dinamani.com

# தினமணி

திங்கள்கிழமை
22 செப்டம்பர் 2025
சென்னை
12 பக்கங்கள் ரூ.9




## வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம்: செப். 30-க்குள் தயாராக அறிவுறுத்தல்

**புது தில்லி, செப். 21:** வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கு செப்.30-ஆம் தேதிக்குள் தயாராக இருக்க வேண்டும் என்று அனைத்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

(விரிவான செய்தி உள்ளே)

## நாளை திமுக எம்.பி.க்கள் கூட்டம்

**சென்னை, செப். 21:** திமுக மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் செவ்வாய்க்கிழமை (செப்.23) நடைபெறும் என்று திமுக பொதுச் செயலர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.

(விரிவான செய்தி உள்ளே)

## தவெகவுக்கு அதிகரிக்கும் மக்கள் ஆதரவைக் கண்டு பலருக்கும் அச்சம்

**சென்னை, செப்.21:** தமிழக வெற்றிக் கழகத்துக்குப் பெருகி வரும் ஆதரவைப் பார்த்து, பலருக்கும் அச்சம் ஏற்பட்டுள்ளதாக அக்கட்சியின் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.



(விரிவான செய்தி உள்ளே)

# நாட்டின் வளர்ச்சி வேகம் பெறும்

## ஜிஎஸ்டி சீர்திருத்தம் குறித்து பிரதமர் மோடி பெருமிதம்

**புது தில்லி, செப். 21:** 'அடுத்த தலைமுறை சரக்கு - சேவை வரி (ஜிஎஸ்டி) சீர்திருத்தங்கள், நாட்டின் வளர்ச்சிப் பயணத்துக்கு வேகமூட்டும்; தொழில் புரிவதை எளிதாக்கி, முதலீடுகளை மேலும் ஈர்க்கும்' என்று பிரதமர் நரேந்திர மோடி ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

'ஜிஎஸ்டி குறைப்பின் மூலம் மக்கள் தங்கள் கனவுகளை எளிதாக பூர்த்தி செய்ய முடியும்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டில் நான்கு விகித ஜிஎஸ்டி முறையை மாற்றி, இரண்டு விகித (5%, 18%) ஜிஎஸ்டி முறை திங்கள்கிழமை (செப். 22) முதல் அமலாகிறது.

சுமார் 375 பொருள்கள் மீதான வரிக் குறைப்பால், தினசரி பயன்பாட்டுப் பொருட்கள் தொடங்கி கார்கள் வரை விலை குறைக்கப்பட்டுள்ளது.

இதை முன்னிட்டு, நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு உரையாற்றினார். தனது 19 நிமிஷ உரையில், அவர் கூறியதாவது:

நாட்டு மக்கள் அனைவருக்கும் நவராத்திரி விழா நல்வாழ்த்துகள். நவராத்திரியின் தொடக்கத்தில், தற்சார்பு தேசம் எனும் இலக்கை எட்ட மிகப் பெரிய மற்றும் முக்கியமான அடியை எடுத்து வைக்கிறது இந்தியா. திங்கள்கிழமை சூர்யோதயத்துடன் அடுத்த தலைமுறை ஜிஎஸ்டி சீர்திருத்தங்களும் அமலாகின்றன.

ஜிஎஸ்டி 'சேமிப்புத் திருவிழா' தொடங்குகிறது. இதன்மூலம் மக்கள் தாங்கள் விரும்பும் பொருள்களை எளிதாக வாங்க முடியும். வீடு கட்டுதல், தொலைக்காட்சி, குளிர்சாதனங்கள், மோட்டார் சைக்கிள், கார் வாங்குதல் போன்ற கனவுகள் நிறைவேறும்.

ஏழைகள், நடுத்தர வகுப்பினர், இளைஞர்கள், விவசாயிகள், வர்த்தகர்கள், தொழில்முனைவோர் பெரிதும் பலனடைவர். இந்த விழாக் காலத்தில் வீடுகள் தோறும் மகிழ்ச்சியும் குதூகலமும் நிறையும்.

இந்தச் சீர்திருத்தங்கள், நாட்டின் வளர்ச்சிப் பயணத்துக்கு வேகமூட்டும்; இப்பயணத்தில் ஒவ்வொரு மாநிலமும் சமமான பங்குதாரர்களாகத் திகழ்வதை உறுதி செய்யும். 'குடிமக்களே கடவுள்' எனும் தாரக மந்திரத்தின் பிரதிபலிப்பே ஜிஎஸ்டி குறைப்பாகும். இதன் பலன்களை பொது மக்களுக்கு வழங்க வர்த்தகர்கள் காட்டிவரும் ஆர்வம் பாராட்டுக்குரியது.

கடந்த 2017-இல் ஜிஎஸ்டி அமலாக்கத்தின் மூலம் புதிய வரலாறு தொடங்கப்பட்டது. இது, ஒரே நாடு-ஒரே வரி கனவை நனவாக்கியதுடன், சிக்கலான பல்வேறு வரிகளால் தொழில் துறையினர் மற்றும் நுகர்வோர் எதிர்கொண்ட இடர்ப்பாடுகளுக்குத் தீர்வளித்தது.



ஜிஎஸ்டி சீர்திருத்தம் அமலுக்கு வருவதையொட்டி, நாட்டு மக்களுக்கு ஞாயிற்றுக்கிழமை உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி.

**ரூ.2.5 லட்சம் கோடி சேமிக்கப்படும்:** இப்போது காலத்துக்கு ஏற்ப சீர்திருத்தங்கள் அவசியமாகின்றன. நாட்டில் எதிர்கால லட்சியங்களைக் கருத்தில்கொண்டு, ஜிஎஸ்டி சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நடப்பாண்டில் தனிநபர் வருமான வரி விலக்கு உச்சவரம்பு ஆண்டுக்கு ரூ.12 லட்சமாக (புதிய வருமான வரி முறை) உயர்த்தப்பட்டது. தற்போது ஜிஎஸ்டி குறைப்பையும் கருத்தில் கொண்டால், நடுத்தர வகுப்பினருக்கு இது இரட்டை அதிர்ஷ்டமாகும். இவ்விரு நடவடிக்கைகளால் இந்திய மக்களின் ரூ.2.5 லட்சம் கோடி சேமிக்கப்படும்.

**மாநிலங்களுக்கு அழைப்பு:** தற்சார்பு இந்தியா மற்றும் சுதேசி பிரசாரத்துக்கு மாநிலங்கள் உறுதியுடன் ஆதரவளிக்க வேண்டும்; தங்கள் மாநிலங்களில் முழு ஆற்றலுடன் உள்நாட்டுத் தயாரிப்பை ஊக்குவிப்பதோடு, முதலீட்டு உகந்த சூழலை உறுதி செய்ய வேண்டும். மத்திய-மாநில அரசுகள் ஒருங்கிணைந்து பயணித்தால், தற்சார்பு இந்தியா இலக்கை எட்ட முடியும் என்று பிரதமர் மோடி அழைப்பு விடுத்தார்.

## ஜிஎஸ்டி குறைப்பு இன்றுமுதல் அமல்

**புது தில்லி, செப்.21:** பொதுமக்களின் பெரும் எதிர்பார்ப்புக்கு இடையே சரக்கு-சேவை வரி (ஜிஎஸ்டி) விகிதக் குறைப்பு திங்கள்கிழமை (செப்.22) முதல் அமலுக்கு வருகிறது.

சுமார் 375 பொருள்கள் மீதான வரிக் குறைப்பால், அன்றாட பொருள்கள் தொடங்கி தொலைக்காட்சி, குளிர்சாதனங்கள், கார்கள் வரை, அத்தியாவசிய மருந்துகள் முதல் காப்பீடுகள் வரை விலை குறைக்கப்பட்டுள்ளது. நவராத்திரி விழாக் கால தொடக்கத்தையொட்டி இந்த வரிக் குறைப்பு அமலாகியுள்ளது.

நாட்டில் ஒரு சில மாநில வரிகள் தவிர பிற 17 வரிகள் மற்றும் 13 கூடுதல் வரிகளை ஒருங்கிணைத்து 2017, ஜூலை 1 முதல் ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்கீழ் 5%, 12%, 18%, 28% ஆகிய நான்கு விகிதங்களில் வரி விதிக்கப்பட்டு வந்தது.

ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டு 8 ஆண்டுகள் நிறைவானதையொட்டி, அதை மேலும் எளிமைப்படுத்தும் விதமாக, மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்கள் மீதான ஜிஎஸ்டியை குறைக்கும் வகையில் அடுத்த தலைமுறை சீர்திருத்தம் (ஜிஎஸ்டி 2.0) தீபாவளி பண்டிகைக்குள் மேற்கொள்ளப்படும் என கடந்த சுதந்திர தின உரையில் பிரதமர் மோடி தெரிவித்தார்.

அதன்படி, நான்கு விகித ஜிஎஸ்டியில் 12%, 28% ஆகிய விகிதங்களை நீக்கிவிட்டு, 5%, 18% ஆகிய இரு வரி விகித முறையை செயல்படுத்தவும், புகையிலை, குட்கா, பான் மசாலா போன்ற தீங்கு விளைவிக்கும் பொருள்கள் மற்றும் ஆடம்பர பொருள்கள் மீது மட்டும் 40% வரி விதிக்கவும் ஜிஎஸ்டி கவுன்சில் கடந்த செப்டம்பர் 3-ஆம் தேதி ஒப்புதல் வழங்கியது. இரு விகித ஜிஎஸ்டி முறையை நவராத்திரி தொடக்கத்தையொட்டி செப். 22-ஆம் தேதிமுதல் நடைமுறைப்படுத்த முடிவெடுக்கப்பட்டது.

**பெரும்பாலான பொருள்களுக்கு வரி குறைப்பு:** முக்கியத்துவம் வாய்ந்த இந்தச் சீர்திருத்தத்தின்படி, 12% வரி விதிக்கப்பட்ட 99 சதவீத பொருள்கள் 5% வரி விதிப்பின்கீழ் கொண்டுவரப்பட்டன; 28% வரி விதிக்கப்பட்ட 90 சதவீத பொருள்கள் 18% விகிதத்தின்கீழ் வந்தன. பெரும்பான்மையான தினசரி பயன்பாட்டுப் பொருள்கள் வரி விலக்கு அல்லது 5% வரி விதிப்பில் கொண்டுவரப்பட்டன. பெரும்பாலான மருந்துகள், மூலப்பொருள்கள், பரிசோதனை உபகரணங்கள் மீதான வரி 5%-ஆகவும், கார்கள் மீதான வரி 28-இல் இருந்து 18%-ஆகவும் குறைக்கப்பட்டது.

இந்த வரிக் குறைப்பு திங்கள்கிழமை அமலுக்கு வருகிறது. இதையொட்டி, பல்வேறு நிறுவனங்களும் தங்கள் தயாரிப்புப் பொருள்களின் விலையைக் குறைத்துள்ளன; அதிகபட்ச விற்பனை விலை (எம்ஆர்பி) மாற்றியமைக்கப்பட்ட பொருள்கள், சந்தைக்கு அனுப்பப்பட்டுள்ளன. ஏற்கெனவே சந்தையில் உள்ள பொருள்களையும் குறைக்கப்பட்ட விலையிலேயே விற்பனை செய்ய நிறுவனங்கள் தரப்பில் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. தொலைக்காட்சிகளைப் பொருத்தவரை திரையளவுக்கு ஏற்ப ரூ.2,500 முதல் ரூ.85,000 வரை விலைக் குறைப்பை நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

### விலை குறைக்கப்பட்டுள்ள பொருள்கள் / சேவைகள்

| | |
|---|---|
| சமையல்-உணவுப் பொருள்கள் | நெய், பனீர், வெண்ணெய், கெட்ச்-அப், ஜாம், உலர் பழங்கள், காபி, தேயிலை, ஐஸ்கிரீம், பாக்கெட் மிக்சர்கள், இனிப்பு வகைகள், சாக்லெட், நூடுல்ஸ், பிஸ்கட் உள்ளிட்டவை. |
| தினசரி பயன்பாட்டு பொருள்கள் | கூந்தல் எண்ணெய், ஷாம்பூ, குளியல் சோப், பல் துலக்கும் பிரஷ், பற்பசை, முகப்பூச்சு, ஷேவிங் கிரீம் உள்ளிட்டவை. |
| வீட்டு உபயோக பொருள்கள் | தொலைக்காட்சி, குளிர்சாதனங்கள், பாத்திரங்கள் கழுவும் இயந்திரம், தையல் இயந்திரம்-பாகங்கள் உள்ளிட்டவை. |
| வாகன உற்பத்தி துறை | பெட்ரோல்-பெட்ரோல் ஹைபிரிட்-எல்பிஜி-சிஎன்ஜி கார்கள், டீசல், டீசல் ஹைபிரிட் கார்கள், மோட்டார் சைக்கிள்கள், சரக்கு போக்குவரத்து வாகனங்கள், டிராக்டர்கள், டிராக்டர் டயர்கள், நடுவை-அறுவடை இயந்திரங்கள் உள்ளிட்டவை. |
| மருத்துவத் துறை | தனிநபர் மருத்துவ-ஆயுள் காப்பீடு, தெர்மா மீட்டர், உயிர் காக்கும் மருந்துகள், மருத்துவ ஆக்சிஜன், மருந்துவ பரிசோதனைக் கருவிகள், கண் கண்ணாடிகள். |
| சேவைகள் | ஆரோக்கிய மையங்கள், முடி திருத்தகம், உடற்பயிற்சி, யோகா மையங்கள், ஹோட்டல் அறைக் கட்டணங்கள். |

## 'சுதேசியில் பெருமிதம் கொள்வோம்'

'இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்துக்கு 'சுதேசி' இயக்கம் வலுவூட்டியதைப் போல, தற்போது நாட்டின் வளமைக்கு சுதேசி எனும் தாரக மந்திரமே வலிமை சேர்க்கும். ஒவ்வொரு வீடும், ஒவ்வொரு கடையும் சுதேசியின் அடையாளமாக வேண்டும். சுதேசி பொருள்களை வாங்குவதிலும், விற்பதிலும் நாம் பெருமிதம் கொள்ள வேண்டும்.

முன்பு இந்திய தயாரிப்புகள், தங்களின் மேலான தரத்துக்காக உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றிருந்தன. அப்பெருமையை மீட்டெடுக்க வேண்டிய முக்கியப் பொறுப்பு, நாட்டின் குறு, சிறு, நடுத்தர தொழில் துறையினருக்கு உள்ளது. உலகத் தரத்தில் பொருள்களை உருவாக்க வேண்டும்; இதன்மூலம் நாட்டின் அடையாளத்தையும் மதிப்பையும் உயர்த்த வேண்டும்.

நமது அன்றாட வாழ்வில் வெளிநாட்டுத் தயாரிப்புப் பொருள்கள் எப்படியோ அங்கமாகிவிட்டன. அதிலிருந்து விடுபட்டு, இந்திய மக்களின் கடின உழைப்பில் உருவான பொருள்களைப் பயன்படுத்த வேண்டும்' என்று வலியுறுத்தினார் பிரதமர் மோடி.

பாலஸ்தீனம் தனி நாடு

# கனடா, பிரிட்டன், ஆஸ்திரேலியா அங்கீகரிப்பு

**டொரன்டோ/லண்டன்/கான்பெரா, செப். 21:** பாலஸ்தீனத்தை தனி நாடாக பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் முறைப்படி அங்கீகரித்துள்ளன. அதேவேளையில், பாலஸ்தீனத்தில் ஹமாஸுக்கு எந்தப் பங்கும் இருக்கக் கூடாது என்பதே தங்களின் நிலைப்பாடு என்பதையும் அந்த நாடுகள் தெளிவுபடுத்தியுள்ளன.

இதுதொடர்பாக கனடா பிரதமர் மார்க் கார்னி ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட அறிக்கையில், 'மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அமைதி நீடித்து நிலைக்க இஸ்ரேலையும், பாலஸ்தீனத்தையும் தனித்தனி நாடுகளாக அங்கீகரிக்க வேண்டும் என்பதே 1947-ஆம் ஆண்டுமுதல் கனடா அரசின் கொள்கையாகும்.

இந்நிலையில், பாலஸ்தீனத்தை தனி நாடாக கனடா அங்கீகரிக்கிறது. இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன நாடுகளுக்கு அமைதியான எதிர்காலத்தை ஏற்படுத்துவதில் தனது பங்களிப்பை கனடா வழங்கும். அதேவேளையில், இந்த அங்கீகாரம் ஹமாஸுக்கு அளிக்கப்படும் பரிசல்ல. அமைதியான கூட்டு வாழ்வுக்கு உகந்த சூழல் ஏற்பட வேண்டும், ஹமாஸ் அமைப்பு முடிவுக்கு வரவேண்டும் என்று கருதுவோருக்கு இந்த அங்கீகாரம் துணை நிற்கும்' என்றார்.


பிரிட்டன் பிரதமர் கியர் ஸ்டார்மர் சமூக ஊடகத்தில் வெளியிட்ட காணொலியில், 'மத்திய கிழக்கு பிராந்தியத்தில் (பாலஸ்தீனத்தின் காஸா பகுதியில் இஸ்ரேலின் தாக்குதலால்) கொடூரங்கள் அதிகரித்துவருகின்றன. அங்கு அமைதி ஏற்படுவதற்கான சாத்தியத்தையும், இஸ்ரேல்-பாலஸ்தீனத்தை இரு வேறு நாடுகளாக அறிவிக்கும் இருதேச தீர்வுக்கான சாத்தியத்தையும் உயிர்ப்புடன் வைத்திருக்க வேண்டும் என்று பிரிட்டன் கருதுகிறது. எனவே, அமைதி மற்றும் இருதேச தீர்வுக்கான நம்பிக்கைக்குப் புத்துயிர் அளிக்க பாலஸ்தீனத்தை தனி நாடாக பிரிட்டன் முறைப்படி அங்கீகரிக்கிறது.

பிரிட்டன் ஆதரிக்கும் நேர்மையான இரு தேச தீர்வு என்பது ஹமாஸ் படையின் வெறுப்புணர்வு கொண்ட கண்ணோட்டத்துக்கு முற்றிலும் மாறானது. இந்தத் தீர்வு ஹமாஸுக்கு அளிக்கப்படும் பரிசல்ல. ஹமாஸுக்கு எதிர்காலம் இல்லை. ஆட்சியமைப்பதில் அவர்களுக்குப் பங்கிருக்காது என்பதே இதன் அர்த்தம்' என்றார்.


**ஜி7 கூட்டமைப்பில்...:** ஜி7 கூட்டமைப்பில் அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, கனடா, பிரிட்டன், இத்தாலி, ஜப்பான் ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் முதல் நாடாக கனடாவும், அதைத் தொடர்ந்து பிரிட்டனும் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்துள்ளன.

ஆஸ்திரேலிய பிரதமர் ஆண்டனி ஆல்பனேசி வெளியிட்ட அறிக்கையில், 'பாலஸ்தீனத்தை சுதந்திர, இறையாண்மை கொண்ட நாடாக ஆஸ்திரேலியா அங்கீகரிக்கிறது. பிரிட்டன், கனடாவுடன் சேர்ந்து ஆஸ்திரேலியா அளித்துள்ள இந்த அங்கீகாரம், இருதேச தீர்வுக்கு புதிய வேகத்தை ஏற்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த சர்வதேச முயற்சியின் ஒரு பகுதியாகும். பாலஸ்தீனத்தில் ஹமாஸுக்கு எந்தப் பங்கும் இருக்கக் கூடாது' என்று தெரிவிக்கப்பட்டது.

**இரு தேச தீர்வுக்கு உதவும்:** அடுத்த வாரம் கூடவுள்ள ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் பாலஸ்தீனத்தை தனி நாடாக பிரான்ஸும் முறைப்படி அங்கீகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரு தேச தீர்வுக்கு இந்த அங்கீகாரம் உதவும் என்று பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் ஏற்கெனவே தெரிவித்துள்ளன.



மார்க் கார்னி



கியர் ஸ்டார்மர்



ஆண்டனி ஆல்பனேசி

## பாலஸ்தீனம் தனி நாடாகாது: இஸ்ரேல் பிரதமர்



பாலஸ்தீனத்தை தனி நாடாக பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா அங்கீகரித்தது ஹமாஸுக்கு அளிக்கப்பட்ட பரிசு என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சாடினார்.

பாலஸ்தீனம் தனி நாடாக உருவாகாது என்று தெரிவித்த அவர், அடுத்த வாரம் அமெரிக்காவில் அந்நாட்டு அதிபர் டிரம்ப்பை சந்தித்த பின், தற்போது அளிக்கப்பட்டுள்ள அங்கீகாரத்துக்கு இஸ்ரேலின் எதிர்வினை என்ன? என்பது அறிவிக்கப்படும் என்றும் கூறினார்.

**இஸ்ரேல் வெளியுறவு அமைச்சகம்:** இஸ்ரேல் வெளியுறவு அமைச்சகம் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவில், 'பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரித்துள்ளது வருங்காலத்தில் அமைதியான தீர்வை எட்டுவதற்கான வாய்ப்பை வலுவிழக்கச் செய்யும். இந்த அங்கீகாரத்தை 2023-ஆம் ஆண்டு அக்.7-ஆம் தேதி இஸ்ரேல் மீது தாங்கள் நடத்திய தாக்குதலுக்கு கிடைத்த பலன் என்றே ஹமாஸ் தலைவர்கள் கருதுகின்றனர். இந்த அங்கீகாரம் ஹமாஸுக்குள்ள ஆதரவை உறுதிப்படுத்துகிறது.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஸ்திரமான சூழலை ஏற்படுத்த வேண்டும் என்று பிற நாடுகள் உண்மையாகவே விரும்பினால், உடனடியாக பிணைக் கைதிகளை விடுவிக்கவும் ஆயுதங்களை கைவிடவும் ஹமாஸுக்கு அழுத்தம் அளிக்க வேண்டும்' என்று தெரிவிக்கப்பட்டது.

## தூத்துக்குடி கப்பல் கட்டும் தளம் வளர்ச்சிக்கு அடித்தளம்



**சென்னை, செப்.21:** தூத்துக்குடியில் அமையவுள்ள கப்பல் கட்டும் தளங்கள், தென்தமிழக வளர்ச்சிக்கான அடித்தளமாக விளங்கும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடியில் ரூ.30 ஆயிரம் கோடி முதலீட்டில் உலகத் தரம் வாய்ந்த இரண்டு கப்பல் கட்டும் தளங்கள் அமைக்கப்படவுள்ளதாக தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா கடந்த சனிக்கிழமை கூறினார்.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சிப்காட் நிர்வாகம் மற்றும் வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகமும் சில வாரங்களுக்கு முன்பு கையொப்பமிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்களானது கப்பல் கட்டுதல் மற்றும் கடல்சார் கண்டுபிடிப்புகளுக்கான உலகளாவிய மையமாக தமிழகம் உருவெடுக்க வழி வகுக்கும் என்றும் அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா கூறினார்.

இந்த நிலையில், இதுதொடர்பாக முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட சமூக வலைதளப் பதிவு:

கப்பல் கட்டும் கலையில் தமிழரின் பெருமைமிகு வரலாற்றை சங்கப் பாடல்கள் சொல்லும். இப்போது, தூத்துக்குடியில் ரூ.30 ஆயிரம் கோடி முதலீட்டில், 55 ஆயிரம் பேர் வேலை வாய்ப்பு பெறும் வகையில் இரு கப்பல் கட்டும் தளங்கள் அமையவுள்ளன.

தென் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குப் புதியதொரு அடித்தளமாக இவை அமையும் என்று முதல்வர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

# ஹெச்-1பி விசா கட்டணம் ஒருமுறை மட்டும் செலுத்தினால் போதும்

## வெள்ளை மாளிகை விளக்கம்

**நியூயார்க்/வாஷிங்டன், செப். 21:** உயர்த்தப்பட்ட ஹெச்-1பி விசா (நுழைவு இசைவு) கட்டணமான ரூ.88 லட்சத்தை (ஒரு லட்சம் டாலர்) புதிய விண்ணப்பதாரர்கள் ஒருமுறை மட்டுமே செலுத்தினால் போதுமானது என அமெரிக்க வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் டெய்லர் ரோஜர்ஸ் தெரிவித்தார்.

முன்னதாக, உயர்த்தப்பட்ட விசா கட்டணத்தை ஒவ்வோர் ஆண்டும் செலுத்த வேண்டும் என அமெரிக்க வர்த்தகத் துறை அமைச்சர் ஹோவர்டு லுட்னிக் கூறியிருந்த நிலையில், டெய்லர் ரோஜர்ஸ் இவ்வாறு தெரிவித்தார்.

அதிதிறன்வாய்ந்த ஊழியர்களுக்கு மட்டுமே அமெரிக்காவில் பணி வழங்குவது, அமெரிக்காவில் உள்ள நிறுவனங்களில் அமெரிக்கர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு ஹெச்-1பி விசா கட்டணத்தை ரூ.1.49 லட்சத்தில் இருந்து ரூ.88 லட்சமாக உயர்த்துவதற்கான உத்தரவில் டிரம்ப் வெள்ளிக்கிழமை கையொப்பமிட்டார். இந்தப் புதிய கட்டணம் ஞாயிற்றுக்கிழமை (செப். 21) அமலுக்கு வந்தது.

இதனால் அமெரிக்காவில் ஹெச்-1பி விசா பெற்று பணியாற்றிவரும் இந்தியர்கள் பெரிதும் பாதிப்படைவர் என நிபுணர்கள் கவலை தெரிவித்தனர். அதேபோல் ஹெச்-1பி விசாவின்கீழ் அமெரிக்காவில் வசிக்கும் பணியாளர்களுக்கு ஒவ்வோர் ஆண்டுக்கும் இந்தக் கட்டணத்தை நிறுவனங்கள் செலுத்தவேண்டும் என ஹோவர்டு லுட்னிக் கூறியது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதையடுத்து, அமெரிக்காவில் இருந்து சுற்றுலா, பணிரீதியாக வெளியே சென்ற ஊழியர்கள் ஞாயிற்றுக்கிழமைக்குள் அமெரிக்காவுக்கு திரும்ப நிறுவனங்கள் வலியுறுத்தின.

**வெள்ளை மாளிகை விளக்கம்:** இதைத் தொடர்ந்து, அதிகரிக்கப்பட்ட விசா கட்டணம் புதிய விண்ணப்பதாரர்களுக்கு மட்டுமே பொருந்தும் எனவும், ஏற்கெனவே ஹெச்-1பி விசா வைத்திருப்பவர்களுக்கு இந்த விதி பொருந்தாது எனவும் டிரம்ப் நிர்வாகம் விளக்கம் அளித்தது. மேலும், ஏற்கெனவே ஹெச்-1பி விசா வைத்திருப்பவர்கள் அவசரகதியில் உடனடியாக அமெரிக்காவுக்கு புறப்பட்டு வர வேண்டிய அவசியம் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சூழலில் உயர்த்தப்பட்ட விசா கட்டணத்தை ஆண்டுதோறும் செலுத்த வேண்டுமா? அல்லது ஒருமுறை மட்டுமே செலுத்த வேண்டுமா? என அனைவரின் மத்தியில் எழுந்த குழப்பம் தொடர்பாக டெய்லர் ரோஜர்ஸ் பதிலளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: அமெரிக்காவில் இயங்கும் நிறுவனங்கள் வேலைவாய்ப்பில் உள்நாட்டினருக்கு முன்னுரிமை அளிப்பதை ஊக்குவிக்கவும், வெளிநாட்டினரைப் பணியமர்த்துவதைத் தடுக்கவும் ஹெச்-1பி விசா கட்டணத்தை அதிபர் டிரம்ப் உயர்த்தியுள்ளார். ஏற்கெனவே ஹெச்-1பி விசா வைத்திருப்பவர்கள் அல்லது புதுப்பிப்பவர்கள் இந்தப் புதிய கட்டணத்தை செலுத்த தேவையில்லை. புதிதாக ஹெச்-1பி விசாவுக்கு விண்ணப்பிப்பவர்கள் ஒருமுறை மட்டுமே ரூ.88 லட்சம் செலுத்த வேண்டும். அதை ஒவ்வோர் ஆண்டும் செலுத்தத் தேவையில்லை என்றார்.



## நோபல் பரிசு வேண்டும்: டிரம்ப்

இந்தியா-பாகிஸ்தான் இடையே ஏற்பட்ட போரை தான் நிறுத்தியதாக அதிபர் டிரம்ப் மீண்டும் சனிக்கிழமை தெரிவித்தார். மேலும், உலகின் அதிபயங்கரமான 7 போர்களை நிறுத்தியதற்காக தனக்கு உலக அமைதிக்கான நோபல் பரிசு வழங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## அமெரிக்காவுக்கே பாதிப்பு அதிகம்: ஜிடிஆர்ஐ

**புது தில்லி, செப். 21:** ஹெச்-1பி விசா கட்டணத்தை உயர்த்தியிருப்பது இந்தியாவைவிட அமெரிக்காவுக்கே அதிக பாதிப்பை ஏற்படுத்தும் என உலகளாவிய வர்த்தக ஆய்வு நிறுவனம் (ஜிடிஆர்ஐ) சனிக்கிழமை தெரிவித்தது.

இதுகுறித்து அந்த நிறுவனத்தின் தலைவர் அஜய் ஸ்ரீவஸ்தவா கூறுகையில், 'அமெரிக்காவில் உள்ள இந்திய தகவல் தொழில்நுட்ப (ஐடி) நிறுவனங்களில் 50-80 சதவீதம் வரை அமெரிக்கர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். ஒட்டுமொத்தமாக ஒரு லட்சம் அமெரிக்கர்கள் இந்த நிறுவனங்களில் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது ஹெச்-1பி விசா கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பதால் புதிய வேலைவாய்ப்புகளை இந்த நிறுவனங்கள் வழங்க வாய்ப்புகள் குறைவு.

எனவே, அமெரிக்காவுக்கு பதிலாக இந்தியாவில் இருந்தே இந்தப் பணிகளை மேற்கொள்வதற்கான முன்னெடுப்பை நிறுவனங்கள் அதிகப்படுத்தும். இதனால் ஹெச்-1பி விசா விண்ணப்பங்கள் பெருமளவில் குறைந்துவிடும். இது அமெரிக்காவுக்கே பாதிப்பை ஏற்படுத்தும்.

இதைப் பயன்படுத்தி அமெரிக்காவில் இருந்து வெளியேறும் திறன் வாய்ந்த இந்திய பணியாளர்களைக்கொண்டு மென்பொருள், இணையப் பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் வலுவான கட்டமைப்பை இந்தியா ஏற்படுத்த வேண்டும்' என்றார்.

## இன்றுமுதல் ரயில் நீர் விலை ரூ.1 குறைப்பு



**சென்னை, செப்.21:** ரயில் நிலையங்களில் விற்பனை செய்யப்படும் ரயில் நீர் (ஒரு லிட்டர்) விலை திங்கள்கிழமை (செப்.22) முதல் ரூ.1 குறைக்கப்படுவதாக ரயில்வே அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரயில்வே துறையால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் மூலமாக ரயில் நிலையங்களில் உணவுப் பொருள்கள், குளிர்பானங்கள் விற்பனை செய்யப்படுகின்றன. அதேபோல ரயில் நீர் எனும் பெயரில் குடிநீர் பாட்டில்களும் ஒரு லிட்டர், அரை லிட்டர் அளவுகளில் முறையே ரூ.15, ரூ.10-க்கு விற்பனை செய்யப்படுகின்றன.

ரயில்நீர் பாட்டில்கள் திங்கள்கிழமை முதல் லிட்டருக்கு ரூ.1 குறைத்து விற்பனை செய்ய ரயில்வே வாரியம் அனுமதித்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இதுகுறித்து அனைத்து ரயில் நிலைய நிர்வாகங்களுக்கும் ரயில்வே வாரியத்தின் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளதாகவும், ரயிலில் குடிநீர் பாட்டில்கள் விற்கும் உரிமம் பெற்றவர்களுக்கும் அந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## வடபழனி முருகன் கோயிலில் சக்தி கொலு இன்று தொடக்கம்

**சென்னை, செப். 21:** வடபழனி முருகப் பெருமான் கோயிலில் நவராத்திரி விழாவை முன்னிட்டு, சக்தி கொலுவுடன் 10 நாள் விழா திங்கள்கிழமை (செப்.22) தொடங்குகிறது.

இந்தக் கோயிலில் நவராத்திரி விழாவின் 10 நாள்களில் தினமும் காலை 11 முதல் 11.30 மணிவரை, மாலை 6 முதல் 6.30 மணி வரை அம்மன் கொலு மண்டபத்தில் சிறப்பு பூஜை, தீபாராதனை நடத்தப்படும். அதேபோல், தினமும் மாலை 5 முதல் 7 மணி வரை லலிதா சகஸ்ரநாம பாராயணம், வேதபாராயணம், திருமுறை பாராயணம், பரதநாட்டிய நிகழ்ச்சிகள், மகளிர் குழுவினர் கொலுபாட்டு நடத்தப்படுகிறது. மேலும், இரவு 7 மணிக்கு நாம சங்கீர்த்தனம், இசைக் கச்சேரி, ஆன்மிக சொற்பொழி நடத்தப்படுகிறது. செப்.22 முதல் அக்.1-ஆம் தேதி வடபழனி முருகன் கோயிலில் கொலுவை காலை 6.30 முதல் நண்பகல் 12.30 மணி வரை, மாலை 4.30 முதல் இரவு 9.30 மணி வரை பார்வையிடலாம். நவராத்திரி விழாவின் நிறைவு நாளான அக்.2-ஆம் தேதி, 'வித்யாரம்பம்' நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

## சென்னை ரயில்வே கோட்ட ஆர்பிஎஃப் முதுநிலை பாதுகாப்பு ஆணையர் இடமாற்றம்

**சென்னை, செப்.21:** சென்னை ரயில்வே கோட்டத்தின் ரயில்வே பாதுகாப்புப் படைப் பிரிவின் (ஆர்பிஎஃப்) முதுநிலை பாதுகாப்பு ஆணையர் பி.ராமகிருஷ்ணா பெங்களூருக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

கடந்த 2023 முதல் சென்னை ரயில்வே கோட்டத்தில் பணியாற்றி வந்த அவர், தற்போது கர்நாடக மாநிலம் பெங்களூரில் உள்ள ரயில் நிலைய கோட்ட பாதுகாப்புப் பிரிவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக தெற்கு ரயில்வே சென்னை கோட்ட தலைமையிட ரயில்வே பாதுகாப்புப் படையில் ஆணையராக உள்ள வல்லேஸ்வரராவ், ரயில்வே பாதுகாப்புப் படையின் ஆணையராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் சனிக்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார்.

## நுண்நெகிழிகளால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்கும் வழிகள்

### கால்நடை மருத்துவ பல்கலை. அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு

**சென்னை, செப். 21:** மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு உணவு மற்றும் தண்ணீர் மூலம் நுண்நெகிழிகள் மிகப்பெரிய ஆபத்தை ஏற்படுத்துவதால், இதைத் தடுப்பதற்கான வழிகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்துக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

சுற்றுச்சூழல், வனம் மற்றும் வனவிலங்குகள் தொடர்பான வழக்குகளை உயர்நீதிமன்ற நீதிபதிகள் என்.சதீஷ்குமார், டி.பரத சக்கரவர்த்தி ஆகியோர் அடங்கிய சிறப்பு அமர்வு விசாரித்து வருகிறது.

இந்த அமர்வில், உதகை, கொடைக்கானல் உள்ளிட்ட மலைப் பகுதிகளில் நெகிழிக் கழிவுகள் தொடர்பான வழக்கு விசாரணைக்கு வந்தது.

வழக்கை விசாரித்த நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு:

உதகை, அதைச் சுற்றியுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும் நெகிழிப் பொருள்கள் தாராளமாகப் பயன்படுத்தப்படுகின்றன. நெகிழிப் பொருள்களுக்கு அரசு தடை விதித்திருந்தும், நீர்நிலை, வனப்பகுதிகள் எல்லாம் நெகிழிக் கழிவுகள் நிறைந்துள்ளன.

இந்த நெகிழிக் கழிவுகள் வனவிலங்குகளின் வயிற்றுக்குள்ளும் சென்றுவிடுகின்றன. நிகழாண்டு பிப்ரவரி முதல் ஜூலை வரை கோவை மண்டல வனப்பகுதியில் மட்டும் 2 பெண் யானைகள், ஒரு மான் இறந்துள்ளன. அவற்றின் வயிற்றில் நெகிழிக் கழிவுகள் இருந்தது தெரிய வந்திருக்கிறது.

நீலகிரி வனப்பகுதி முழுவதும் உள்ள நீர்நிலைகள் நெகிழிக் கழிவுகளால் மாசடைந்துள்ளன. மேலும், கோவை பி.எஸ்.ஜி. மருத்துவ அறிவியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், குழந்தையை பிரசவிக்கும் தாயின் நஞ்சுக்கொடியை நெகிழி மாசுபடுத்தியுள்ளதாக கூறியுள்ளது.

எனவே இந்த வழக்கின் தீவிரத்தை உணர்ந்து, மத்திய, மாநில சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை செயலர்களை தாமாக முன்வந்து வழக்கின் எதிர் மனுதாரர்களாகச் சேர்த்து உத்தரவிட்டனர்.

மேலும், நெகிழி அபாயத்தில் இருந்து வனவிலங்கு மற்றும் கால்நடைகளை எவ்வாறு பாதுகாக்கலாம் என்பது தொடர்பான பரிந்துரைகளை தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகம் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும்.

குறிப்பாக, மனிதர்கள் மற்றும் விலங்குகளுக்கு உணவு மற்றும் தண்ணீர் மூலம் நுண்நெகிழிகள் மிகப்பெரிய ஆபத்தை ஏற்படுத்துவதால், இதை எதிர்காலத்தில் தடுப்பதற்கான வழிகள் என்ன? என்பது குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை வரும் அக். 10-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

## தெருநாய்களை பிடிக்கும் பணி...



தெருநாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தவும், வெறிநோய் பரவலைத் தடுக்கவும் மேற்கொள்ளப்படும் தடுப்பூசி மற்றும் கருத்தடை இயக்கத்தின் ஒருபகுதியாக சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் தெருநாய்களைப் பிடிக்கும் பணியில் ஈடுபட்ட மாநகராட்சி ஊழியர்கள்.

# சென்ட்ரல் ரயில் நிலையத்தில் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்த வேண்டும்

### ஆட்டோக்கள், இருசக்கர வாகன நெரிசலால் பயணிகள் அவதி



1. சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம். 2. விதிமீறி நிறுத்தப்படும் ஆட்டோக்களால் அவதிக்குள்ளாகும் பயணிகள். 3.விதிமீறி நிறுத்தப்படும் இருசக்கர வாகனங்கள். 4. ரயில் பயணச்சீட்டு மையத்தில் காத்திருக்கும் பயணிகள்.

**சென்னை, செப். 21:** சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் நிறுத்தப்படும் ஆட்டோக்கள், இருசக்கர வாகனங்களால் ஏற்படும் நெரிசலைக் கட்டுப்படுத்தி, பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை எழுந்துள்ளது.

தமிழகத்தின் பழைமையான ரயில் நிலையங்களில் சென்னை சென்ட்ரல் ரயில் நிலையம் முக்கியமானது. இங்கிருந்து தினமும் 100-க்கும் மேற்பட்ட விரைவு ரயில்கள், 500-க்கும் மேற்பட்ட புறநகர் மின்சார ரயில்கள் இயக்கப்படுகின்றன. தினமும் சுமார் 3 லட்சம் பேர் வந்து செல்கின்றனர். மெட்ரோ ரயில் நிலையம், பூங்கா நகர் ரயில் நிலையம், ராஜீவ் காந்தி அரசுப் பொது மருத்துவமனை, மாநகராட்சி ரிப்பன் மாளிகை என முக்கிய இடங்கள் உள்ளதால் சென்ட்ரல் ரயில் நிலையத்தில் எப்போதும் மக்கள் நெரிசல் இருந்து கொண்டே இருக்கும்.

சென்ட்ரல் நிலையத்தில் உள்ள 16 நடைமேடைகளில், 11 நடைமேடைகள் விரைவு ரயில்களுக்கும், 12 முதல் 16 வரையிலான நடைமேடைகள் புறநகர் மின்சார ரயில்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றன.

விரைவு ரயில்களுக்குச் செல்வோருக்கு, பழைய கட்டடத்தில் 6 வழிகள் உள்ளன. அங்கு பிரதான நுழைவு வாயிலில் 2, 3, 4, 5 ஆகியவை உள்ளன. ஆனால், அப்பகுதியில் பயணச்சீட்டு எடுப்பதற்கான வசதி இல்லை. ஒரே ஒரு பயணச்சீட்டு வழங்கும் இயந்திரம் இருந்தாலும் பெரும்பாலான நேரத்தில் அது செயல்படுவதில்லை.

ரயில் நிலையத்தின் இடதுபுறம் வால்டாக்ஸ் சாலை பகுதியில் முதலாவது வழியில், பயணச்சீட்டு எடுக்கும் பிரிவு உள்ளது. ஆனால், அங்கு சரக்கு லாரிகள், ஆட்டோக்கள் நிறுத்தப்படுவதால் பயணிகள் சென்று வருவதில் சிக்கல் ஏற்படுகிறது. ஆகவே, ரயில் பயணிகள் பயன்படுத்தும் போர்வைகளைச் சேமிக்கும் இடத்தில் பயணச்சீட்டு வழங்கும் பிரிவை மாற்றி அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

புறநகர் மின்சார ரயில்கள் இயங்கும் பகுதியில் பயணச்சீட்டு எடுக்கும் பிரிவும், தானியங்கி டிக்கெட் விநியோக இயந்திரமும் உள்ளன. ஆனால், விரைவு ரயில்களுக்குச் செல்வோர் இங்கு வந்து பயணச்சீட்டு பெற்றுச் செல்வதில் பல்வேறு இடர்ப்பாடுகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. இரு இடங்களில் மட்டும் பயணச்சீட்டு வழங்கும் இடங்கள் இருப்பதால், கூட்ட நெரிசலைப் பயன்படுத்தி கைப்பேசி, பணம் திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பயணிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

ரயில்கள் வருகை, புறப்பாடு குறித்து அறிவிக்கும் மின்னணு திரைகள் பயணிகள் வசதிக்கு ஏற்ப அமைக்கப்படாமல் உள்ளதாகவும் பயணிகள் கூறுகின்றனர். அத்துடன் விரைவு ரயில்கள் வருகை, புறப்பாடு பெயரளவுக்கு அறிவிக்கப்படுவதோடு, பெரும்பாலான நேரங்களில் விளம்பரமே ஒளிபரப்பப்படுவதாகவும் புகார் எழுந்துள்ளது.

ரயில் நிலையத்தில் பிரீ பெய்டு ஆட்டோ, கார் வசதி உள்ளது. ஆனால், அந்த ஆட்டோக்களில் பயணிகள் செல்ல முடியாத வகையில் 100-க்கும் மேற்பட்ட வெளி ஆட்டோ ஓட்டுநர்கள் ரயில் நிலையம் முன்பு கூடி நின்று பயணிகளைக் கட்டாயப்படுத்துகின்றனர். பிரீ பெய்டு உரிமம் 85 ஆட்டோக்களுக்கு மட்டுமே தரப்பட்டிருந்தும், அங்கும் 150-க்கும் மேற்பட்ட ஆட்டோக்கள் நிறுத்தப்படுவதாகவும் புகார் எழுந்துள்ளது.

ரயில் நிலையத்துக்கு வருவோர் புறநகர் மின்சார ரயில் பிரிவு வழியாக வந்து செல்கின்றனர். ஆனால், அங்கு ஆட்டோக்கள், இருசக்கர வாகனங்கள் ஒழுங்கற்ற முறையில் நிறுத்தப்படுவதால், அந்தப் பகுதியில் கார்கள் செல்வதில் நெரிசல் ஏற்பட்டு, பலரும் ரயிலை தவறவிடும் நிலைக்குத் தள்ளப்படுவதாகவும் தொடர்ந்து புகார்கள் தெரிவிக்கின்றனர். கட்டண வாகன நிறுத்துமிடம் மேடு - பள்ளங்களாகவும், சேறும் சகதியமாகக் காணப்படுகின்றன.

### அதிகாரிகள் பதில்

பயணிகள் கூறும் இந்த பிரச்னைகள் குறித்து சென்னை ரயில்வே கோட்ட வர்த்தகப் பிரிவு அதிகாரிகளிடம் கேட்டபோது, பயணிகளுக்கான வசதி என்ற அடிப்படையில் பயணச்சீட்டு, நடைமேடை சீட்டு வழங்கும் பிரிவுகள் உரிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. ரயில் நிலையத்துக்குள் செல்லும் அனைத்து வழிகளிலும் பயணச்சீட்டு வழங்க ஆள்கள் தேர்வு செய்யப்பட்டு நிறுத்தப்பட உள்ளனர் என்றனர்.

ஆட்டோக்கள், இருசக்கர வாகன பிரச்னை குறித்து சென்ட்ரல் ரயில் நிலையப் பாதுகாப்பு பிரிவின் ஆய்வாளர் மதுசூதன ரெட்டி கூறியது:

கடந்த ஜனவரி முதல் தற்போது வரை விதிமீறிய ஆட்டோக்கள் மீது 20,250-க்கும் மேற்பட்ட வழக்குள் பதியப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டுள்ளஸ். ரயில் நிலையம் வரும் வாகனங்கள் தனித்தனி வழியில் செல்ல தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. தற்போது ரயில் நிலையத்திற்குள் பயணிகள் வந்து செல்ல வசதியாக பல்வேறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

### புனரமைப்பு...





சென்னை கோயம்பேடு மேம்பாலத்தின் கீழ் பகுதியில் புனரமைக்கப்பட்டு வரும் பொழுதுபோக்கு பூங்கா. (வலது) தலைமை செயலகத்துக்கு எதிரே உள்ள பூங்காவில் நிறுவப்பட்டுள்ள தமிழ்நாட்டின் மாநில விலங்கான நீலகிரி வரையாடு பிரம்மாண்ட சிலை.

### இ-பதிவு குறித்த கலந்தாய்வு...



சென்னை வேப்பேரியில் காவல் துறையினருடன் இ-பதிவு குறித்த கலந்தாய்வுக் கூட்டத்தில் பேசிய பெருநகர காவல் ஆணையர் ஏ.அருண். உடன், நீதிபதிகள், காவல் துறை அதிகாரிகள்.

## தமிழகத்தில் செப்.24 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

**சென்னை, செப்.21:** தமிழகத்தில் திங்கள்கிழமை (செப்.22) முதல் செப்.24 வரை இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

இதுகுறித்துவானிலைமையம் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பு:

தென்னிந்திய கடலோர பகுதிகளில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன்காரணமாக, திங்கள்கிழமை (செப்.22) முதல் செப்.24-ஆம் தேதி வரை தமிழகத்தில் அநேக இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது.

**மழை அளவு:** தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக கடலூர் மாவட்டம் லால்பேட்டையிலும், மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடத்திலும் தலா 60 மி.மீ. மழை பதிவானது. மணல்மேடு (மயிலாடுதுறை), சீர்காழி (மயிலாடுதுறை) - தலா 50 மி.மீ., கே.எம்.கோயில் (கடலூர்), வூட்பிரையர் எஸ்டேட் (நீலகிரி), செருமுள்ளி (நீலகிரி) தலா 40 மி.மீ. மழை பதிவானது.

**மீனவர்களுக்கான எச்சரிக்கை:** தென்தமிழக கடலோரப்பகுதிகள், வடதமிழக கடலோரப் பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக் கடல், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக் கடலிலும் மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும்.

இதனால், மீனவர்கள் இப்பகுதிகளுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### திருப்பதி திருக்குடைகள் ஊர்வலம்

# வட சென்னையில் இன்று போக்குவரத்து மாற்றம்

**சென்னை, செப். 21:** சென்னையில் நடைபெறும் திருப்பதி திருக்குடைகள் ஊர்வலத்தையொட்டி, திங்கள்கிழமை (செப். 22) போக்குவரத்து மாற்றம் செய்யப்படுகிறது.

இது குறித்து சென்னை பெருநகர காவல் துறையின் போக்குவரத்துப் பிரிவு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

வடசென்னை பகுதியில் திங்கள்கிழமை (செப். 22) திருப்பதி திருக்குடைகள் ஊர்வலம் நடைபெறுகிறது. இதனால் வாகன நெரிசல் ஏற்படுவதை தவிர்க்கும் வகையிலும், பொதுமக்கள் நலன் கருதியும் போக்குவரத்து மாற்றம் செய்யப்படுகிறது.

அதன்படி அன்று காலை 8 மணி முதல் ஊர்வலம் வால்டாக்ஸ் சாலையைக் கடக்கும் வரை என்.எஸ்.சி. போஸ் சாலை, மின்ட் சாலை மற்றும் அதன் இணைப்புச் சாலைகளில் வாகனங்கள் செல்ல அனுமதி இல்லை. வாகனங்கள் ஈவெரா பெரியார் சாலை, ராஜாஜி சாலை, வால்டாக்ஸ் சாலை, பேசின் பாலம் சாலை, பிரகாசம் சாலையைப் பயன்படுத்தலாம்.

மாலை 3 மணி முதல் ஊர்வலம் யானைக்கவுனி பாலத்தைக் கடக்கும் வரை வால்டாக்ஸ் சாலை, அதன் இணைப்பு சாலைகளில் வாகனங்கள் செல்ல அனுமதி இல்லை.

அந்த வழியாக செல்ல வேண்டிய வாகனங்கள், பேசின் பாலம் சாலை, மின்ட் வழியாக பிரகாசம் சாலை, ராஜாஜி சாலையைப் பயன்படுத்தலாம். மேலும், ஈவெரா பெரியார் சாலை, முத்துசாமி சாலை, ராஜாஜி சாலைகளையும் பயன்படுத்தலாம்.

ஊர்வலம் யானைக்கவுனி பாலத்தைக் கடக்கும்போது சூளை ரவுண்டானாவிலிருந்து டெமலஸ் சாலை நோக்கிச் செல்ல வாகனங்களுக்கு அனுமதியில்லை. சூளை நெடுஞ்சாலை, ராஜா முத்தையா சாலை வழியாக செல்லலாம்.

ஊர்வலம் ராஜா முத்தையா சாலையில் செல்லும்போது மசூதி சந்திப்பில் இருந்து சூளை ரவுண்டான நோக்கி வாகனங்கள் செல்ல அனுமதியில்லை. வேப்பேரி நெடுஞ்சாலை வழியாக செல்லலாம். சூளை நெடுஞ்சாலையில் ஊர்வலம் செல்லும்போது நாரயணகுரு சாலை, ஈ.வி.கே.சம்பத் சாலை சந்திப்பிலிருந்து சூளை நெடுஞ்சாலை நோக்கி செல்ல வாகனங்களுக்கு அனுமதியில்லை. வேப்பேரி நெடுஞ்சாலை வழியாகச் செல்லலாம்.

**ஓட்டேரியில் போக்குவரத்து மாற்றம்:** அவதான பாப்பையா சாலையில் ஊர்வலம் செல்லும்போது, பெரம்பூர் பேரக்ஸ் சாலை சந்திப்பில் இருந்து சூளை நெடுஞ்சாலை நோக்கிச் செல்ல அனுமதியில்லை. பெரம்பூர் பேரக்ஸ் சாலை வழியாக வாகனங்கள் செல்லலாம். பெரம்பூர் பேரக்ஸ் சாலையில் ஊர்வலம் செல்லும்போது, டவுட்டன் சந்திப்பிலிருந்து பெரம்பூர் பேரக்ஸ் சாலை நோக்கிச் செல்ல அனுமதியில்லை. இந்த வாகனங்கள் நாரயணகுரு சாலை வழியாகச் செல்லலாம்.

ஊர்வலம் ஓட்டேரி சந்திப்பை அடையும்போது மில்லர்ஸ் சாலை சந்திப்பிலிருந்து பிரிக்ளின் சாலை வழியாக ஓட்டேரி சந்திப்பை நோக்கிச் செல்ல அனுமதியில்லை. புரசைவாக்கம் நெடுஞ்சாலை வழியாகச் செல்லலாம். ஓட்டேரி சந்திப்பில் ஊர்வலம் செல்லும்போது, கொன்னூர் நெடுஞ்சாலை மேடவாக்கம் குளம் சாலை சந்திப்பிலிருந்து ஓட்டேரி சந்திப்பை நோக்கிச் செல்ல அனுமதியில்லை. இந்த வாகனங்கள் மேடவாக்கம் குளம் சாலை வழியாகச் செல்லலாம்.

ஊர்வலம் கொன்னூர் நெடுஞ்சாலையில் உள்ள காசி விஸ்வநாதர் ஆலயம் அடையும்போது, ஓட்டேரி சந்திப்பு மற்றும் மேடவாக்கம் குளம் சாலையிலிருந்து கொன்னூர் நெடுஞ்சாலை நோக்கி செல்ல அனுமதியில்லை. இந்த வாகனங்கள் ஓட்டேரி சந்திப்பிலிருந்து குக்ஸ் சாலை வழியாகவும், மேடவாக்கம் குளம் சாலையிலிருந்து வி.பி காலனி தெரு அல்லது அயனாவரம் சாலை வழியாக செல்லலாம்.

# கிண்டி அரசு பொறியியல் கல்லூரி புதிய கட்டடங்கள் திறப்பு




சென்னை கிண்டி அரசு பொறியியல் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் புதிய கட்டடங்களை திறந்து வைத்த அமைச்சர் கோவி.செழியன். உடன், உயர்கல்வித் துறை செயலர் பொ.சங்கர், அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் ஜெ.பிரகாஷ், பொறியியல் கல்லூரி முதல்வர் பி.ஹரிஹரன், முன்னாள் மாணவர்கள் சங்கத் தலைவர் எம்.வி.ரூப்சந்தர், செயலர் ஜெ.கனகராஜ், பொருளாளர் எம்.சரவணன்.

**சென்னை, செப். 21:** சென்னை கிண்டி அரசு பொறியியல் கல்லூரியில் முன்னாள் மாணவர் சங்கத்தினர் கட்டிய பல்வேறு கட்டடங்களை உயர் கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் ஞாயிற்றுக்கிழமை திறந்துவைத்தார்.

கிண்டி அரசு பொறியியல் கல்லூரியின் முன்னாள் மாணவர் சங்கம் 1925-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு நூற்றாண்டு விழா காண்கிறது.

இதை முன்னிட்டு, அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் விவேகானந்தா அரங்கத்தில் நூற்றாண்டு விழா நடைபெற்றது. முன்னாள் மாணவர் சங்கம் சார்பில் கிண்டி பொறியியல் கல்லூரியின் முகப்பு குவிமாடத்தில் புனரமைக்கப்பட்ட கடிகாரம், ஹால் ஆஃப் ஃபேம், சிறிய திரை அரங்கம், விருந்தினர் தங்கும் அறைகள் ஆகியவற்றை கட்டித் தந்துள்ளது. இவற்றை அமைச்சர் கோவி. செழியன் திறந்து வைத்து பார்வையிட்டார்.

பின்னர், அவர் பேசியதாவது:

231 ஆண்டுகள் பழைமையானது கிண்டி பொறியியல் கல்லூரி. இந்தக் கல்லூரியில் அடுத்த 500 ஆண்டுகளுக்கு பின்னரும் பார்க்கும் வகையில் முன்னாள் மாணவர்களால் கண்காட்சி அறை உருவாக்கப்பட்டுள்ளது. புதிய கட்டடங்களை அரசோ பொது நிறுவனமோ மேற்கொள்ளவில்லை. தங்கள் உழைப்பில் பெற்ற பல கோடிகளை அளித்து முன்னாள் மாணவர்கள் சங்கத்தினர் கட்டியுள்ளனர்.

அதிலும் கடிகாரம் ஒரு மணிக்கு ஒரு முறை ஒரு திருக்குறளை வாசிக்கிறது. இது தொழில்நுட்பம் மட்டுமல்ல தங்கள் தாய்மொழியையும் திருக்குறளையும் வழங்கியுள்ளனர். இது பாராட்டுக்குரியது.

இந்த முன்னாள் மாணவர்கள் சங்கம் தமிழகத்தின் மூத்த மாணவர்கள் சங்கம்; ஒவ்வொரு துறையிலும் சாதித்த சங்கம். ரோபோகார் உருவாக்கிய முதல் மகளிர் பொறியாளர் என பல பெருமைகளைப் பெற்ற இந்தச் சங்கம் பல நூற்றாண்டுகளைக் காணவேண்டும் என்றார் அவர்.

இந்த நிகழ்ச்சியில் உயர்கல்வித் துறை செயலர் பொ.சங்கர், அண்ணா பல்கலைக்கழகப் பதிவாளர் முனைவர் ஜெ.பிரகாஷ், பொறியியல் கல்லூரி முதல்வர் பி.ஹரிஹரன், முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் எம்.வி.ரூப்சந்தர், செயலாளர் ஜெ.கனகராஜ், பொருளாளர் எம்.சரவணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# நீதித் துறையின் வருங்காலம் பெண்களுக்கானதாக அமையும்

## உச்சநீதிமன்ற நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ்

**சென்னை,செப்.21:** 'நீதித் துறை பெண்களுக்கான துறை; இத் துறையின் வருங்காலம் பெண்களுக்கானதாக அமையும்' என்று உச்சநீதிமன்ற நீதிபதி எம்.எம்.சுந்தரேஷ் தெரிவித்தார்.

பெண் வழக்குரைஞர்கள் சங்கத்தின் 62-ஆம் ஆண்டு விழா, சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த விழாவில் உச்சநீதிமன்ற நீதிபதி எம்.எம். சுந்தரேஷ் பேசியதாவது:

தமிழ் சமூகம் பெண் சார்ந்த சமூகம். நீதி என்பதே பெண்தான். இயற்கையாகவே பெண்களுக்கு வாதிடும் திறமை இருக்கும். இதனால், இயற்கையாகவே வழக்குரைஞராகும் தகுதி பெண்களுக்கு உண்டு. நீதித் துறை பெண்களுக்கான துறை.

ஒரு காலத்தில் சட்டக் கல்லூரிக்குப் படிக்க வரும் பெண்களின் எண்ணிக்கை சொற்பமானதாக இருக்கும். அந்த நிலை தற்போது இல்லை. தற்போதைய சூழலில் சட்டக் கல்லூரிகளில் 60 முதல் 70 சதவீதம் பெண்கள் படிக்கின்றனர். காலங்கள் மாறி வருகிறது. ஆகவே, நீதித் துறையின் வருங்காலம் பெண்களுக்கானதாக அமையும் என்றார்.

**உச்சநீதிமன்ற நீதிபதி ஆர்.மகாதேவன்:** தாங்கள் ஆட்சி புரிவதிலும் வல்லவர்கள் என்பதை 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நிரூபித்துக்காட்டியவர்கள் பெண்கள். அவர்கள் குடும்பத்தை மட்டுமே நிர்வகிக்கத் தெரிந்தவர்கள் எனக் கூறுவது சரித்திரப்பிழை. இந்தியாவில் நிலவிய கடுமையான போராட்டங்களை எதிர்கொண்டு முதல் பெண் வழக்குரைஞர் ஆனவர் கார்னிலியா. ஆனால், அந்த நிலை தற்போது இல்லை.

அந்த காலத்தில் ஆண்களுக்கு நிகரான வாய்ப்புகள் பெண்களுக்கு மறுக்கப்பட்டது. ஒரு சமூகம் எப்போது பெண்களை மதிக்க கற்றுக்கொள்கிறதோ, அப்போதுதான் இந்த மண்ணும் நாடும் உயரும் என்று பாடினார் மகாகவி பாரதியார். எனவே, பெண்கள் சமூக பொருளாதார, கல்வி, வேலை வாய்ப்பு என அனைத்திலும் முன்னேறி வரவேண்டும். சமூகமும் காலமும் எப்போதும் ஒன்றாக நிலைத்திருப்பது இல்லை. எனவே, பெண் வழக்குரைஞர்களின் நோக்கமும், செயல்பாடுகளும் சட்ட அறிவு சார்ந்த வாய்ப்புகளை உருவாக்கிக் கொண்டு தங்களைத் தாங்களே வாழ்வில் உயர்த்திக் கொள்ளவாக இருக்க வேண்டும் என்றார்.

**சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவாஸ்தவா:** சென்னை உயர்நீதிமன்ற பெண் வழக்குரைஞர் சங்கம்தான், நாட்டிலேயே அதிகமான பெண் வழக்குரைஞர்களைக் கொண்டிருக்கிறது. பெண்களுக்கு எதிரான கருத்து கொண்ட சிந்தனைகள் வெகுநாள்களுக்கு நீடிக்காது என்றார்.

நீதிபதிகள் ஆர்.சுரேஷ்குமார், அனிதா சுமந்த் ஆகியோர் பெண் வழக்குரைஞர்கள் சங்கத்துக்குப் பாராட்டு தெரிவித்துப் பேசினர்.

விழாவில் உயர்நீதிமன்ற நீதிபதிகள், என்.சதீஷ்குமார், ஆர்.என். மஞ்சுளா, எம்.தண்டபாணி, எம். ஜோதிராமன், கிருஷ்ணன் ராமசாமி, எஸ்.செளந்தர், என்.செந்தில் குமார் ஆகியோர் கலந்துகொண்டனர். பெண் வழக்குரைஞர்கள் சங்கத் தலைவர் என்.எஸ்.ரேவதி தலைமை வகித்தார். துணைத் தலைவர் ஆர்.ராஜலட்சுமி வரவேற்றார். செயலர் ஏ.பர்வீன் ஆண்டறிக்கையை வாசித்தார். பொருளாளர் பி.மாரியம்மாள் நன்றி கூறினார்.



சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற பெண் வழக்குரைஞர்கள் சங்கத்தின் 62-ஆவது ஆண்டு விழாவில் பங்கேற்ற உச்சநீதிமன்ற நீதிபதி எம்.எம்.சுந்தரேஷுக்கு நினைவுப் பரிசு வழங்கிய சங்கத்தின் தலைவர் என்.எஸ்.ரேவதி. உடன் (இடமிருந்து) சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி அனிதா சுமந்த், உச்சநீதிமன்ற நீதிபதி ஆர்.மகாதேவன், சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவாஸ்தவா, நீதிபதி ஆர்.சுரேஷ்குமார் உள்ளிட்டோர்.

# போட்டித் தேர்வு பயிற்றுநர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

**சென்னை, செப். 21:** சென்னைப் பல்கலைக்கழக உறுப்பு கல்லூரிகளில் போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சி வகுப்புகள் நடத்த பயிற்றுநர்கள் விண்ணப்பிக்கலாம் என சென்னை ஆட்சியர் ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

சென்னைப் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற வசதியாக சென்னை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் சார்பில் கட்டணமில்லா பயிற்சி வகுப்புகள் அந்தந்த கல்லூரி வளாகங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் போட்டித் தேர்வுகளுக்கான வகுப்புகளைக் கையாள திறமையும், அனுபவமும் மிக்க பயிற்றுநர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பயிற்றுநர்களுக்கு ஒரு மணி நேரத்துக்கு ரூ. 400 மதிப்பூதியம் வழங்கப்படும்.

தகுதியும், விருப்பமும் உள்ளவர்கள் தங்கள் சுயவிவரக் குறிப்புடன் செப்.30-ஆம் தேதிக்குள் அலுவலக வேலை நாள்களில் சென்னை கிண்டியில் உள்ள மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தை நேரில் அணுகலாம் என தெரிவித்துள்ளார்.

## தர்ப்பணம்...



மகாளய அமாவாசையையொட்டி, சென்னை மயிலாப்பூரில் ஞாயிற்றுக்கிழமை முன்னோர்களுக்கு தர்ப்பணம் செய்ய நீண்ட வரிசையில் காத்திருந்தோர்.

# மெரீனா, பெசன்ட் நகர் கடற்கரைகளில் தூய்மைப் பணி

**சென்னை,செப்.21:** சென்னை மெரீனா, பெசன்ட் நகர் உள்ளிட்ட கடற்கரைகளில் ஒருங்கிணைந்த தூய்மைப் பணி நடைபெற்றது. இதில் 1,635 கிலோ பயன்படாத பொருள்கள் சேகரிக்கப்பட்டு அகற்றப்பட்டன.

சர்வதேச கடற்கரை தூய்மை தினத்தை முன்னிட்டு, சென்னை மாநகராட்சி மற்றும் தன்னார்வ நிறுவனங்கள் இணைந்து கடற்கரைப் பகுதிகளில் சனிக்கிழமை தூய்மைப் பணி மேற்கொண்டன. மாநகராட்சி தூய்மைப் பணியாளர்கள், தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் உள்ளிட்ட 1,500-க்கும் மேற்பட்டோர் தூய்மைப் பணியில் ஈடுபட்டனர்.

இதில், 1635 கிலோ பயன்பாடற்ற பொருள்கள் சேகரிக்கப்பட்டன.



சென்னை மெரீனா கடற்கரையில் தூய்மைப் பணியில் ஈடுபட்ட தன்னார்வலர்கள்.

அவற்றில் 368 கிலோ நெகிழிப் பொருள்கள் மறு சுழற்சிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

**அயனாவரத்தில்...:** அயனாவரம் ரயில் நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தூய்மைப் பணியை தெற்கு ரயில்வே கோட்ட மேலாளர் சைந்திரசிங் தொடங்கி வைத்து மரக்கன்றுகளை நட்டுவைத்தார்.

## சாலைகளில் தேங்கும் மழைநீர்

# சீரமைப்பு பணிகளில் தூய்மைப் பணியாளர்கள்

**சென்னை, செப். 21:** சென்னையில் சாலைகளில் மழைநீர் தேங்குவதை அகற்றி வெளியேற்றும் பணியில் தூய்மைப் பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் மழைக் காலத்தில் தண்ணீர் அதிகம் தேங்கும் பகுதிகளாக 86 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அந்த இடங்களில் புதிதாக மழைநீர் வடிகால்கள் அமைத்தும், ஏற்கெனவே உள்ள மழைநீர் வடிகால்களைச் சீரமைத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனிடையே ஷெனாய் நகர், திருமங்கலம், அண்ணா நகர், எழும்பூர், கோயம்பேடு உள்ளிட்ட பகுதிகளிலும், மேலும் சில இடங்களிலும் அதிகம் தண்ணீர் தேங்கும் பகுதிகளாகக் கண்டறியப்பட்டுள்ளன. இந்தப் பகுதிகளிலும் மாநகராட்சி அதிகாரிகள் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

மேலும், பெரும்பாலான பகுதிகளில் சாலைகளில் மழைநீர் தேங்குவதால் போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. சாலை ஓரங்களில் மழைநீர் செல்வதற்கான வண்டல் மண் வடிகட்டிகளில் மண் நிரம்பி தண்ணீர் செல்லமுடியாத நிலையில் இருப்பது தெரிய வந்தது.

இதையடுத்து மாநகராட்சிப் பணியாளர்கள், கடந்த 2 நாள்களாக சாலையோரம் உள்ள மண்ணை அகற்றும் பணியிலும், வண்டல் மண் வடிகட்டிகளைச் சீரமைக்கும் பணியிலும் ஈடுபட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# செப். 25-இல் அஞ்சல் குறை கேட்பு முகாம்

**சென்னை, செப்.21:** சென்னையில் வரும் 25 -ஆம் தேதி கோட்ட அளவிலான அஞ்சல் சேவை குறைகேட்பு முகாம் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து சென்னை முதன்மை அஞ்சல் துறைத் தலைவர் நிஹாலா கா.ஷெரிப் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

சென்னை அண்ணா சாலையில் உள்ள தலைமை அஞ்சல் அலுவலகத்தில் செப்.25- ஆம் தேதி மாலை 4 மணிக்கு கோட்ட அளவிலான அஞ்சல் குறைகேட்பு முகாம் நடைபெறவுள்ளது.

இதில் வாடிக்கையாளர்கள் கலந்துகொண்டு அஞ்சல்சேவை தொடர்பான தங்களது குறைகளுக்குத் தீர்வு பெறலாம். வாடிக்கையாளர்கள் தங்கள் குறைகளை முதன்மை அஞ்சல் அதிகாரி, அண்ணா சாலை தலைமை அஞ்சல் அலுவலகம், சென்னை 600 002 என்ற முகவரிக்கு தபால் மூலம் வரும் செப். 23- ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும். புகார் அடங்கிய உறையின் மேல் பகுதியில் அஞ்சல் குறைதீர்ப்பு முகாம் என குறிப்பிட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## வரி விளம்பரம்

PUBLIC NOTICE

CHANGE OF NAME

**CHANGE OF NAME**

I, **AMY ELIZABETH** (Old Name) W/o.John Daniel C, residing at No.35, MRF Nagar, Avadi, Avadi Camp, Tiruvallur District-600054, shall henceforth be known as **AMY ELIZABETH DANIEL** (New Name)

Avadi, 20.09.2025

Amy Elizabeth

**NAME CHANGE**

I, old given Name DHANASEKARAN PONNUSAMY S/o : PONNUSAMY Date of Birth : 68, 26/6/1957 Residing Address : H5E, KRUPA COLONY, 44th Street, ASHOK NAGAR, CHENNAI - 600 083. Shall henceforth be known as New given Name : P. DHANASEKARAN

## பொது அறிவிப்பு

எமது கட்சிக்காரர், வாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சொத்து அமைவிடம்: பழைய எண். 144, புதிய எண்.181, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, மயிலாப்பூர், சென்னை- 600004 அமையப்பெற்ற RS எண்கள். 1693/4 - இதில் 4585 சதுர அடி பரப்பளவு மற்றும் RS எண். 1693/7- இதில் 3380 சதுர அடி பரப்பளவு எல்லாம் சேர்த்து மொத்தம் 7965 சதுர அடி பரப்பளவு, பிளாக் எண்.35, மயிலாப்பூர் (பகுதி-1) கிராமம், மயிலாப்பூர் வட்டம், சென்னை மாவட்டம் இதனுடன் அங்குள்ள கட்டடம் சகிதம் இது திருமதி. B.K. நளினி ஜெயந்தி க/பெ திரு. B.A.கோதண்டராம செட்டி அவர்களுக்குச் சொந்தமானது.

மேற்கூறிய சொத்து தற்போது M/s. சுந்தரம் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திடம் அடமானத்தில் உள்ளது.

யாரேனும் நபருக்கோ / நிறுவனத்துக்கோ மேற்சொன்ன சொத்தின் மீது ஏதேனும் உரிமை கோரலோ பற்றுரிமையோ இருந்தால். இந்த அறிவிப்பு நாளில் இருந்து "ஏழு நாள்களுக்குள்" தமது உரிமை கோரலை அல்லது ஆட்சேபணையை அந்த கோரலுக்கான ஆவணச் சான்றுடன் கீழே கையொப்பம் இட்டுள்ளவரிடம் தாக்கல் செய்ய வேண்டும். தவறினால் மேற்படி சொத்து மீது வேறு எந்த உரிமை கோரலோ பற்றுரிமையோ எந்த ஒரு வில்லங்கமோ இல்லை (மேற்குறிப்பிட்ட M/s. சுந்தரம் ஃபைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்திடம் இருக்கும் அடமானம் நீங்கலாக) என தீர்மானிக்கப்படுவதுடன் எமது கட்சிக்காரர் மேற்படி சொத்தை வாங்கும் நடவடிக்கையில் ஈடுபட முடியும் மேலும் அதற்குபிறகு இதுசார்ந்த எந்த உரிமை கோரல் அல்லது ஆட்சேபணைகள் தெரிந்தே விட்டுக்கொடுக்கப்பட்டதாக கருதப்பட்டு தள்ளுபடி செய்யப்படும்.

V சேஷாத்திரி & கம்பெனி
வழக்கறிஞர்கள்
T-58B, புதிய எண் 29,
32 ஆவது குறுக்குத்தெரு,
பெசண்ட் நகர், சென்னை-600090.
தொபே எண்கள்.24914001/24914002
மின்னஞ்சல்: advocateseshadri@gmail.com
21/09/2025






## இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

**எண்: ICF/EL/Cons/2025-26,** நாள்: **22.09.2025**

துணை முதன்மை மின் பொறியாளர் / பராமரிப்பு / ஷெல் / இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை அவர்கள், இந்திய குடியரசுத் தலைவர் சார்பாக, பின்வரும் பணிக்கான மின்-ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார்.

| ஒப்பந்தப்புள்ளி எண் | பணியின் பெயர் | சராசரி தொகை மதிப்பு ₹ லட்சத்தில் | முன் வைப்புத் தொகை ₹ | ஒப்பந்தப் புள்ளி மூடும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 2025245211976 | **EL-M-W-180** பட்டறை **(Shop) - 74** -ல், குடிநீர் நீர்மூழ்கி பம்புகள் (Drinking Water Submersible Pumps) மற்றும் கழிவுநீர் நீர்மூழ்கி பம்புகள் (Sewage Water Submersible Pumps) செப்பனிடுதல் | 15.36 | 30,700 | 14.10.2025, பிற்பகல் 15.30 மணி |

ஆஃபரை சமர்ப்பிப்பதற்கான இணையதளம்: www.ireps.gov.in
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கையின் இந்தி வெளியீடு **https://icf.indianrailways.gov.in** என்ற இணையதளத்தில் கிடைக்கிறது.

## சுந்தரம் மியூச்சுவல்
சுந்தரம் பைனான்ஸ் குரூப்

அறிவிப்பு – உடன் – சேர்க்கை - திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) / சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களுக்கான அறிக்கை

**வாடிக்கையாளர் பராமரிப்பு மையத்தின் முகவரி மாற்றம்:**

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டங்களுக்கான பரிவர்த்தனைகளை ஏற்றுக்கொள்ளும் அதிகாரப்பூர்வ மையமான KFIN டெக்னாலஜிஸ் லிமிடெட்டின் வாடிக்கையாளர் பராமரிப்பு மையத்தின் முகவரியில் ஏற்பட்ட மாற்றத்தை முதலீட்டாளர்கள் / யூனிட் வைத்திருப்பவர்கள் கவனத்தில் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்:

| கிளை | தற்போதுள்ள முகவரி | புதிய முகவரி | நடைமுறைப்படுத்தும் தேதி |
|---|---|---|---|
| புனே | Kfin Technologies Limited அலுவலக எண் 207-210, 2ஆம் தளம், கமலா ஆர்கேட், ஜே.எம். சாலை, பால்கந்தர்வா எதிரில், சிவாஜி நகர், புனே - 411 005. மகாராஷ்டிரா, இந்தியா. தொலைபேசி: 020 – 4603 3615 | Kfin Technologies Limited அயன் சந்திரிகா, அலுவலக எண். 14,15,16. 2ஆம் தளம், H.NO 1315, F.PL எண். 701, தாதாசாஹேப் டோர்ன் பாதை, ஜங்கிலி மஹாராஜ் சாலையில் இருந்து, சிவாஜி நகர், புனே - 411 005. மகாராஷ்டிரா இந்தியா தொலைபேசி: 020 – 4603 3615 | செப்டம்பர் 22, 2025 |

திட்டத் தகவல் ஆவணம்(கள்) / முக்கியத் தகவல் குறிப்பாணை(கள்) / கூடுதல் தகவல் அறிக்கை ஆகியவற்றின் மற்ற அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளும் மாறாமல் இருக்கும்.

இந்த இணைப்பு அவ்வப்போது திருத்தப்படும்படி சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டங்களின் திட்டத் தகவல் ஆவணம் (SID) / முக்கியத் தகவல் குறிப்பாணை (KIM) / கூடுதல் தகவல் அறிக்கை (SAI) ஆகியவற்றின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்டுக்காக,
ஆர். அஜித் குமார்
நிறுவனத்தின் செயலாளர் & கம்ப்ளையன்ஸ் ஆபீசர்

இடம்: சென்னை
தேதி: செப்டம்பர் 22, 2025

மேலும் தகவலுக்கு, தொடர்பு கொள்ளவும்:
சுந்தரம் அசெட் மேனேஜ்மென்ட் கம்பெனி லிமிடெட்
(சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டு மேலாளர்)
CIN: U93090TN1996PLC034615

கார்ப்பரேட் அலுவலகம்: 1வது & 2வது தளம், சுந்தரம் டவர்ஸ், 46, ஒயிட்ஸ் சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014.
தொடர்புக்கு: 1860 425 7237 (இந்தியா), +91 40 2345 2215 (வெளிநாடுவாழ் இந்தியர்களுக்கு)
www.sundarammutual.com
பதிவு அலுவலகம்: எண். 21, பட்டுலோஸ் சாலை, சென்னை - 600 002.

**மியூச்சுவல் ஃபண்ட் முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, திட்டம் தொடர்பான அனைத்து ஆவணங்களையும் கவனமாக படிக்கவும்.**

## ஆன்மிக சிந்தனை

குருவை பக்தியுடனும் நமஸ்காரம், அடக்கம், சேவை முதலிய வற்றுடனும் பூஜித்து, தான் அறிந்துகொள்ள வேண்டியதைப் பற்றி கேட்டுக்கொள்ள வேண்டும்.

– ஸ்ரீ சங்கரர்

நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.

சங்கீதம் 91:16

இன்னும் (இறைநம்பிக்கையாளர்களான அவர்கள் எத்தகைய வர்கள் எனில்) அவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களையும் தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளையும் பேணிக் காக்கக்கூடியவராய் இருக்கின்றார்கள்.

(அல்குர்ஆன் 23.8)

## இன்றும் நாளையும்

### திங்கள்கிழமை

(22–9–2025)

விசுவாவசு ஆண்டு, புரட்டாசி–6

பிறை: வளர்பிறை

| | |
|---|---|
| திதி | : பிரதமை பின்னிரவு 2.49 வரை பிறகு துவிதியை. |
| நட்சத்திரம் | : உத்திரம் நண்பகல் 12.25 வரை பிறகு அஸ்தம் |
| யோகம் | : சித்தயோகம் |
| ராகுகாலம் | : காலை 7.30 – 9.00 மணி. |
| எமகண்டம் | : காலை 10.30 – 12.00 மணி. |
| சூலம் | : கிழக்கு. |
| நல்ல நேரம் | : காலை 6 – 7 மணி. மாலை 3 – 4 மணி |

**இன்றைய விசேஷம்:** தௌஹத்ர பிரதமை. நவராத்திர பூஜை ஆரம்பம். சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதியம்மன் புஷ்பப் பாவாடை தரிசனம். திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாளுக்கு அலங்கார திருமஞ்சன சேவை. சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பாள் மஹா அபிஷேகக் காட்சி. கீழ்த்திருப்பதி ஸ்ரீ கோவிந்தராஜப் பெருமாள் சந்நிதியில் ஸ்ரீ கருடாழ்வாருக்குத் திருமஞ்சன சேவை. திருவிடைமருதூர் ஸ்ரீ பிருகத்சுந்தர குசாம்பாள் சமேத ஸ்ரீ மஹாலிங்க சுவாமி, திருமயிலை ஸ்ரீ கற்பகாம்பாள் சமேத ஸ்ரீ கபாலீஸ்வரர், திருவான்மியூர் ஸ்ரீ திரிபுரசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ மருந்தீஸ்வரர், பெசன்ட்நகர் ஸ்ரீ ரத்தினகிரீஸ்வரர் தலங்களில் காலை சிறப்பு சோமவார அபிஷேகம். திருநெல்வேலி ஸ்ரீ நெல்லையப்பர் கொலு தர்பார் காட்சி. நத்தம் வரகுணவல்லித் தாயார் சமேத ஸ்ரீ விஜயாசனப் பெருமாள் காலை அலங்கார திருமஞ்சனம். திருச்சேறை ஸ்ரீ சாரநாதர் புறப்பாடு. கோவில்பட்டி ஸ்ரீ செண்பகவல்லி அம்பாள் சமேத ஸ்ரீ பூவண்ணநாதர் காலை பால் அபிஷேகம்.

| | |
|---|---|
| மேஷம் | பக்தி |
| ரிஷபம் | ஓய்வு |
| மிதுனம் | பணிவு |
| கடகம் | சிந்தனை |
| சிம்மம் | உறுதி |
| கன்னி | முயற்சி |
| துலாம் | ஊக்கம் |
| விருச்சிகம் | நன்மை |
| தனுசு | பாசம் |
| மகரம் | விருத்தி |
| கும்பம் | தெளிவு |
| மீனம் | லாபம் |

### செவ்வாய்க்கிழமை

(23–9–2025)

விசுவாவசு ஆண்டு, புரட்டாசி–7

பிறை: வளர்பிறை

| | |
|---|---|
| திதி | : துவிதியை மறுநாள் விடியற்காலை 4.19 வரை பிறகு திருதியை |
| நட்சத்திரம் | : அஸ்தம் பிற்பகல் 2.17 வரை பிறகு சித்திரை |
| யோகம் | : சித்தயோகம் |
| ராகுகாலம் | : பிற்பகல் 3.00 – 4.30 மணி. |
| எமகண்டம் | : காலை 9.00 – 10.30 மணி. |
| சூலம் | : வடக்கு. |
| நல்ல நேரம் | : காலை 8 – 9 மணி. மாலை 5 – 6 மணி |

**இன்றைய விசேஷம்:** சந்திர தரிசனம். நவராத்திரி ஆரம்பம். மதுரை மீனாட்சி அம்மன் கொலுமண்டபத்தில் ராஜராஜேஸ்வரி அலங்காரம். குலசேகரப்பட்டினம் ஸ்ரீ முத்தாரம்மன் சிம்ம வாகனத்தில் துர்கை அலங்காரத்தில் காட்சி. சுவாமிமலை முருகப் பெருமான் பேராயிரம் கொண்ட தங்கப்பூமாலை சூடியருளல். திருத்தணி, திருப்போரூர், வடபழனி, குன்றத்தூர், கந்தகோட்டம், வல்லக்கோட்டை முருகர் தலங்களில் அபிஷேகம், அலங்காரம். சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதியம்மன் வெள்ளிப் பாவாடை தரிசனம். திருநறையூர் ஸ்ரீ சித்தநாதீசுவரர் திருக்கோயிலில் ஸ்ரீ சண்முகருக்கு சத்ரு, சம்ஹார அர்ச்சனை. ஆறுமுகமங்கலம் ஸ்ரீ ஆயிரத்தொன்று விநாயகர் காலை சிறப்பு அபிஷேகம். ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள் ரங்கமன்னார் கண்ணாடி மாளிகைக்கு எழுந்தருளல். திருநெல்வேலி சமீபம் 3–ஆம் நவதிருப்பதி செவ்வாய் பகவானுக்குரிய தலமான ஸ்ரீ குமுதவல்லித் தாயார் சமேத வைத்தமாநிதிப் பெருமாள் கோயிலில் திருமஞ்சன சேவை.

| | |
|---|---|
| மேஷம் | பொறுமை |
| ரிஷபம் | ஆசை |
| மிதுனம் | உயர்வு |
| கடகம் | தெளிவு |
| சிம்மம் | கவனம் |
| கன்னி | செலவு |
| துலாம் | மகிழ்ச்சி |
| விருச்சிகம் | உழைப்பு |
| தனுசு | மாற்றம் |
| மகரம் | வெற்றி |
| கும்பம் | பாராட்டு |
| மீனம் | வரவு |

# பணத்தை திரும்பக் கேட்டு 6 பேர் கடத்தல்: 2 பேர் கைது

**சென்னை, செப். 21:** ஆன்லைன் வியாபாரத்துக்காகக் கொடுத்த பணத்தைத் திரும்பக் கேட்டு 6 பேரைக் கடத்திச் சென்ற இருவரை போலீஸார் கைது செய்தனர்.

சென்னை பழைய வண்ணாரப்பேட்டை, சுப்புராயன் தெருவைச் சேர்ந்தவர் தேசிகமூர்த்தி (50). இவர், ஆயிரம் விளக்கு பகுதியில் ரியல் எஸ்டேட் அலுவலகம் நடத்தி வருகிறார். கடந்த 18–ஆம் தேதி அலுவலகத்துக்குச் சென்ற தேசிகமூர்த்தி மற்றும் அவருடன் பணியாற்றும் 5 பேர் இரவு நீண்ட நேரமாகியும் வீடு திரும்பில்லை.

இந்த நிலையில், தேசிகமூர்த்தியின் மகன் பரத் கைப்பேசிக்கு சனிக்கிழமை காலை வந்த அழைப்பில் பேசிய மர்ம நபர் ஒருவர் தேசிகமூர்த்தியை தாங்கள் கடத்தி வைத்திருப்பதாகவும், ரூ.5 லட்சம் கொடுத்தால் அவரை விடுவிப்பதாகவும் கூறியுள்ளனர்.

இதுகுறித்து பரத் அளித்த புகாரின்பேரில், தண்டையார்பேட்டை போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரணை நடத்தி தேசிகமூர்த்தியின் கைப்பேசி எண் மூலம் அவரைக் கடத்தி வைத்திருந்த இடத்தைக் கண்டறிந்தனர்.

அங்கு சென்ற போலீஸார், தேசிகமூர்த்தி உள்ளிட்ட 6 பேரை மீட்டு, அவர்களை கடத்தி சென்ற புளியந்தோப்பு பகுதியைச் சேர்ந்த அருண்குமார் (36), வியாசர்பாடியைச் சேர்ந்த பார்த்திபன் (55) ஆகிய இருவரையும் கைது செய்தனர்.

விசாரணையில், தேசிகமூர்த்தியிடம் ஆன்லைன் வியாபாரம் தொடர்பாக அருண்குமார் மற்றும் பார்த்திபன் உள்ளிட்டோர் பணம் கொடுத்துள்ளனர். அதைத் திரும்பக் கொடுக்காமல் ஏமாற்றியதால் அருண்குமார், பார்த்திபன் ஆகியோர் கடத்தலில் ஈடுபட்டது தெரியவந்தது.

## இன்றைய நிகழ்ச்சிகள்

**நவராத்திரி கொலு 2025 நிகழ்ச்சி:** ஆளுநர் ஆர்.என்.ரவி, லட்சுமி ரவி உள்ளிட்டோர் பங்கேற்பு, பாரதியார் மண்டபம், ஆளுநர் மாளிகை, மாலை 5.

**மக்கள் நல்வாழ்வுத் துறை – கிராம சுகாதார செவிலியர், துணை செவிலியர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கும் நிகழ்ச்சி:** முதல்வர் மு.க.ஸ்டாலின் பங்கேற்பு, கலைவாணர் அரங்கம், வாலாஜா சாலை, திருவல்லிக்கேணி, காலை 10.

**ஸ்ரீ கீதா பவன் அறக்கட்டளை – 101 செயற்கை கால்கள் இலவசமாக வழங்கும் நிகழ்ச்சி:** மாற்றுத்திறனாளிகள் நலத் துறை ஆணையர் எம்.லட்சுமி பங்கேற்பு, கீதா பவன் அரங்கம், அவ்வை சண்முகம் சாலை, கோபாலபுரம், பிற்பகல் 3.45.

**திருப்பதி திருக்குடை ஊர்வலம் :** உடுப்பி பலிமார் மடம் பீடாதிபதி ஸ்ரீ வித்யாதீஷ தீர்த்தரு சுவாமிகள் பங்கேற்பு, சென்னகேசவ பெருமாள் கோயில், பூக்கடை, காலை 10.30.

**நவராத்திரி திருவிழா– ஸ்ரீ சக்ர நாட்டியாலயா நுண்கலைப் பள்ளி மாணவிகள் வழங்கும் பரத நாட்டியம்:** ஸ்ரீ சாயி விவேகானந்தா வித்யாலயா மேல்நிலைப் பள்ளி, 6–ஆவது பிரதான சாலை, முத்தமிழ் நகர், மாலை 6.

**இந்திய சமூக நீதி இயக்கம் - பேராயர் எஸ்ரா சற்குணத்தின் முதலாம் ஆண்டு நினைவு நாள் நிகழ்ச்சி:** இசிஐ ஹோப் கதீட்ரல், ராஜாஜி நகர், வில்லிவாக்கம், மாலை 4 .

**ஆசிய இதழியல் கல்லூரி – ஆரண்யா சஹாய் இயக்கிய ‘ஹியூமன்ஸ் இன் தி லூப்’ திரைப்படம் திரையிடல்:** ஆசிய இதழியல் கல்லூரி , சிஐடி வளாகம், தரமணி, மாலை 4.15.

**அருள்மிகு வடபழனி ஆண்டவர் திருக்கோயில் - சக்தி கொலு:** அம்மன் கொலு மண்டபத்தில் சிறப்பு பூஜை மற்றும் தீபாராதனை, காலை 11; நிருத்யார்ப்பணம் நடனப்பள்ளி மாணவிகள் பரதநாட்டியம், மாலை 6.

## 108 வீணை இசை நிகழ்ச்சி...



நாரத கான சபா அறக்கட்டளை, பாரத இளங்கோ பவுண்டேஷன், கலாகேந்திரா ஆகிய அமைப்புகள் இணைந்து டி.டி.கே.சாலை நாரத கான சபா அரங்கில் ஞாயிற்றுக்கிழமை நடத்திய 108 வீணை இசைக் கலைஞர்களின் வீணை நாதாஞ்சலி சிறப்பு இசை நிகழ்ச்சி.

# இருசக்கர வாகனம் மீது லாரி மோதல்: போக்குவரத்துக் காவலர் உயிரிழப்பு

**சென்னை, செப். 21:** லாரி மோதியதில் இருசக்கர வாகனத்தில் சென்ற போக்குவரத்துக் காவலர் உயிரிழந்த சம்பவம் குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

மாதவரம் போக்குவரத்துப் பிரிவில் முதல்நிலைக் காவலராகப் பணியாற்றி வந்தவர் ரவிக்குமார் (50). இவர், சனிக்கிழமை பணியை முடித்துவிட்டு இருசக்கர வாகனத்தில், மாதவரம் காவலர் குடியிருப்பிலுள்ள தனது வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தார்.

அவர், ரெட்டேரி அருகே வந்தபோது, அந்த வழியாக சென்றுகொண்டிருந்த கண்டெய்னர் லாரி ரவிக்குமாரின் இருசக்கர வாகனம் மீது மோதியது.

இதில் தடுமாறி லாரியின் அடியில் சிக்கிய ரவிக்குமாரின் கால்கள் மீது லாரி ஏறி இறங்கியுள்ளது.

இதில், பலத்த காயமடைந்த அவரை அக்கம் பக்கத்தினர் மீட்டு அருகிலுள்ள தனியார் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தனர். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி ஞாயிற்றுக்கிழமை அவர் உயிரிழந்தார்.

இது குறித்து மாதவரம் போக்குவரத்துப் புலனாய்வுப் பிரிவு போலீஸார் வழக்குப் பதிவு செய்து கண்டெய்னர் லாரி ஓட்டுநர் பிகார் மாநிலத்தைச் சேர்ந்த ரமேஷ்ஷா (52) என்பவரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# கடல்சார் பல்கலை. முன்னாள் துணைவேந்தருக்கு எதிரான நடவடிக்கையை ரத்து செய்து உத்தரவு

**சென்னை, செப். 21:** இந்திய கடல்சார் பல்கலை. முன்னாள் துணைவேந்தருக்கு எதிராக பல்கலைக்கழக நிர்வாகம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்த தனி நீதிபதியின் உத்தரவை உறுதி செய்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

சென்னையில் உள்ள இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர் பி.விஜயன். கடந்த 2008–ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட அவரது மூன்றாண்டு பதவிக்காலம், கடந்த 2011–ஆம் ஆண்டு நவ.19–ஆம் தேதியுடன் முடிவடைந்தது. அதற்கு அடுத்த நாளே, அந்தப் பல்கலை. வளாக இயக்குநராக அவர் நியமிக்கப்பட்டார். அவர் துணைவேந்தருக்கான வசதிகளை தொடர்ந்து முறைகேடாக பயன்படுத்தி வந்தார்.

இதனால், பல்கலை.க்கு ரூ.22.65 லட்சம் இழப்பு ஏற்பட்டது. எனவே, அந்தத் தொகையை அபராதத் தொகையாக திரும்பச் செலுத்த வேண்டும் என்று பி.விஜயனுக்கு பல்கலை. நிர்வாகம் உத்தரவிட்டது. மேலும், துறை ரீதியான விசாரணை நடத்திய பல்கலைக்கழகம் அவரை பணிநீக்கம் செய்து உத்தரவிட்டது.

இந்த உத்தரவை எதிர்த்து பி.விஜயன் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

வழக்கைவிசாரித்த உயர்நீதிமன்ற தனிநீதிபதி, மனுதாரர் துணைவேந்தர் பதவிக்கு முந்தைய பணிக்காலத்தில் நிகழ்ந்ததாகக் கூறப்படும் சொத்துக் குவிப்பு குற்றச்சாட்டைச் சுட்டிக்காட்டி பணிநீக்கம் செய்த பல்கலை.யின் உத்தரவு சட்டவிரோதம்.

வளாக இயக்குநராகப் பதவியேற்ற பின்னர், துணைவேந்தருக்கான சலுகைகளைப் பயன்படுத்தி உள்ளதாகக் கூறி ரூ.22.65 லட்சம் அபராதம் விதித்திருப்பதும் ஏற்புடையது அல்ல.

எனவே, பல்கலை.யின் இரு உத்தரவுகளும் செல்லாது எனக்கூறி, அந்த உத்தரவுகளை ரத்து செய்து கடந்த 2022–ஆம் ஆண்டு உத்தரவிட்டார்.

இந்த உத்தரவை எதிர்த்து பல்கலை. நிர்வாகக் குழு தரப்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜெ.நிஷாபானு, எம்.ஜோதிராமன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, பல்கலை. தரப்பில் மூத்த வழக்குரைஞர் ஆர். சங்கரநாராயணன், பி.விஜயன் தரப்பில் மூத்த வழக்குரைஞர் ஆர்.விடுதலை மற்றும் மத்திய கப்பல் போக்குவரத்து துறை தரப்பில் சிறப்பு வழக்குரைஞர் ஜி.இளங்கோவன் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், பி.விஜயனின் முந்தைய பணிக்கால குற்றச்சாட்டுக்காக, தற்போதைய பணிக்காலத்தில் நடவடிக்கை எடுக்க முடியாது. பதவிக்காலம் முடிந்து அந்தப் பதவிக்கான வசதிகளை அப்போதே திரும்பப் பெற்றிருக்க வேண்டும். அதைவிடுத்து அவரைப் பணிநீக்கம் செய்து அவரிடமிருந்து அபராதத் தொகை செலுத்த வேண்டும் என கோர முடியாது. இந்த வழக்கில் தனி நீதிபதியின் உத்தரவை உறுதி செய்து, கடல்சார் பல்கலைக்கழகத்தின் மேல்முறையீட்டு வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# எஸ்பிஐயின் 14 புதிய கிளைகள் திறப்பு




பாரத ஸ்டேட் வங்கியின் சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ் சென்னை தலைமை அலுவலகத்தில் 30 அரசு தொடக்கப் பள்ளிகளை மேம்படுத்துவதற்காக ரூ.1.49 கோடிக்கான காசோலையை நம்ம ஸ்கூல் அறக்கட்டளை உறுப்பினர் செயலர் ஆர்.சுதனிடம் வழங்கிய வங்கித் தலைவர் சல்லா ஸ்ரீனிவாஸுலு செட்டி. உடன் நிர்வாகிகள்.

**சென்னை, செப். 21:** தமிழகத்தில் பாரத ஸ்டேட் வங்கி தனது வங்கிச் சேவையை வலிமைப்படுத்தும் விதமாக புதிதாக 14 கிளைகளைத் திறந்துள்ளது.

இதன் திறப்பு விழா செப். 19 – ஆம் தேதி சென்னையில் நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட வங்கித் தலைவர் சல்லா ஸ்ரீனிவாஸுலு செட்டி புதிய வங்கி கிளைகளை காணொலி வாயிலாக திறந்து வைத்தார். மேலும், 2 வீட்டுக் கடன் மையங்கள், 2 நவீன கிராமிய சுயதொழில் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் ஒரு சிறப்பு நாணய மேலாண்மை கிளை ஆகியவற்றையும் அவர் திறந்து வைத்தார்.

தொடர்ந்து தமிழகம் முழுவதும் உள்ள 30 அரசு தொடக்கப் பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்காக, வங்கியின் சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தின் கீழ், நம்ம பள்ளி அறக்கட்டளையின் உறுப்பினர் செயலர் சுதனிடம் ரூ.1.47 கோடிக்கான காசோலையை அவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் எஸ்பிஐ தலைவர் சல்லா ஸ்ரீனிவாஸுலு செட்டி பேசியது: எஸ்பிஐ 22,980–க்கும் மேற்பட்ட கிளைகளைக் கொண்ட இந்தியாவின் மிகப்பெரிய வங்கியாக உள்ளது.

வங்கி சேவை அனைத்து மக்களுக்கும் எளிதாக கிடைக்கு வகையில் வங்கி இல்லாத பகுதிகளில் புதிய கிளைகளைத் திறக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது என்றார்.

# நகை, பணம் திருட்டு: 3 பேர் கைது

**சென்னை, செப். 21:** வீட்டின் பீரோவை உடைத்து இரண்டரை பவுன் நகைகள் மற்றும் பணத்தைத் திருடிச் சென்ற சிறார்கள் உள்பட 3 பேரை போலீஸார் கைது செய்தனர்.

சென்னை ஆயிரம்விளக்கு பகுதியைச் சேர்ந்தவர் மீனாட்சி (42). இவர் சனிக்கிழமை காலை தனது வீட்டைப் பூட்டிவிட்டு வெளியே சென்றார். பின்னர், மாலையில் வந்து பார்த்தபோது வீட்டின் ஜன்னல் கம்பி வளைக்கப்பட்டிருந்ததுடன், வீட்டின் உள்ளே இருந்த பீரோவை உடைத்து, இரண்டரை பவுன் நகை மற்றும் ரூ.35,000 திருடப்பட்டிருந்தது தெரிய வந்தது.

இது குறித்து மீனாட்சி அளித்த புகாரின்பேரில், ஆயிரம்விளக்கு போலீஸார் வழக்குப் பதிந்து விசாரணை நடத்தினர்.

இதில், ஆயிரம்விளக்கு சுதந்திரா நகர் பகுதியைச் சேர்ந்த ஜீவா (20) மற்றும் 16 வயதுடைய 2 சிறுவர்கள் திருட்டில் ஈடுபட்டது தெரிய வந்தது. இதையடுத்து அவர்கள் 3 பேரையும் கைது செய்து நகை, பணத்தை போலீஸார் பறிமுதல் செய்தனர்.

# ‘சென்னை ஒன்’ செயலியில் தொலைதூர முன்பதிவு வசதி வேண்டும்

## ஆம்னி பேருந்து உரிமையாளர்கள்

**சென்னை, செப். 21:** ‘சென்னை ஒன்’ செயலியை தொலைதூரம் முன்பதிவு செய்யும் செயலிகளுடன் இணைக்க வேண்டும் என ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து அனைத்து ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அ.அன்பழகன் வெளியிட்ட அறிக்கை:

சென்னையில் தொடங்கப்பட்டுள்ள ‘சென்னை ஒன்’ செயலி மூலம் மாநகர் பேருந்து, மின்சார ரயில், மெட்ரோ ரயில், ஆட்டோ உள்ளிட்ட பொதுபோக்குவரத்துகளில் பயணிக்கும் திட்டம் பொதுமக்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால், இந்தச் செயலியில் ஆம்னி பேருந்து மற்றும் அரசுப் பேருந்துகளில் பயணிகள் முன்பதிவு செய்து பயணிக்கும் வசதி உருவாக்கப்படவில்லை. இதனால், ‘சென்னை ஒன்’ செயலியை, அரசுப் பேருந்து முன்பதிவு தளமான www.tnstc.in மற்றும் ஆம்னி பேருந்து முன்பதிவுக்கான செயலிகளுடன் இணைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு இணைக்கப்பட்டால், தினசரி பல்லாயிரக்கணக்கான பயணிகள் பயனடைவார்கள். அவர்களின் பயண அனுபவம் மேலும் எளிதாகும் எனத் தெரிவித்துள்ளார்.

# சென்னையில் அக்டோபரில் தூய்மைப் பணியாளர்கள் மாநாடு

**சென்னை, செப். 21:** உழைப்போர் உரிமை இயக்கம் சார்பில் வரும் அக்டோபரில் சென்னையில் தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கை மாநாடு மற்றும் கருத்தரங்கம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து உழைப்போர் உரிமை இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கை: உழைப்போர் உரிமை இயக்கம் சார்பில் சென்னை மாநகராட்சி மண்டலம் 5, 6 ஆகியவற்றின் தூய்மைப் பணியாளர்கள் (என்யூ எல்எம்) பங்கேற்ற ஆலோசனைக் கூட்டம் அம்பத்தூரில் அண்மையில் நடைபெற்றது.

இதில் அமைப்பின் தலைவர் வழக்குரைஞர் கு.பாரதி, வழக்குரைஞர் செயலர் கே.சுரேஷ் மற்றும் ஆலோசகர் வழக்குரைஞர் எஸ். குமாரசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில், சென்னை மாநகராட்சி ராயபுரம், திரு.வி.க. நகர் (5, 6) மண்டல தூய்மைப் பணியாளர்கள் பிரச்னையில் தமிழக அரசும், தொழிலாளர் நலத்துறையும் நேரடியாக தலையிட்டு தீர்வு காணவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

மண்டலம் 4, 7 ஆகிய பகுதிகளிலும் தூய்மைப் பணியாளர்கள் பிரச்னை குறித்து ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தவும், வரும் அக்டோபர் 3, 4, 5 ஆகிய தேதிகளில் சென்னையில் உழைப்போர் உரிமை இயக்கம் சார்பில் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்து கோரிக்கை மாநாடு மற்றும் கருத்தரங்கம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

மேலும், கோரிக்கைகளை பொதுமக்களுக்குத் தெரியப்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்து பிரசாரம் மேற்கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

அக்டோபர் முதல் வாரத்தில் தூய்மைப் பணியாளர்களுக்கு பொதுமக்கள் மளிகைப் பொருள்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஸ்ரீ ராமச்சந்திராவில் நிறுவனர் தின விழா




சென்னை ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் சனிக்கிழமை நடைபெற்ற நிறுவனர் மற்றும் பல்கலைக்கழக தின விழாவில் மகப்பேறு மருத்துவத் துறை பேராசிரியர் டாக்டர் ஜி.உஷா ராணிக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கிய வேந்தர் வி.ஆர்.வெங்கடாசலம்.

**சென்னை, செப். 21:** சென்னை போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் நிறுவனர் தின விழாவில் பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கியவர்கள், நீண்ட காலம் பணியாற்றியவர்களுக்கு விருதுகள், ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

போரூரில் உள்ள ஸ்ரீ ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தில் நிறுவனர் தினம், பல்கலைக்கழக தின விழா சனிக்கிழமை நடைபெற்றது.

விழாவில் எம்பிபிஎஸ் படிப்பில் சிறந்து விளங்கிய பி.ஆர். வீணா, டாக்டர் வி.சஞ்சனா ஆகியோருக்கு தலா 3 தங்கப் பதக்கங்கள் வழங்கப்பட்டன.

மொத்தம் 33 மாணவர்களுக்கு தங்கப் பதக்கங்களும், 67 மாணவர்களுக்கு ரொக்கப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

துணைவேந்தர் டாக்டர் உமா சேகர், மகப்பேறு மருத்துவத் துறை பேராசிரியர் ஜி.உஷா ராணி ஆகியோருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதும், கதிரியக்கவியல் துறை பேராசிரியர் பி.எம். வெங்கட் சாய்க்கு சிறந்த மாணவர் வழிகாட்டி விருதும், உடற்கூறியல் துறை உதவியாளர்களுக்கு சிறந்த சேவைக்கான விருதுகளும் வழங்கப்பட்டன.

இதுதவிர தொழில் நுட்ப சிறப்பு சேவை விருதுகள், சிறந்த விளையாட்டு வீரர் விருது, நீண்ட காலம் பணியாற்றிய 333 பணியாளர்களுக்கு தங்கப் பதக்கம், ரொக்கப்பரிசு ஆகியவை வழங்கப்பட்டன.

விழாவில் சிறந்த ஆசிரியர்கள், மாணவர்கள், செவிலியர்களுக்கான விருதுகளை நிறுவனத்தின் வேந்தர் வி.ஆர்.வெங்கடாசலம், இணைவேந்தர் ஆர்.வி.செங்குட்டுவன், மருத்துவ அறக்கட்டளை அறங்காவலர் சம்யுக்தா வெங்கடாசலம் ஆகியோர் வழங்கினர்.

இதில் நிறுவன வேந்தர் என்.பி.வி.ராமசாமி உடையாருக்கு இதய நலத்துறை தலைவர் மற்றும் முன்னாள் துணைவேந்தர் டாக்டர் எஸ்.தணிகாசலம் நினைவஞ்சலி செலுத்தினார். முன்னதாக துணைவேந்தர் டாக்டர் உமா சேகர் வரவேற்றார்.

# கல்லூரியில் புரிந்துணர்வு ஒப்பந்தம்




புரிந்துணர்வு ஒப்பந்தம் பரிமாற்ற நிகழ்வில் பங்கேற்ற எத்தியோப்பியா வோல்டியா பல்கலை. வேந்தர் அபேப் கிர்மா, துணைவேந்தர் மார்யே பெலேட், பேராசிரியர் பிரின்ஸ் தாமஸ், நியூபிரின்ஸ் கல்விக் குழுமத் தலைவர் லோகநாதன், துணைத் தலைவர் எல்.நவீன் பிரசாத், கல்லூரி முதல்வர் டி.சரவணன்.

**தாம்பரம், செப். 21:** மேடவாக்கம் நியூ பிரின்ஸ் ஸ்ரீபவானி பொறியியல் கல்லூரியும், எத்தியோப்பியா நாட்டின் வோல்டியா பல்கலைக் கழகமும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளும் நிகழ்வு சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் வோல்டியா பல்கலைக்கழகத்தின் வேந்தர் அபேப் கிர்மா, நியூ பிரின்ஸ் ஸ்ரீபவானி பொறியியல் கல்லூரித் தலைவர் கே.லோகநாதன் ஆகியோர் கையொப்பமிட்டு பரிமாறிக் கொண்டனர்.

இதையடுத்து, இருவரும் இணைந்து செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், இரு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ–மாணவிகள், பேராசிரியர்கள் பரிமாற்றம், கணினி தொழில் நுட்பங்கள் தொடர்பான கூட்டு ஆராய்ச்சி உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ள இந்த புரிந்துணர்வு துணைபுரியும் என்றனர்.

நிகழ்வில் எத்தியோப்பியா நாட்டின் வோல்டியா பல்கலைக் கழகத் துணைவேந்தர் மார்யே பெலேட், பேராசிரியர் பிரின்ஸ் தாமஸ், நியூ பிரின்ஸ் கல்விக் குழுமத் துணைத் தலைவர் எல். நவீன் பிரசாத், கல்லூரி முதல்வர் டி.சரவணன், ஒருங்கிணைப்பாளர் என்.எஸ்.செந்தூர் மற்றும் கல்லூரி துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# மறைந்த நடிகர் எம்.ஆர்.ராதா மனைவி கீதா ராதா காலமானார்



**சென்னை, செப். 21:** மறைந்த நடிகர் எம்.ஆர்.ராதாவின் மனைவியும், நடிகை ராதிகாவின் தாயாருமான கீதா ராதா (86) வயது முதிர்வு காரணமாக ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அவரது உடல் இறுதி மரியாதை செலுத்துவதற்காக சென்னை போயஸ் கார்டன் பின்னி சாலையில் உள்ள மான சரோவர்குடியிருப்பு இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. இறுதிச் சடங்கு திங்கள்கிழமை (செப். 22) மாலை4.30மணிக்குமேல் பெசன்ட் நகர் மின் மயானத்தில் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இஸ்லாமியர்களின் உரிமைகளைக் காக்கும் இயக்கம் திமுக

**முதல்வர் மு.க.ஸ்டாலின்**




சென்னை கலைவாணர் அரங்கில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நபிகள் நாயகத்தின் 1,500-ஆவது பிறந்த நாள் விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நினைவுப் பரிசு வழங்கிய விழாக் குழுவினர். உடன், அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, சா.மு.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, திமுக இலக்கிய அணித் தலைவர் அன்வர் ராஜா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சி தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்எல்ஏ, மனித நேய ஜனநாயக கட்சித் தலைவர் தமிமுன் அன்சாரி, எஸ்டிபிஐ கட்சித் தலைவர் நெல்லை முபாரக், தலைமை காஜி முகமது அக்பர், தமிழ்நாடு உலமா சபை தலைவர் காஜா முயீனுத்தீன் பாகவி.

**சென்னை, செப். 21:** இஸ்லாமிய மக்களுக்கு துணைநிற்கும் இயக்கமாகவும், உரிமைகளைக் காக்கும் இயக்கமாகவும் திமுக எப்போதும் இருக்கும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

நபிகள் நாயகத்தின் 1,500-ஆவது பிறந்த நாள் விழா நிகழ்வு சென்னை கலைவாணர் அரங்கில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் பங்கேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

மதம் என்பதை நிறுவனமாகப் பார்க்காமல் மார்க்கமாக பார்ப்பவர்கள் இஸ்லாமியர். அந்த மார்க்கம் அன்பு மார்க்கமாக இருக்க வேண்டும் என போதித்தவர் நபிகள் நாயகம். முன்னாள் முதல்வர்கள் அண்ணாவும், கருணாநிதியும் முதன்முதலில் சந்தித்துக்கொண்டதே திருவாரூரில் நடைபெற்ற மீலாது நபி விழாவில்தான்.

ஒட்டுமொத்த மனித சமூகத்தின் மீதும் தாக்கம் ஏற்படுத்தியவர் நபிகள் நாயகம். அதனால்தான் அவரது அன்பை பெரியார், அண்ணா, கருணாநிதி ஆகியோர் புகழ்ந்தனர்.

**காஸா துயரம்:** காஸாவில் நடத்தப்பட்டு வரும் துயரத்தைப் பார்த்து மனசாட்சியுள்ள எவரும் கவலைப்படாமல் இருக்க முடியாது. இதற்கு விரைவில் தீர்வு ஏற்பட வேண்டும். பாலஸ்தீன மக்கள் எதிர்கொள்ளும் கொடுமைகள் உடனடியாக முடிவுக்கு வர வேண்டும்.

அதற்கு இந்திய அரசு உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

1969-இல் மீலாது நபியை அரசு விடுமுறை தினமாக கருணாநிதிதான் அறிவித்தார். அதை அதிமுக ஆட்சியாளர்கள் ரத்து செய்ததும், திமுக அரசு மீண்டும் அதை நடைமுறைப்படுத்தியதும் அனைவரும் அறிந்ததே.

பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டில் இஸ்லாமியர்களுக்கு 3.5 சதவீத உள்ஒதுக்கீடு, உருது பேசும் முஸ்லிம்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் அங்கீகாரம், சிறுபான்மையினர் நல வாரியம் என இஸ்லாமிய மக்களுக்காக திமுக அரசு முன்னெடுத்த திட்டங்களை பட்டியலிட்டால் நேரம் போதாது. இஸ்லாமியர் கூட்டணி கட்சிகள் முன்வைத்திருக்கும் கோரிக்கைகள் அனைத்தையும் பரிசீலித்து உரிய நடவடிக்கைகளை தமிழக அரசு முன்னெடுக்கும்.

இஸ்லாமியர்களுக்கு இடர் என்றால் துணைநிற்கும் முதல் அரசியல் இயக்கம் திமுகதான். குடியுரிமை சட்டத் திருத்தத்துக்கு எதிராக உண்மையாக போராடியது திமுக மட்டுமே. அந்தச் சட்டத்தால் எவருக்கேனும் பாதிப்பு இருந்ததா என கேள்வி கேட்டும், போராட்டம் நடத்திய இஸ்லாமியர்களுக்கு எதிராக தடியடி நடத்தியதும் யார் என அனைவருக்கும் தெரியும்.

**அதிமுக இரட்டைவேடம்:** அதேபோன்று வக்ஃப் சட்டத் திருத்தத்தின்போது அதிமுக எவ்வாறு இரட்டை வேடம் போட்டது என்பதும் தெரியும். அதனால்தான் முன்னாள் அமைச்சர் அன்வர்ராஜா போன்றவர்கள் துரோகத்தின் கூடாரமாக இருக்கும் கட்சிகளைப் புறக்கணித்து திமுகவில் இணைந்துள்ளனர். மற்றொருமுறை திமுக முன்னெடுத்து வரும் தொடர் சட்டப் போராட்டங்களால்தான் மத்திய அரசு கொண்டு வந்த வக்ஃப் சட்டத் திருத்தங்களுக்கு உச்சநீதிமன்றத்தில் தடை உத்தரவு கிடைக்கப்பெற்றது.

**அன்பு பரவ வேண்டும்:** பாஜகவின் மலிவான அரசியலுக்கு துணைபோகிறவர்களைப் புறக்கணிக்க வேண்டும். இஸ்லாமிய மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் இயக்கமாக திமுக இருக்கும்.

நபிகள் நாயகம் போதித்த அன்பு உலகெங்கும் பரவ வேண்டும். போர்களற்ற, வன்முறையற்ற, வெறுப்புகளற்ற, ஆதிக்கமற்ற உலகம் உருவாக வேண்டும். எங்கும் நல்லிணக்கமும், அமைதியும் உருவாக வேண்டும் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, சா.மு.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, திமுக இலக்கிய அணித் தலைவர் அன்வர் ராஜா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காதர் மொகிதீன், மனிதநேய மக்கள் கட்சித் தலைவரும், சட்டப்பேரவை உறுப்பினருமான ஜவாஹிருல்லா, மனிதநேய ஜனநாயக கட்சித் தலைவர் தமிமுன் அன்சாரி, எஸ்டிபிஐ கட்சித் தலைவர் நெல்லை முபாரக், தலைமை காஜி முகமது அக்பர், தமிழ்நாடு உலமா சபை தலைவர் காஜா முயீனுத்தீன் பாகவி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# எடப்பாடி பழனிசாமியுடன் நயினார் நாகேந்திரன் சந்திப்பு



சேலம் நெடுஞ்சாலை நகரில் உள்ள முகாம் அலுவலகத்தில் அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமியை ஞாயிற்றுக்கிழமை சந்தித்த தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன். உடன், பாஜக மேலிடப் பார்வையாளர் அரவிந்த் மேனன், மாநில துணைத் தலைவர் கே.பி. ராமலிங்கம் உள்ளிட்டோர்.

**சேலம், செப். 21:** அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே. பழனிசாமியை தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் ஞாயிற்றுக்கிழமை சந்தித்துப் பேசினார்.

சேலம் நெடுஞ்சாலை நகர் இல்லத்தில் அதிமுக பொதுச்செயலர் எடப்பாடி சுமார் 1 மணி நேரம் நீடித்த இந்த சந்திப்பின்போது, பாஜக மேலிடப் பொறுப்பாளர் அரவிந்த் மேனன், மாநில துணைத் தலைவர் கே.பி.ராமலிங்கம் ஆகியோர் உடனிருந்தனர்.

பின்னர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

எடப்பாடி பழனிசாமியுடனான சந்திப்பு மரியாதை நிமித்தமானது; இதில் அரசியல் எதுவும் பேசவில்லை. அதிமுக, பாமக உள்ளிட்ட எந்தக் கட்சியின் உள்விவகாரங்களிலும் பாஜக எப்போதும் தலையிடாது. அதிமுகவிலிருந்து சிலர் விலகி சென்றதால் தேர்தலில் பின்னடைவு ஏற்படும் என்கிற கூற்றை ஏற்க முடியாது.

விஜய் பிரசாரத்தின்போது வரும் கூட்டத்தை வைத்து எதையும் கூறமுடியாது. பெரிய தலைவர்களுக்கு வந்த கூட்டமெல்லாம் வாக்குகளாக மாறவில்லை. அதேநேரம், எடப்பாடி பழனிசாமிக்காக வரும் கூட்டம் நிச்சயம் வாக்குகளாக மாறும்.

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் ஹைட்ரோ கார்பன் திட்டம் திமுக ஆட்சியில்தான் கொண்டுவரப்பட்டது. அவர்கள் அளித்த அனுமதி காரணமாக இப்போது அந்தத் திட்டம் செயல்பாட்டுக்கு வரவுள்ளது.

வரும் சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி, அக். 11-ஆம் தேதி மதுரையிலிருந்து எனது பிரசார பயணத்தைத் தொடங்கவுள்ளேன் என்றார் அவர்.

# தவெகவுக்கு அதிகரிக்கும் மக்கள் ஆதரவைக் கண்டு பலருக்கும் அச்சம்

**சென்னை, செப்.21:** தவெகவுக்குப் பெருகி வரும் மக்கள் ஆதரவைப் பார்த்து, பலருக்கும் அச்சம் ஏற்பட்டுள்ளதாக அக்கட்சியின் தலைவர் விஜய் தெரிவித்துள்ளார்.



இது குறித்து அவர் 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்ட பதிவு:

திருச்சியில், மக்கள் சந்திப்பு பிரசாரம் கடந்த செப்.13-ஆம் தேதி தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்டங்களில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சுற்றுப்பயணம், வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளது.

தவெக குறித்து ஆள்வைத்துப் பொய்யான கதையாடல்களைச் செய்தவர்கள், செய்பவர்கள், ஒவ்வொரு நாளும் மக்களிடையே நமக்குப் பெருகி வரும் அங்கீகாரத்தைக் கண்டு அஞ்சுகின்றனர்.

இந்த நடுக்கம் காரணமாகவே, நமது மக்கள் சந்திப்பு நிகழ்ச்சிக்கு அனுமதி கேட்கும்போதெல்லாம் யாருக்கும் விதிக்காத கடுமையான விதிமுறைகளை விதிக்கின்றனர்.

ஆனால், நமது கொள்கைத் தலைவர்களின் வழியில் முதன்மை சக்தியாக, உண்மையான மக்களாட்சியை அமைப்பதற்கான பணிகளை இன்னும் தீவிரப்படுத்துவோம்.

நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்ட மக்கள் அளித்த வரவேற்பும், அன்பும் நிகரில்லாதது. இவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் கடமைப்பட்டுள்ளேன். அவர்களுக்காக தவெக எதிலும் சமரசம் செய்துகொள்ளாது. கடந்த 1967 மற்றும் 1977 தேர்தல்களின் வெற்றி விளைவை, 2026 தேர்தலிலும் நிகழ்த்திக் காட்டுவோம் என அதில் விஜய் தெரிவித்துள்ளார்.

# விஜய்க்கு கூடும் கூட்டம் வாக்குகளாக மாறாது

**சென்னை, செப். 21:** தவெக தலைவர் விஜய்க்கு கூடும் கூட்டம் எல்லாம் வாக்குகளாக மாறாது என மக்கள் நீதி மய்யம் தலைவர் கமல் ஹாசன் தெரிவித்தார்.



வருகிற சட்டப் பேரவைத் தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பில் மண்டலம் வாரியாக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் சென்னை ஆர்.ஏ.புரத்தில் உள்ள முத்தமிழ் பேரவை அரங்கில் கட்சியின் தலைவர் கமல்ஹாசன் தலைமையில் நடைபெற்று வருகிறது.

ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் கமல்ஹாசன் கூறியதாவது: மக்களுக்கு சேவை செய்ய அரசியலுக்கு வரும் நடிகர்களை அரசியல்வாதியாக பார்க்காமல் நடிகரைப் பார்க்க வரும் கூட்டமாகத்தான் பார்க்கின்றனர்.

விஜய்யை பார்க்க வரும் கூட்டம் கண்டிப்பாக வாக்குகளாக மாறாது. அது எல்லா தலைவருக்கும் பொருந்தும்; எனக்கும் பொருந்தும். சட்டப் பேரவைத் தேர்தலுக்கான பணிகளை மக்கள் நீதி மய்யம் தொடங்கிவிட்டது என்றார் அவர்.

# பாமக உயர்நிலைக் குழு கூட்டம்: ராமதாஸ் பங்கேற்பு

**விழுப்புரம், செப்.21:** விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தை அடுத்துள்ள தைலாபுரம் தோட்டத்தில் பாமக நிறுவனர் ராமதாஸ் தலைமையில், பாமக உயர்நிலைக் குழு நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.



இதில், பாமக கௌரவத் தலைவர் ஜி.கே.மணி, இணை பொதுச் செயலர் இரா.அருள் எம்எல்ஏ, வன்னியர் சங்க மாநிலத் தலைவர் பு.தா.அருள்மொழி, தலைமை நிலையச் செயலர் அன்பழகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். சுமார் 2 மணி நேரத்துக்கும் மேலாக நடைபெற்ற இந்தக் கூட்டத்தில், கட்சியின் செயல் திட்ட முடிவுகள், கூட்டணி அமைப்பது, அடுத்த 3 மாதங்களில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

## 'தேர்தல் கூட்டணி – ராமதாஸே முடிவு செய்வார்'

இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற இரா.அருள் எம்எல்ஏ தைலாபுரம் தோட்ட வளாகத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

2026 சட்டப் பேரவைத் தேர்தலுக்கான பாமக கூட்டணி குறித்து மருத்துவர் ராமதாஸ்தான் முடிவு செய்வார். பாமக தொண்டர்கள் கொண்டாடும் கூட்டணி அமைக்கப்படும். கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் விரைவில் தைலாபுரத்தில் மருத்துவர் ராமதாஸை சந்திப்பார்கள்.

பாமக தலைவராக பொறுப்பு வகித்த அன்புமணி தரப்பினர் அளித்த கடிதத்தை இந்திய தேர்தல் ஆணையம் பதிவு மட்டுமே செய்துள்ளது. அவர்களுக்கு எந்த அங்கீகாரத்தையும் வழங்கவில்லை. அன்புமணி கட்சியிலிருந்து நீக்கப்பட்ட தகவல் தேர்தல் ஆணையத்திடம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

பாமக தலைவர் இரா.அன்புமணி என்று தேர்தல் ஆணையம் தெரிவிக்கவில்லை. அப்படியான தவறு நேர்ந்தால் அதையும் சந்திப்போம் என்றார் இரா. அருள். இதனிடையே, பாமகவின் இணை பொதுச் செயலரான இரா.அருள் எம்எல்ஏவை கட்சியின் தலைமை செய்தித் தொடர்பாளராக ராமதாஸ் நியமித்து ஞாயிற்றுக்கிழமை அறிவிப்பு வெளியிட்டார்.

# தேர்தலில் யார் யார் இடையே போட்டி என்பதற்கு மக்கள்தான் பதில் அளிக்க வேண்டும்

**எடப்பாடி பழனிசாமி**

**எடப்பாடி, செப். 21:** வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் யார் யார் இடையே போட்டி என்பதற்கு தமிழக மக்கள்தான் பதில் அளிக்க வேண்டும் என்று அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி கூறினார்.

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதிக்கு உள்பட்ட பல்வேறு பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை சுற்றுப்பயணம் மேற்கொண்ட அதிமுக பொதுச் செயலாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி, பொதுமக்களைச் சந்தித்து குறைகளைக் கேட்டு, கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

மாலை எடப்பாடி நெடுஞ்சாலைத் துறை சுற்றுலா மாளிகையில் நடைபெற்ற அதிமுக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்.

கூட்டம் முடிந்து வெளியே வந்த எடப்பாடி கே.பழனிசாமி செய்தியாளர்களிடம் கூறியதாவது: பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தேர்தல் பிரசார சுற்றுப்பயணம் குறித்து மட்டுமே என்னுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

தமிழகத்தில் வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தவெக-திமுகவுக்கு இடையேதான் போட்டி என்று விஜய் பேசி வருகிறார். யார் யார் இடையே போட்டி என்பதற்கு தமிழக மக்கள்தான் பதில் அளிக்க வேண்டும் என்றார்.


தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருச்சிராப்பள்ளி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

இ1/1984/2025 நாள்: 19.09.2025

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரால் திருச்சிராப்பள்ளி - CGF Savings and Interest Fund 2025-2026, 1 சமுதாய கூடம் அமைத்தல் பணி மின் ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு உறைமுறை வரவேற்கப்படுகிறது.
3. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 22.09.2025 முதல் 07.10.2025 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. நேரம் மற்றும் நாள்:
(i) மின் ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 07.10.2025, பி.ப. 3.00 மணி வரை
(ii) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 07.10.2025, பி.ப. 4.00 மணி முதல்

இணை இயக்குநர்/திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, திருச்சிராப்பள்ளி.
செ.ம.தொ.இ 5271/ஒப்பந்தப்புள்ளி/2025

GOVERNMENT OF TAMIL NADU
PROJECT DEVELOPMENT GRANT FUND (PDGF)
Sustainable Municipal Infrastructure Finance (SMIF)- Tamil Nadu – III
Tender ID: BMZ201870179/KFW512791
INVITATION FOR PROPOSAL (IFP)
Ref: TNUIFSL/PDGF/KfW-T-3/ RemoteMonitoring/Sep/2025

1. The Government of the Federal Republic of Germany through KfW Development Bank and Government of India (GoI) have agreed to provide funds under Sustainable Municipal Infrastructure Financing in Tamil Nadu Phase III (SMIF-TN III) program. Tamil Nadu Urban Infrastructure Financial Services Limited (TNUIFSL) is the project executing agency for the program.
2. In this regard, TNUIFSL managed Project Development Grant Fund (PDGF) invites Selection of firm for the services detailed below under the KfW assisted SMIF-TN III program.

| Description of Services | Bid Submission date & time | Bid Opening date & time |
|---|---|---|
| Consultancy services for Monitoring of Projects through Remote methodologies for the projects taken up under KfW assisted Sustainable Municipal Infrastructure Financing Tamil Nadu - III and Tamil Nadu Urban Development Fund (TNUDF) | 12-11-2025 upto 11.00 am | 12-11-2025 at 11.30 am |

3. The assignment is open to all eligible firms. The Request for Proposals (RFP) may be downloaded and used free of cost from the website viz. www.tnuifsl.com.
4. A pre-proposal conference will be held on 06.10.2025 at 11.00 hrs in the office of TNUIFSL, to clarify queries, if any as stated in the RFP.
5. Pre-Qualification, Technical and Financial proposals under the 'Three cover system' must be delivered in the office of TNUIFSL, on or before date mentioned in above table and Pre-Qualification proposal (Cover 1) alone will be opened on the same day, in the presence of the consultancy firms who wish to attend. If the office happens to be closed on the date of receipt of the proposals as specified, the proposals will be received and opened on the next working day at the same time and venue.
6. Any Clarifications, Minutes of Pre-proposal meeting, Extension of time and Addendum & Corrigendum issued will be uploaded only in above mentioned web site only. No new advertisement will be published in the Newspapers.
7. The information and the details received will be evaluated based on the criteria given and the firms will be selected in accordance with the procedures set out in the 'KfWs Guidelines for the Assignment of Consultants in Financial Co-operation with Developing Countries (Current Edition). Other details are available in the RFP.

DIPR/5273/TENDER/2025
Chairman & Managing Director,
TNUIFSL Fund Manager of PDGF

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

MANAPPURAM FINANCE LTD.
CIN: L65910KL1992PLC006623,
Registered Office: W - 4/ 638A, Manappuram House,
P.O. Valapad, Thrissur - 680 567, Kerala, India

தங்க நகைகள் பொது ஏலம்

நகைகளை அடமானம் வைத்திருப்போர் மற்றும் குறிப்பாக பொதுமக்களுக்கு இதன் மூலம் தெரிவிப்பது யாதெனில், கீழ்க்கண்ட கணக்குகளில் அடமானம் வைக்கப்பட்டுள்ள தங்க நகைகளுக்கான பொது ஏலம் கீழ்க்கண்ட கிளைகளில் 16.10.2025 தேதி அன்று காலை 10 மணி யில் இருந்து நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.தங்க நகைகளை மீட்க தவறிய வாடிக்கையாளர்களின் நகைகளை, அவர்களுக்கு பதிவு தபால்கள் அனுப்பிய பிறகும், நினைவுபடுத்திய பிறகும், நாங்கள் தங்க நகைகளை ஏலம் விடுகிறோம். ஏலம் போகாத தங்க நகைகளை எவ்வித முன்னறிவிப்பின்றி எந்த ஒரு இதர நாளிலும் ஏலம் விடப்படும். ஏலம் விடப்படும் இடம் அல்லது தேதியில் ஏதேனும் மாற்றங்கள் (இருந்தால்) அவை பற்றிய அறிவிப்பு ஏலம் நடக்குமிடத்தில் எழுதி வைக்கப்படும் மற்றும் இணையதளத்தில் வெளியிடப்படும்.வேறு எந்த முன்னறிவிப்பும் அளிக்கப்படாது.

அடமானங்களின் பட்டியல் :

ஆழ்வார்திருநகர், 10712070002726З, சின்மயா நகர் சென்னை 113030700021491, சிந்தாதிரிப்பேட்டை, 122200730004635, 4636, 4637, எருக்கஞ்சேரி, 123690700023568, ஐ சி எஃப் காலனி அத்திப்பேட்டை, 118140700044119, 4219, கொளத்தூர், 117300700040012, கிருஷ்ணமூர்த்தி நகர், 116260700045149, குமணன் சாவடி, 108950730014802, எம் டி எச் ரோடு வில்லிவாக்கம் சென்னை, 106390700048878, புதிய வண்ணாரப்பேட்டை, 106980700063574, வடக்கு பூங்கா வீதி அம்பத்தூர் ஓ டி கூ, 101130700770443, பாடி, 107180700041848, 107180780000119, பெரம்பூர் ஜமாலியா, 122920730016527, பவர் ஹவுஸ் கோடம்பாக்கம், 121960700016020, தாம்பரம், 100740730022689, திருநின்றவூர், 121910700045477, திரு வி க நகர், 120800730035240, வள்ளுவர் சாலை ராமபுரம், 127080730037858, வேளச்சேரி, 108630700067648, இந்சோஆஃப்ஸ்கீ, ஜங்ஷன் ரோடு விருதாச்சலம், 105730700092759, 5385, கடலூர், கடலூர் பழைய டவுன், 125800700049297, 9602, நெல்லிக்குப்பம் கடலூர், 115060730015818, கிழக்கு தேர் வீதி சிதம்பரம், 119810730014891, வடலூர், 125950700037144, விருதாச்சலம், 123580700059785, கள்ளக்குறிச்சி, சின்ன சேலம் விழுப்புரம், 121180730058014, உளுந்தூர்பேட்டை, 121320700056635, 121320730038357, காஞ்சிபுரம், அய்யப்பன்தாங்கல், 108140700039428, செங்கல்பட்டு, 110420730008997, 9033, கேளம்பாக்கம், 117390730017215, கிருஷ்ணா நகர் மேற்கு தாம்பரம், 110480700025502, குன்றத்தூர், 109730700055248, மாமல்லபுரம் 123180700021929, மேல்மருவத்தூர் கிளை, 118280700030448, 0714, 0963, முடிச்சூர் ரோடு, 109100730023627, பல்லாவரம் தர்கா ரோடு, 107810730007787, பெரும்பாக்கம் மெயின் ரோடு, 126990700025792, வள்ளல் பச்சையப்பன் தெரு காஞ்சிபுரம், 109920700060673, 109920730009778, திருவள்ளுவர், சித்தூர் ரோடு திருத்தணி , 129310700024454, வெள்ளாளர் தெரு, முகப்பேர் மேற்கு, 105640730009758, 9759, 9760, வில்லிவாக்கம், 117770700027481, திருவள்ளூர், மதுரவயல் மார்கெட், 107970700034570, பட்டாபிராம் சென்னை, 114870730007972, விழுப்புரம், விழுப்புரம், 121310700040568, புதுச்சேரி, கதிர்காமம், 120690700044204, 4616, 120690730022510, மரப்பாலம், 119130700034855, நெல்லித்தோப்பு புதுச்சேரி, 103250730018136,

விருப்பமுள்ள ஏலதாரர்கள் ரூ.10,000/- ஏலம் தொடங்கும் நாள் பிணையத்தொகையாக (EMD) ஏலம் தொடங்கும்முன்பு செலுத்த வேண்டும் (ஏலத்தில் வெற்றி பெறாத ஏலதாரர்களுக்கு இந்த தொகை திருப்பி அளிக்கப்படும்). ஏலதாரர்கள் உரிய அடையாள அட்டை/பான் கார்டு கொண்டு வர வேண்டும். கூடுதல் விபரங்களுக்கு தயவுசெய்து தொடர்பு கொள்க 08714603282

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
மணப்புரம் பைனான்ஸ் லிமிடெட்-க்காக

equitas Small Finance Bank
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(முன்பு "எக்விடாஸ் பைனான்ஸ் லிமிடெட் - என அறியப்பட்டது)
பதிவு அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம்,பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002 போன் : 044-42995000, 044-42995050

கேட்பு அறிவிப்பு (SARFAESI சட்டம் 2002 பிரிவு 13 (2)-ன் கீழ் அறிவிப்பு)

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002-ன் பிரிவு 13(2)-ன் கீழான அறிவிப்பு இதன் மூலம் அறிவிக்கப்படுவது யாதெனில் பின் வரும் கடனாளி/கள், எக்விடாஸ் ஹௌசிங் ஃபைனான்ஸ் லிமிடெட் (EHFL) / எக்விடாஸ் ஃபைனான்ஸ் லிமிடெட் (EFL) / எக்விடாஸ் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட் (ESFL) இடமிருந்து கடன் பெற்றுள்ளனர். கீழ்குறிப்பிட்டுள்ள கடனாளி/கள், தங்களது கடனுக்கான மாதாந்திர தவணைகளை செலுத்த தவறியமையால், அவர்களது கணக்கு இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களில் படி செயல்படாத கணக்காக வகுக்கப்பட்டுள்ளன. கடனாளி/கள், அசையாச் சொத்துக்களை கடனுக்கு ஈடாக பிணையமாக கொடுத்துள்ளனர். அதன் விபரங்கள் பின் வருமாறு விளக்கப்பட்டுள்ளன. கடன் மாற்று நிலுவைத்தொகை நாளது தேதியில், கடனாளி (களால்) ESFB-க்கு செலுத்தப்பட வேண்டியது உள்ளிட்ட விபரங்கள் இதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ளன. இதன் கீழ்க்கையொப்பமிட்ட நபர், ESFB -ன் அங்கீகரிக்கப்பட்ட அலுவலராக கடனாளி(கள்) மற்றும் பொது மக்கள் ஆகியோருக்கு இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் பிணைபெற்றக் கடனாளித்தவர், பின் வரும் கடனாளி(களுக்கு) எதிராக பிணைகாப்பு நிதிசொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைகாப்பு செயலாக்க சட்டம் 2002 (SARFAESI சட்டம்) ன் கீழான ஏற்பாடுகளின் கீழ் நடவடிக்கை எடுத்துள்ளார். பின்வரும் கடனாளி(கள்), அவரவர் பெயருக்கு எதிராக குறிப்பிட்டுள்ள நிலுவைத்தொகையினை இந்த அறிவிப்பு தேதியிலிருந்து 60 (அறுபது) நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த தவறினால், கீழ்க்கையொப்பமிட்ட நபர், பிணை பெற்ற கடனாளித்தவருக்கென SARFAESI சட்டம் பிரிவு13 உட்பிரிவு 4-ன் கீழான ஏற்பாடுகளின் படி உள்ள, சுவாதீனம் எடுத்தல் மற்றும் அதனை விற்பனை செய்துதலுக்கான அதிகாரம் உள்ளிட்ட அனைத்து அல்லது ஏதேனும் அதிகாரத்தை செயலுருத்துவார்.

வ.எண்.1: கிளை: பூந்தமல்லி, கணக்கு எண்.ELPPOONM0031679, கடன்தாரர் : 1. திரு.ருபேந்திரன், 2. திருமதி.அஞ்சா, 3. திருமதி.சரஸ்வதி, 4. திருமதி. துலுக்கானத்தம்மாள், கோரிக்கை அறிவிப்பு தேதி : 21.07.2025 & நிலுவைத்தொகை: ரூ.5,66,755/-
அசையா சொத்தின் விவரம்: காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் தாலுகா, இள்ளலூர் கிராமத்தில், பழைய சர்வே எண்.23/22 பகுதி, புதிய சர்வே எண்.491/33-ன்படி 1883 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: கிருஷ்ணன் அவர்களின் வீடு, தெற்கில்: தெரு, கிழக்கில்: திரு.வீரபத்திரன் அவர்களுக்கு சொந்தமான சொத்து, மேற்கில்: காலி நிலம்.

வ.எண்.2: கிளை: மீஞ்சூர், கணக்கு எண். SEMINJR0358792, கடன்தாரர்: 1. சரண்ராஜ்.R, 2. பாக்கியஸ்வரி.R, 3. ராஜேந்திரன்.P, கோரிக்கை அறிவிப்பு தேதி: 21.07.2025 & நிலுவைத்தொகை: ரூ.5,05,370/-
அசையா சொத்தின் விவரம்: திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தாலுகா, எண்.91, கனியம்பாக்கம் கிராமத்தில், பழைய சர்வே எண்.369/33 பகுதி, பட்டா எண்.96-ன்படி புதிய சர்வே எண்.422/3-ன்படி 3552 சதுர அடி அல்லது 0330 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: சாலை, தெற்கில்: திரு.ஹரிநாராயணன் அவர்களுக்கு சொந்தமான வீடு, கிழக்கில்: திரு.பன்னீர் அவர்களுக்கு சொந்தமான வீடு, மேற்கில்: திரு.தனபால் அவர்களுக்கு சொந்தமான வீடு.

வ.எண்.3: கிளை: போரூர், கணக்கு எண்.700008118950, கடன்தாரர்: ஆனந்தன்.D, கோரிக்கை அறிவிப்பு தேதி : 21.07.2025 & நிலுவைத்தொகை: ரூ.4,49,943/-
அசையா சொத்தின் விவரம்: முன்னர் திருவள்ளூர் மாவட்டம், தற்போது சென்னை மாவட்டம், முன்னர் அம்பத்தூர் தாலுகா, தற்போது மதுரவாயல் தாலுகா, திருவீதியம்மன் கோவில், 1வது தெரு, போரூர் கிராமத்தில், பழைய கிராம நத்தம் சர்வே எண்.232/ பகுதி, மனைவரி தோராய பட்டா எண்.253-ன்படி துணை பிரிவு புதிய சர்வே எண்.429/17-ன்படி 538 சதுர அடி (50 சதுர மீட்டர்) பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: 3 அடி பொது சந்து, தெற்கில்: 3 அடி பொது சந்து, கிழக்கில்: திரு.பாளையம் அவர்களுக்கு சொந்தமான மனை, மேற்கில்: திருமதி.நாகம்மாள் அவர்களுக்கு சொந்தமான மனை.

வ.எண்.4: கிளை: பூந்தமல்லி, கணக்கு எண்.SEPOONM0394713, கடன்தாரர்: 1. சுரேஷ்.R, 2. மின்னலா .R, 3. ராமானுஜம்.E, கோரிக்கை அறிவிப்பு தேதி : 21.07.2025 & நிலுவைத்தொகை: ரூ.1,83,232/-
அசையா சொத்தின் விவரம்: திருவள்ளூர் மாவட்டம், திருவள்ளூர் தாலுகா, அரண்வாயல் கிராமத்தில், நத்தம் பழைய சர்வே எண்.317, புதிய சர்வே எண்.317/7-ன்படி 1120 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: திரு.ஜெயராமன் அவர்களுக்கு சொந்தமான நிலம், தெற்கில்: சாலை, கிழக்கில்: 2 அடி பொது நடைபாதை, மேற்கில்: திரு.சிகாமணி அவர்களுக்கு சொந்தமான நிலம்.

வ.எண்.5: கிளை: அம்பத்தூர், கணக்கு எண்.SEAMBTR0158687, கடன்தாரர்: 1. YST இன்ஜினியரிங் ஜமுனா.A, 2. கலைச்செல்வி.N, 3. ரவிக்குமார்.A, 4. சுரேஷ்.A, 5. சிவகுமார்.A, 6. தமிழ்செல்வி.S, கோரிக்கை அறிவிப்பு தேதி : 21.07.2025 & நிலுவைத்தொகை: ரூ.1,35,722/-
அசையா சொத்தின் விவரம்: சென்னை மாவட்டம், கோட்டை தண்டையார்பேட்டை தாலுகா, பொச்சம்மாள் தெரு, புதிய வண்ணாரப்பேட்டை, தண்டையார்பேட்டை, பழைய சர்வே எண்.4300/1, புதிய சர்வே எண்.4300/1E-ன்படி டவுன் சர்வே நிலபதிவேட்டின்படி CA 358/69/70, டவுன் சர்வே எண்.4300/16-ன்படி 938 சதுர அடி பரப்பளவு நிலம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: 4வது பகுதிக்கு ஒதுக்கப்பட்ட நிலம், தெற்கில்: சர்வே எண்.4307/4-ல் உள்ள திருமதி.கன்னியம்மாள் அவர்களுக்கு சொந்தமான நிலம், கிழக்கில்: சர்வே எண்.4300/2-ல் உள்ள திரு.மேட்டு முனுசாமி அவர்களுக்கு சொந்தமான நிலம், மேற்கில்: திரு.செங்கல்வராயன் அவர்களுக்கு சொந்தமான சொத்து.

வ.எண்.6: கிளை: திருவொற்றியூர், கணக்கு எண்.SETRVTR0318992, கடன்தாரர்: 1. முனியப்பன்.K, 2. மஞ்சுளா.M, கோரிக்கை அறிவிப்பு தேதி : 21.07.2025 & நிலுவைத்தொகை: ரூ.25,46,002/-
அசையா சொத்தின் விவரம்: திருவள்ளூர் மாவட்டம், திருவொற்றியூர் தாலுகா, பாரதி நகர் 3வது தெரு எர்ணாவூர் கிராமத்தில், சர்வே எண்.102 பகுதி & 99/2 பகுதி-ன்படி மனை எண்.125-ல் உள்ள 1151 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: 3வது தெரு, தெற்கில்: மனை எண்.126, கிழக்கில்: தெரு, மேற்கில்: மனை எண்.124.

வ.எண்.7: கிளை: செங்கல்பட்டு, கணக்கு எண்.700009066597, கடன்தாரர்: 1. S. ரஞ்சிதா, 2. சுனில் தேவகுமார்.L, கோரிக்கை அறிவிப்பு தேதி : 21.07.2025 & நிலுவைத்தொகை: ரூ.2,66,059/-
அசையா சொத்தின் விவரம்: செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் தாலுகா, (பழைய எண்.94, புதிய எண்.27)-ன்படி பெருந்தண்டலம் கிராமத்தில், கிராம நத்தம் பழைய எண்.237/1 பகுதி, புதிய சர்வே எண்.237/1ஐ-ன்படி மொத்தமுள்ள 6553 சதுர அடி அல்லது (609 சதுர மீட்டர்) -ல் 1473 சதுர அடி பரப்பளவு காலி நிலம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: சர்வே எண்.237/1E (பகுதி)-ன்படி திரு.சாம்ஜபகுமார் அவர்களின் அட்டவணை "D" சொத்து, தெற்கில்: சர்வே எண்.237/1E (பகுதி) திரு.அருண்பிரேம்குமார் அவர்களின் அட்டவணை "C" சொத்து, கிழக்கில்: அட்டவணை 'F' பொது நிலம் (பொது வழி), மேற்கில்: திரு.செல்வமணி அவர்களுக்கு சொந்தமான சொத்து.

வ.எண்.8: கிளை: மதுராந்தகம், கணக்கு எண்.SEMDRKM0365822, கடன்தாரர்: 1. தமிழ்அழகன்.S, 2. சாமுண்டீஸ்வரி.T, 3. செல்வராஜ்.G, கோரிக்கை அறிவிப்பு தேதி : 21.07.2025 & நிலுவைத்தொகை: ரூ.2,46,534/-
அசையா சொத்தின் விவரம்: செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுகா, அச்சரப்பாக்கம் பஞ்சாயத்து யூனியன், கூடலூர் கிராமத்தில், பழைய சர்வே எண்.47/2 பகுதி, புதிய சர்வே எண்.275/5-ன்படி 2884 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: காஸனிக்கு செல்லும் தார் சாலை, தெற்கில்: திரு.ஜெயசந்திரன் அவர்களின் காலி நிலம், கிழக்கில்: சிமெண்ட் சாலை, மேற்கில்: திரு.மனோகர் அவர்களின் காலி நிலம்.

வ.எண்.9: கிளை: பல்லாவரம், கணக்கு எண்.SEPLVRM0382291, கடன்தாரர்: 1. பிரியா.P, 2. தேவராஜ்.S, 3. பிரகாஷ்.D, கோரிக்கை அறிவிப்பு தேதி : 21.07.2025 & நிலுவைத்தொகை: ரூ.2,13,352/-
அசையா சொத்தின் விவரம்: செங்கல்பட்டு MGR மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, எண்.166, மஞ்சுவம் கிராமத்தில், மனைவரி தோராய பட்டா எண்.76, பழைய சர்வே எண்.229/27 பகுதி A மற்றும் சர்வே எண்.229/20 பகுதி, புதிய சர்வே எண்.423/32 & சர்வே எண்.423/33-ன்படி 860 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: சர்வே எண்.423/37 மற்றும் சந்து, தெற்கில்: சர்வே எண்.423/27, கிழக்கில்: சர்வே எண்.423/30 & 423/31, மேற்கில்: சர்வே எண்.423/34 & 423/35.

வ.எண்.10: கிளை: செங்கல்பட்டு, கணக்கு எண்.SECGPTU0348521, கடன்தாரர்: 1. தேவகி.C, 2. காயத்திரி .N, 3. சுமன் C, கோரிக்கை அறிவிப்பு தேதி : 21.07.2025 & நிலுவைத்தொகை: ரூ.1,94,838/-
அசையா சொத்தின் விவரம்: காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் தாலுகா, புக்கத்துரை கிராமத்தில், சர்வே எண்.217 பகுதி, புதிய சர்வே எண்.438/14-ன்படி 1076 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: திரு.செல்லமுத்து அவர்களுக்கு சொந்தமான வீடு, தெற்கில்: தெரு, கிழக்கில்: திரு.மாரிமுத்து அவர்களுக்கு சொந்தமான வீடு, மேற்கில்: தெரு.

வ.எண்.11: கிளை: அச்சரப்பாக்கம், கணக்கு எண்.SEACRPK0365990, கடன்தாரர்: 1. சரவணன்.E, 2. எல்லப்பன்.C, 3. செல்லம்மாள் E, கோரிக்கை அறிவிப்பு தேதி : 21.07.2025 & நிலுவைத்தொகை: ரூ.1,80,813/-
அசையா சொத்தின் விவரம்: செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுகா, அச்சரப்பாக்கம் பஞ்சாயத்து யூனியன், காட்டுக்கூடலூர் கிராமத்தில், பழைய சர்வே எண்.153/4A பகுதி, புதிய சர்வே எண்.161/13-ன்படி 3294 சதுர அடி பரப்பளவு நிலம் மற்றும் கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த அனைத்து துண்டுகளும், பகுதிகளும் மற்றும் எல்லைகள்: வடக்கில்: சிமெண்ட் சாலை, தெற்கில்: சர்வே எண்.162-ன்படி உள்ள நிலம், கிழக்கில்: திரு.ஆறுமுகம் அவர்களின் நிலம், மேற்கில்: திரு.மணி அவர்களின் நிலம்.

தேதி : 22.09.2025
இடம் : சென்னை
அதிகாரப்பூர்வ அலுவலர்,
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

# தினமணி

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

திங்கள்கிழமை 22–9–2025
விசுவாவசு புரட்டாசி 6 ஹிஜ்ரி 1447 ரபீயுல் அவ்வல் 29


## ஆக்கபூர்வ சீர்திருத்தம்!

சரக்கு–சேவை வரி (ஜி.எஸ்.டி) விகிதக் குறைப்பு விரைவில் அமலுக்கு வரும் என்கிற பிரதமர் நரேந்திர மோடியின் சுதந்திர தின உரையைத் தொடர்ந்து இன்றுமுதல் சுமார் 375 பொருள்கள் மீதான வரிக் குறைப்புடன் ஜி.எஸ்.டி. 2.0 சீரமைப்பு அமலுக்கு வந்திருக்கிறது. நாடு தழுவிய அளவில் நடைமுறையில் இருந்த 17 வரிகள் மற்றும் 13 கூடுதல் வரிகளை ஒருங்கிணைத்து 2017 ஜூலை முதல் ஜி.எஸ்.டி. அமலுக்கு வந்தது. இப்போது அதில் மாறுபட்ட சூழலுக்கேற்ப சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2017–இல் அறிமுகப்படுத்தப்பட்ட ஜி.எஸ்.டி. யில் 5%, 12%, 18%, 28% ஆகிய நான்கு விகிதங்களில் வரி விதிக்கப்பட்டு வந்தது. எந்த ஒரு புதிய திட்டத்துக்கும் குறைபாடுகள், பக்கவிளைவுகள் இருப்பதுபோல ஜி.எஸ்.டி. என்கிற 'ஒரு நாடு ஒரு வரி' என்ற முனைப்பும் பல சவால்களைச் சந்திக்காமல் இல்லை.

ஜி.எஸ்.டி. அறிமுகத்துக்குப் பிறகு, இந்தியாவின் வணிக நடைமுறைகள் சர்வதேச நடைமுறைகளுக்கு ஏற்ப மாறியிருப்பதை நாம் மறந்துவிடலாகாது. வணிகர்களின் அன்றாட வர்த்தக நடைமுறைகள் கணினிமயப்படுத்தப்பட்டு, முறையாக கணக்குத் தாக்கல் செய்யும் ஒழுக்கத்துக்கு அவர்களை ஜி.எஸ்.டி. பழக்கப்படுத்தி இருக்கிறது.

கடந்த எட்டு ஆண்டுகளில் ஜி.எஸ்.டி. என்பது தவிர்க்க முடியாத நடைமுறையாக மாறி இருப்பது நிஜம். இப்போது, அடுத்த கட்டமாக புதிய சில சீரமைப்புகளுக்கும் மாற்றங்களுக்கும் வரி விதிப்பு முறை உள்ளாக்கப்படுவது காலத்தின் கட்டாயம் என்றுதான் சொல்ல வேண்டும்.

நான்கு அடுக்கு ஜி.எஸ்.டி.யை இரண்டு அடுக்குகளாகக் குறைப்பது என்கிற முடிவு திடீரென்று எடுக்கப்பட்ட முடிவு அல்ல; கடந்த இரண்டு ஆண்டுகளாக இதுகுறித்த கோரிக்கைகள் எழுந்த வண்ணம் இருந்தன. ஜி.எஸ்.டி. கவுன்சிலும் மாற்றம் குறித்தும், சீர்திருத்தம் குறித்தும் விவாதித்து வந்தது. கடந்த டிசம்பர் மாதம் ஜெய்சால்மரில் கூடிய ஜி.எஸ்.டி. கூட்டத்திலும், மத்திய அமைச்சரவையிலும் இது பரிசீலிக்கப்பட்டிருக்கிறது.

ஏறத்தாழ 400 பொருள்கள் மீதான ஜி.எஸ்.டி. மாற்றப்பட்டிருக்கிறது. 375 பொருள்களின் மீதான வரி குறைக்கப்பட்டிருக்கிறது. வரிக் கட்டமைப்பில் மாற்றம், வரி விகிதங்களில் மாற்றம், வர்த்தக நடைமுறையில் வரி வசூலிப்பு, வரி தாக்கல் செய்வதிலும் எளிமைப்படுத்துதல் என தற்போது மூன்று சீர்திருத்தங்கள் ஜி.எஸ்.டி.யில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கட்டமைப்பின் மாற்றத்தில் முக்கியமான மூலப்பொருள்கள் மீது அதிக வரி விதிக்கப்படும் நீண்டகால பிரச்னைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது.

391 பொருள்கள் மீதான ஜி.எஸ்.டி.யில் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. முன்பு 5%, 12%, 18%, 28% என்று இருந்த வரிகள் இப்போது 5%, 18% என எளிதாக்கப்பட்டுள்ளன. இன்னொருபுறம் உடல் நலத்துக்கும் சமுதாயத்துக்கும் தீங்கான புகையிலை உள்ளிட்ட பொருள்கள் மீதான 28% ஜி.எஸ்.டி. இப்போது 40% என்று அதிகரிக்கப்பட்டிருப்பது வரவேற்புக்குரியது.

33 உயிர் காக்கும் மருந்துகள் மீதான ஜிஎஸ்டி, வரி விதிப்பில்லாத 0% வரம்புக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது. பல மருந்துகள் 12%, 5% வரம்புகளில் இருந்து 0% என மாறி இருக்கிறது. நோய் கண்டறியும் சோதனைக் கருவிகள் மீதான வரி 5% வரம்பில் சேர்க்கப்பட்டிருப்பது, தனிநபர் மற்றும் ஆயுள் காப்பீடு ஜி.எஸ்.டி.யிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருப்பது உள்ளிட்டவை வரவேற்புக்குரிய மாற்றங்கள்.

பட்ஜெட்டில் வழங்கப்பட்ட வருமான வரிச் சலுகைகளும், இப்போது அதிகரிக்கப்பட்டிருக்கும் ஜி.எஸ்.டி. சீர்திருத்தங்களும் பிரதமர் கூறுவதைப்போல நடுத்தர மக்களின் வாழ்க்கையில் மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தக்கூடும். இதனால், அரசுக்கு ஏறத்தாழ ரூ.57,000 கோடி வருவாய் இழப்பு ஏற்படும் என்று கூறப்படுகிறது. மக்களிடம் ரூ.57,000 கோடி கூடுதலாக செலவழிக்க ரூ.57,000 கோடி இருக்கும் என இதைப் பார்க்க வேண்டும்.

இதன் பலனை இந்தியாவின் தொழில்–வர்த்தகத் துறை அடையப் போகிறது. தங்களுக்குக் கிடைக்கும் லாபத்தை அந்த நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு முறையாக வழங்கினால் மட்டும்தான் பிரதமரும், நிதியமைச்சரும் எதிர்பார்க்கும் பொருளாதார இயக்கம் உருவாகும். வரிச் சலுகைகளை அவர்கள் அனுபவிக்காமல் பொதுமக்களுக்கு மடைமாற்றம் செய்கிறார்களா என்பதையும், அப்படி வழங்காதவர்களை தயங்காமல் தண்டிப்பதையும் அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

குறிப்பாக, மோட்டார் வாகனங்கள், ஏ.சி.க்கள் உள்ளிட்ட பொருள்களின் மீது தாராளம் காட்டும் நிறுவனங்கள், குறைந்த மதிப்புள்ள மக்களின் அன்றாட உபயோகப் பொருள்களிலும் முழுமையான சலுகைகளை வழங்குகிறார்களா என்பதைக் கண்காணிக்க வேண்டும். அதுதான் அரசின் நோக்கத்தை நிறைவேற்றும்.

இப்போது வழங்கப்பட்டிருக்கும் இந்த சலுகைகள் பிகார் தேர்தலை கருத்தில் கொண்டு வழங்கப்பட்டிருப்பதாக எதிர்க்கட்சிகள் விமர்சிப்பது அவர்களது அச்சத்தின் வெளிப்பாடு. டிரம்ப்பின் வரி விதிப்புக்கான எதிர்வினை என்று பார்ப்பதுதான் ஆக்கபூர்வ சிந்தனை.

பிரதமர் தனது நேற்றைய உரையில் குறிப்பிட்டதுபோல 'சுதேசிப் பொருள்களை விற்பதில் நாம் பெருமிதம் கொள்ள வேண்டும். இந்தியப் பொருள்கள் தனது தரத்துக்கான உலகளாவிய அங்கீகாரத்தைப் பெறவேண்டும்'. ஜி.எஸ்.டி. சீரமைப்பு கடைக்கோடி சாமானியனைச் சென்றடைய வேண்டும். அடுத்தகட்டமாக ஜி.எஸ்.டி.3.0 தாமதமின்றி நடைமுறைக்கு வரவேண்டும்.

**வீறுஎய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்**
**ஊறுஎய்தி உள்ளப் படும்.**

செயல் திறனால் பெருமை பெற்று உயர்ந்தவரின் வினைத்திட்பமானது, நாட்டை ஆளும் அரசனிடத்திலும் எட்டி மதிக்கப்பட்டு விளங்கும்.

திருக்குறள் (எண் 665) அதிகாரம்: வினைத்திட்பம்

# லட்சிய ஆசிரியர்களின் 'அறிவின் அருவி'



க.பழனித்துரை

அரசுப்பள்ளி ஆசிரியர்கள் ஒருகுழுவாக இணைந்து 'அரசமைப்பு சாசனத்தின் முகப்புரை' என்ற தலைப்பில் இணைய வழியில் உரையாடல் ஒன்றை நடத்தினர். அந்த நிகழ்வில் கலந்து கொண்டு ஆசிரியர்கள் உரையாற்றுவதை கவனிக்க வேண்டும் என்று என்னைக் கேட்டுக் கொண்டனர். அதுபோன்ற நிகழ்வை தமிழகம் முழுவதும் மாணவர்களிடம் ஒருங்கிணைத்து நடத்தும் ஒன்பதாம் வகுப்பு மாணவி ஒருவர் எனக்கு நினைவூட்டி, 'அந்த நிகழ்வில் நீங்கள் கட்டாயம் கலந்துகொண்டு ஆசிரியர்கள் பேசியதன் அடிப்படையில் கருத்துக்கூற வேண்டும்' என்றும் கேட்டுக் கொண்டார்.

அந்த நிகழ்வுக்கு அவர்கள் 'அறிவின் அருவி' எனப் பெயரிட்டு நடத்தினர். அதில் ஒன்பதுபேர் கருத்துரையாற்றினார்கள். அந்த நிகழ்வுக்கு ஒருவர் தலைமை வகித்தார். ஒருவர் வழிகாட்டியாக அந்த நிகழ்வில் பங்கேற்றார். பொதுவாக, அரசுப் பள்ளி ஆசிரியர்கள் பொது நிகழ்வுகளில் பங்கேற்கும்போது இயல்பாகப் பேசாமல் அலங்காரமாக பேச்சைத் தயாரித்து ஒரு செயற்கை முறையில் பேசுவார்கள்; எங்கு சென்றாலும் ஒரே மாதிரியாக இருக்கும் பொதுப்பள்ளி நிகழ்வுகள்.

இந்த நிகழ்வு எனக்கு பல வியப்புகளை அளித்தது. அரசமைப்புச் சாசனம் ஒரு கடினமான தலைப்பு; அதை இந்த ஆசிரியர்கள் கையாண்ட விதம், பேசிய முறை இந்த இரண்டையும் உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்தேன். இயல்பாக அனைவருக்கும் புரியும் எளிய மொழியில் பேசி, அந்த முகப்புரையில் இருந்த வார்த்தைகளை ஒவ்வொன்றாக எடுத்து விளக்கியது நம் அரசுப் பள்ளி ஆசிரியர்கள் மீது இருந்த பார்வையை மாற்றியமைத்தது. ஆற்றல் வாய்ந்த, சமூகக் கண்ணோட்டம் கொண்ட ஆசிரியர்களாக, உணர்வுபூர்வமாக செயல்படக்கூடிய ஆசிரியர்கள் நம் பள்ளிகளில் இருக்கிறார்கள்.

இவர்களை நாம் முறையாகப் பயன்படுத்தினால் மிகப் பெரிய மாற்றத்தை நம் பள்ளிக் கல்வியில் உருவாக்கலாம் என்பதை அந்த நிகழ்வு எனக்குள் ஏற்படுத்தியது. பேசியவர்கள் பள்ளி ஆசிரியர்கள், பேசிய பொருள் அரசமைப்புச் சாசனத்தின் முகப்புரை. இந்த நிகழ்வை அப்படியே ஒவ்வொரு பள்ளியிலும் எல்லா மாணவர்களையும் வைத்து நடத்தினால், ஓராண்டுக்குள் நம்மை இந்தியக் குடிமக்களாக வழிநடத்தும் சாசனத்தை மக்கள் சாசனமாக மாற்ற அனைத்துப் பள்ளி மாணவர்களையும் தயார் செய்து விடலாம் என்ற பெரு நம்பிக்கை பிறந்தது.

இதைத் தொடர்ந்து ஒவ்வொரு வாரமும் அந்த முகப்புரையை மாணவர்களைக் கொண்டு படிக்கப் பழக்கினால், நாம் இந்தியக் குடிமக்களாகச் செயல்பட நம் பொறுப்புகள் என்ன என்று தெரிந்துகொண்டு பொறுப்புமிக்கவர்களாக மாறிவிடுவார்கள் ஒட்டுமொத்த தமிழக அரசுப் பள்ளி மாணவர்கள் என்ற நம்பிக்கை எனக்குள் பிறந்தது. இந்த நிகழ்வில் ஒரு அதிகாரம் மிக்க உயர் அதிகாரி கலந்திருந்தால் இதை தமிழகம் முழுவதும் பள்ளிகளில் ஒரு கலாசாரமாக மாற்றியிருக்கலாமே என்று எண்ணத் தோன்றியது.

அடுத்து இந்த ஆசிரியர்கள் பேசும்போது, அந்த முகப்புரையை ஒரு சட்டக் கண்ணோட்டத்துடனோ அல்லது அரசியல் கண்ணோட்டத்துடனோ விமர்சிக்காமல் சமூகக் கண்ணோட்டம் கொண்டு விளக்கியதால் மிக எளிதாக அனைவரையும் தொடும் மொழியில் பேசியதால் அதன் வீச்சு என்பது உச்சத்தில் இருந்தது. இவர்களால் சமூகத்தையும் அவர்களின் மாணவர்கள் மூலம் தொட முடியும் என்பதை நிரூபித்தார்கள். அவர்கள் அந்த கருத்துப் பகிர்வுக்கு அரசமைப்புச் சாசன முகப்புரையில் எடுத்த வரையறைகள் என்பது சமத்துவம், மக்களின் மாண்பு, இந்தியராக ஒற்றுமையுடன் இருத்தல் சமூக நீதி, பொருளாதார நீதி, சமத்துவம், மதச்சார்பின்மை போன்றவைதான்.

> **இந்திய அரசமைப்புச் சாசனம் அரசாங்கம் எப்படி அமைத்துச் செயல்பட வேண்டும் என்றும் மட்டும் கூறவில்லை; அதன்மூலம் எப்படிப்பட்ட சமூகம் இந்தியத் திருநாட்டில் உருவாக வேண்டும் என்றும் அதை எப்படி உருவாக்க வேண்டும் என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறது.**

அந்த நிகழ்வுக்கு கவனிக்க அழைக்கப்பட்ட என்னை, இந்த நிகழ்வைப் பற்றிக் கருத்துக் கூறுங்கள் என்று கேட்டுக் கொண்டனர். இந்திய அரசமைப்புச் சாசனம் உருவாகியபோது ஓர் ஆலோசகராகவும், இந்திய அரசமைப்புச் சாசனம் உருவானபிறகு அது நடைமுறைப்படுத்தப்படும் விதம் குறித்தும் புத்தகங்கள், கட்டுரைகள் எழுதிய கிரன்வில் ஆஸ்டின் கூறியது எனக்கு நினைவுக்கு வந்தது. அதை அந்த நிகழ்வில் நினைவுபடுத்தினேன்.

இந்திய அரசமைப்புச் சாசனம் ஒரு மக்களுக்கான சமூக சாசனம். இந்த மகா சாசனம் மக்களிடம் எடுத்துச் சென்று முறையாக விளக்கப்பட்டால், சமூகத்தில் மிகப் பெரிய புரட்சியையே ஏற்படுத்திவிடும் என்றார். ஆனால், அந்தச் செயல் இன்று வரை நடைபெறவில்லை. ஆகையால்தான் அண்மைக்காலமாக அரசமைப்புச் சாசனத்தை மக்கள் சாசனமாக்குவோம் என்று ஒரு பெரு முயற்சியை முன்னெடுத்து அதையே ஓர் இயக்கமாக்க முனைந்து வருகின்றன பல சமூக இயக்கங்கள். இது என் நெடுநாள் கனவாக இருந்த காரணத்தால், இந்தப் பணியில் என்னை இணைத்துக் கொண்டு செயல்பட்டு வருகிறேன்.

இந்திய அரசமைப்புச் சாசனம் அரசாங்கம் எப்படி அமைத்துச் செயல்பட வேண்டும் என்றும் மட்டும் கூறவில்லை; அதன்மூலம் எப்படிப்பட்ட சமூகம் இந்தியத் திருநாட்டில் உருவாக வேண்டும் என்றும் அதை எப்படி உருவாக்க வேண்டும் என்பதையும் கோடிட்டுக் காட்டுகிறது. மகாத்மா காந்தியின் கனவான சர்வோதய சமூகம் உருவாக அனைவருக்கும் சமத்துவம், அவருக்கும் சமூக, பொருளாதார அரசியல் நீதி கிடைக்க அரசும் சமூகமும் இணைந்து செயல்பட வேண்டும் என்பதை உறுதி செய்கிறது.

அதை எப்படிச் செய்ய வேண்டும் என்பதையும் கோடிட்டுக் காட்டியுள்ளது. மக்கள் இந்தியக் குடிமக்களாக, இந்தியராக, ஒற்றுமையுடன், ஒருமைப்பாட்டுடன் சகோதர உணர்வுடன் செயல்பட வேண்டும் என்பதை அடிக்கோடிட்டுக் காட்டியுள்ளது. மற்றொரு அடிப்படையான கூறு பொதுமக்களின் மாண்பை உறுதி செய்தல் என்பது. இந்திய குடிமக்களின் சுயமரியாதை, கண்ணியம் காக்க அரசும் செயல்பட வேண்டும்; மக்களும் செயல்பட வேண்டும்.

ஆனால், இன்றுவரை இவற்றை மக்களிடம் எடுத்துச் சென்றிருக்கிறோமா என்று கேள்வி கேட்டால், ஆம், என்று எந்த இடத்திலிருந்தும் பதில் வராது. ஒரு முகமதியராக வாழ குரான் பேசப்படும் அளவுக்கு, ஒரு கிறிஸ்தவராக வாழ பைபிள் பேசப்படும் அளவுக்கு, ஒரு ஹிந்துவாக வாழ பகவத்கீதை பேசப்படும் அளவுக்கு இந்தியக் குடிமக்களாக வாழ இந்த அரசமைப்புச் சாசனம் பேசுபொருளாக ஆகவில்லை என்பதுதான் நாம் சந்திக்கும் எதார்த்தம்.

இந்தியாவில் மிக முக்கியமானது எது? இந்தியா என்ற நாடுதான். அதுதான் பிரதானமானது. அந்த நாட்டை உருவாக்கி, அதில் மக்களை மேம்பட வைக்க வேண்டும் என்றால் இந்தியர்களாகிய நாம் இந்தியர்களாக இணைய வேண்டும். இன்று அப்படி மக்களை இணைப்பதற்குப் பதிலாகப் பிரிப்பதையே தொழிலாகக் கொண்டு செயல்படும் அரசியலைத்தான் நாம் பார்க்கிறோம். பிரித்தலில் செயல்படும் அரசியலை, இணைத்தலில் கொண்டுசெல்ல, ஒரு புது விழிப்புணர்வும், செயல்பாடும் சமூகத்தில் கட்டமைக்கப்பட வேண்டியுள்ளன.

நாம் இன்று இந்தியராக சட்டபூர்வமாக இருக்கிறோம்; உணர்வுபூர்வமாக இந்தியராக வாழவில்லை. காரணம், அப்படி நாம் பிரிக்கப்பட்டுள்ளோம்–நம் நாட்டில் நடைபெறும் கட்சி அரசியலால். இந்த பிரிப்பு சிலருக்கு வாழ்வளிக்கிறது; பலருக்கு ஏக்கத்தை உருவாக்கியுள்ளது; இந்த நிலை மாற நமக்கு வழிகாட்டுவது நமது அரசமைப்புச் சாசனம்தான்.

அதை இன்று பள்ளி, கல்லூரி, ஊடகங்கள், குடிமைச் சமூக அமைப்புகள் என அனைத்துத் தளங்களிலும் எடுத்துச் சென்று அனைவரிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்தினால், நம்மால் பொறுப்புமிக்க குடிமக்களை உருவாக்க முடியும். பொறுப்புமிக்க குடிமக்கள் பொறுப்புமிக்க ஒரு சமூகத்தை உருவாக்குவார்கள்; பொறுப்புமிக்க சமுதாயத்தில் ஒரு பொறுப்புமிக்க அரசியல் உருவாகும்; பொறுப்புமிக்க அரசியலிலிருந்து பொறுப்புமிக்க அரசு உருவாகும்; பொறுப்புமிக்க ஆளுகை நிகழும், அந்த பொறுப்புமிக்க ஆளுகையில்தான் பொறுப்புமிக்க நிர்வாகம் நடைபெறும்.

எனவே, நமது பணி ஒரு நற்சமுதாயத்தை உருவாக்குவது. அதை ஆசிரியர்களாகிய நம்மிடம் உருவாகி, நம் மாணவர்கள் மூலம் குடும்பங்களில் உருவாகி, நல்ல குடும்பங்கள் நல்ல சமுதாயத்தை உருவாக்கிட வேண்டும். அதுதான் நம் லட்சியமாக இருக்க வேண்டும். அந்த லட்சிய சமுதாயத்தை உருவாக்க பொறுப்புமிக்க ஆசிரியர்களாக நாம் ஒருங்கிணைந்து ஒற்றுமையுடன் நம் பள்ளிகளில் செயல்படும்போது மிகப் பெரிய புரட்சிகர மாற்றங்களை உருவாக்க முடியும் எனக் கூறி என் ஆலோசனையை வழங்கி நிறைவு செய்தேன்.

இந்த நிகழ்வை ஒரு ஐந்து ஆறு ஆசிரியப் பெருமக்கள் இரண்டு மணி நேரம் செலவு செய்து அரசமைப்புச் சாசனம் என்பதுதான் மக்கள் சாசனம், அது நாம் எப்படி பொறுப்புமிக்க குடிமக்களாக வாழ்ந்து உரிமைகளுடன் பொறுப்புமிக்க சமூக வாழ்வை உருவாக்க வேண்டும் என்று ஒவ்வொரு கிராம சபையிலும் 'அறிவின் அருவி'யை நடத்தினால் மிகப் பெரும் விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்க முடியும் என்ற நம்பிக்கை பிறந்தது. அதற்கு நம் ஆசிரியப் பெருமக்கள் பள்ளிச் சுவர்களைக் கடந்து சமூகத்துக்குள் ஊடுருவத் தயாரான சமூக மனிதர்களாக மாற வேண்டும்.

இந்த நிகழ்வில் பேசிய இணைந்திருந்தவர்கள் ஏதோ ஒரு நிலையில் சமூகச் சிந்தனை கொண்டு ஒரு சமூக இயக்கத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடியவர்கள், இவர்களின் எண்ணிக்கை கூடினால் மிகப்பெரிய சமூகமாற்றத்தை ஆசிரியர்கள் மூலம் நம் சமுதாயத்தில் பார்க்க முடியும். அப்படிப்பட்ட லட்சிய ஆசிரியர்களை உருவாக்குவதுதான் இன்றைய தேவை.

கட்டுரையாளர்:
**பேராசிரியர்.**

# தவிர்க்கப்பட வேண்டும் தற்கொலை!

இரா.சாந்தகுமார்

உலக சுகாதார நிறுவனத்தின் சமீபத்திய அறிக்கையின்படி 2021–ஆம் ஆண்டில் உலக அளவில் 7,27,000 பேர் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். உலகில் ஏற்படும் மரணங்களுக்கான மூன்றாவது பெரிய காரணமாக தற்கொலை செய்து கொள்ளும் நிகழ்வுகள் அமைந்துள்ளன. நம் நாட்டில் 1995–ஆம் ஆண்டு முதல் 2015–ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் சுமார் 3 லட்சம் விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர்.

2022–ஆம் ஆண்டில் மட்டும் 11,290 விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். விளைபொருள்களுக்கு உரிய விலையின்மை, கடும் வறட்சியால் விளைச்சலின்மை, மழை வெள்ளத்தால் பயிர்களுக்குச் சேதம், கடன் சுமை, பயிர்க் காப்பீடு செய்வது குறித்து விழிப்புணர்வின்மை ஆகியவையே விவசாயிகளின் தற்கொலைக்கான பிரதான காரணங்களாகும்.

வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்களை வெல்வது கடினம் என மனதில் உருவாகும் எதிர்மறை எண்ணங்கள் மற்றும் அதன் விளைவாக ஏற்படும் மன அழுத்தமுமே தற்கொலைகளுக்குக் காரணமாக அமைகின்றன.

ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்களே அன்றாட வாழ்க்கையில் அதிக அளவிலான சவால்களை எதிர்கொள்கின்றனர். அந்தச் சவால்களுக்கு எவ்வாறேனும் தீர்வு காண முடியும் என்ற மனவலிமை ஆண்களைக் காட்டிலும் பெண்களிடம் அதிகம் உள்ளது.

மன அழுத்தத்துக்கு உள்ளாகி தற்கொலை செய்துகொள்ளும் பெண்களின் எண்ணிக்கையைவிட ஆண்களின் எண்ணிக்கை இருமடங்கு இருப்பதே இதற்கு சான்று. மேலும், இதன்மூலம் பெண்கள் மனதால் பலவீனமானவர்கள் எனும் கற்பிதம் உண்மையல்ல என்பதும் நிரூபணமாகிறது.

தற்கொலை செய்து கொள்பவர்களில் இளவயதினரே அதிக அளவில் உள்ளனர். குறிப்பாக, 15 வயது முதல் 29 வயது வரையிலான இள வயதினர் அதிக எண்ணிக்கையில் தற்கொலை செய்துகொள்கின்றனர்.

தற்காலச் சூழலில் 60 வயதைக் கடந்த முதியவர்களும் தற்கொலை செய்துகொள்வதாக ஊடகங்களில் தகவல்கள் அவ்வப்போது வெளியாகின்றன. தற்கொலை செய்து கொள்வோரில் சுமார் 10% பேர் முதியவர்களாவர்.

ஒருவர் தற்கொலை செய்து கொள்வதன் மூலம் தான் சந்திக்கும் பிரச்னை முற்றுப் பெறுவதாகக் கருதலாம். ஆனால், தற்கொலை செய்துகொள்ளும் நபர், தான் எதிர் கொண்ட பிரச்னையைபோல் பன்மடங்கு பிரச்னையை தன்னைச் சார்ந்தவர்களுக்கு விட்டுச் செல்கிறார் என்பதே உண்மை.

கடனாளியான ஒருவர் தற்கொலை செய்துகொள்வதன் மூலம், தான் வாங்கிய கடனால் உண்டான பிரச்னையை தனது மனைவி, பிள்ளைகள் தோளில் ஏற்றி விட்டுச் செல்கிறார். குடும்பத் தலைவர் ஒருவர் தற்கொலை செய்துகொள்ளும்போது அவர் குடும்பமே பாதிக்கப்படுகிறது.

பல நேரங்களில் தற்கொலைகளுக்குத் தேவையற்ற எதிர்மறையான கற்பனைகளும், அச்சமுமே காரணங்களாக உள்ளன. பள்ளி இறுதித் தேர்வை சரியாக எழுதவில்லை என நினைத்து தற்கொலை செய்து கொண்ட பள்ளி மாணவி ஒருவர், அவர் எழுதிய தேர்வில் தேர்ச்சி பெற்றதோடு நல்ல மதிப்பெண் பெற்றதையும் இங்கே குறிப்பிட வேண்டும். சில பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் மீது தங்கள் விருப்பங்களைத் திணித்து அவர்களை மன அழுத்தத்துக்கு உள்ளாக்குகின்றனர்.

உடல் நலனையும், மனநலனையும் பாதிக்கும் மன அழுத்தத்தில் இருந்து வெளியே வருவதற்கான முதல்படி, கவலை தரும் மனச்சூழலிலிருந்து வெளியே வருதலாகும். அண்மையில் புது தில்லியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் பணியாற்றிய நிலையில் தான் செய்துவந்த பணியை விட்டு விலகியதோடு சுய தொழிலில் ஈடுபட முடிவு செய்துள்ளார்.

பணம் சம்பாதிப்பதைவிட பணிச் சுமையால் ஏற்பட்ட மன அழுத்தத்திலிருந்து விடுபடுவதே நன்று என தான் முடிவு செய்ததாலேயே பணியிலிருந்து தான் விலகியதாக அந்த இளம் பெண் சமூக வலைதளத்தில் பதிவு செய்துள்ளார்.

2030–ஆம் ஆண்டுக்குள் உலகில் நடைபெறும் தற்கொலைகளில் 30% குறைக்கப்பட வேண்டுமென்பது ஐ.நா. சபையின் குறிக்கோளாக உள்ளது. ஆனால், தற்கொலைச் சம்பவங்கள் நடப்பதைத் தடுப்பதற்கான உலக நாடுகளின் தற்போதைய சுமாரான நடவடிக்கைகளே தொடரும் நிலையில், சுமார் 12% தற்கொலைகளை மட்டுமே 2030-ஆம் ஆண்டுவாக்கில் தடுக்க முடியும் எனத் தெரிகிறது.

உலகின் மொத்த மக்கள்தொகையான சுமார் 800 கோடி பேரில் 100 கோடி மக்கள் மனநலன் சார்ந்த பிரச்னைகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. கூட்டுக் குடும்ப நடைமுறை சிதைந்துபோன நிலையில், குடும்ப உறவுகளுக்குள் ஒருவர் தம் மனக் கவலையை மற்றவரிடம் பகிர்ந்து ஆறுதல் தேடுவதென்பது அரிதாகி விட்டது.

நடந்து முடிந்த சோக நிகழ்வை நினைத்துக் கவலைப்படுவதால் மன அழுத்தம் மட்டுமே மிஞ்சுகிறது. மாறாக, மனதை தேற்றிக்கொண்டு தன்னம்பிக்கையுடன் செயல்படுவதன் மூலம் மனம் மகிழும் சூழல் ஏற்படும்.

'தீதும் நன்றும் பிறர் தர வாரா ' என்பதற்கொப்ப நாம் மகிழ்ந்திருப்பதும், கவலையுற்று இருப்பதும் நம் செயல்களைச் சார்ந்ததே. ஓயாது நற்சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் மனதில், எவ்விதக் கவலைக்கும், மன அழுத்தத்துக்கும் இடமில்லை.

அழுத்தத்தால் மன நலன் பெருமளவில் பாதிக்கப்படுகிறது. மனநலன் பாதிக்கப்பட்ட பலர் தாங்கள் மனநலன் பாதிக்கப்படாதவர் என்பதை அறியாததுதான் வேதனையின் உச்சம். உடல் சார்ந்த நோய்களைப்போல் மனம் சார்ந்த நோய்கள் வெளிப்படையாகத் தெரிவதில்லை.

உறவினர்கள், நண்பர்களுடன் கலகலப்புடன், கலந்துரையாடுவது மன அழுத்தத்தைக் குறைப்பதோடு, மன அழுத்தத்துக்குக் காரணமான அச்சமும் கவலைகளும் விலகுவதற்கான தீர்வுகளும் கிடைக்க வாய்ப்புகள் உருவாகும்.

'எத்துணை இடர்கள் வரினும், வாழ்க்கை இனிதாக வாழ்வதற்கே' என்ற மன உறுதியுடன் வாழ்ந்தால் தற்கொலைகளைத் தவிர்ப்பது மிக எளிது!

## அன்புள்ள ஆசிரியருக்கு...
edit.dinamani@gmail.com

### பொறுப்பற்ற தன்மை

இலங்கை, வங்கதேசத்தைத் தொடர்ந்து நேபாளத்திலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு வன்முறையின் வழியே கலைக்கப்பட்டு இடைக்கால அரசு அமைந்துள்ளது ('தத்தளிப்பில் நேபாளம்!'– ஆசிரியர் உரை, 15.09.25). மூன்று நாடுகளிலுமே போராட்டத்துக்கு 'ஜென் இஸட்' தலைமுறையினர் காரணமாக சொல்லப்பட்டாலும் வன்முறை வெறியாட்டங்களுக்குப் பிறகு இடைக்கால ஆட்சி நிர்வாகம் கையளிக்கப்பட்டது என்னவோ பழைய தலைமுறையினரிடம்தான். தலைமையேற்று நிர்வகிக்கும் திறன், அனுபவமற்ற ஜென் இஸட் தலைமுறையினரின்இது போன்ற போராட்டங்கள் ஊழல், அரசியல் சீர்கேடுகள், வேலையின்மை போன்றவற்றை தீர்க்குமா என்பதை காலம்தான் நிர்ணயிக்க முடியும்.

**கணேசன் சந்திரசேகரன், வெள்ளக்கிணறு.**

### கைப்பேசியைக் கைவிட்டு...

வாசிப்பின் முக்கியத்துவம் பற்றி வாசித்துக்கொண்டிருப்பவர்கள் மட்டுமே உணர முடியும். தொடர்ந்து வாசித்துக்கொண்டே இருப்பவர்கள் நற்பண்புகளின் நாயகர்களாக விளங்குவதைப் பார்க்கலாம் ('வழித்துணையாகும் வாசிப்பு!'–துணைக் கட்டுரை– பழ.அசோக்குமார், 15.09.25). பயணங்களின்போது வாசிக்கும் பழக்கம் தற்காலத்தில் மிகவும் குறைந்துவிட்டது. பயணம் செய்வோர் உடன் புத்தகத்தை எடுத்துச் சென்றால் கிடைக்கும் ஓய்வில் வாசிக்கலாம். நல்ல நூல்களைத் தேடித்தேடி வாசிக்கும் பழக்கம் இருந்து விட்டால் பல நூலாசிரியர்களின் அனுபவங்கள் வாசகர்களுக்குக் கிடைக்கும். வீடுதோறும் நூலகமும் வீதிதோறும் வாசிப்பும் முன்னெடுக்க வேண்டும். கைப்பேசியை விட்டுவிட்டு புத்தகத்தை எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

**மா.பழனி, கூத்தப்பாடி.**

### மாற்றுவழி தேடலாம்

உலக அளவில் அரிய தனிமங்களின் ஆட்சிதான் இன்று கொடிகட்டிப் பறந்து கொண்டிருக்கிறது ('வளர்ச்சிக்குத் தரும் விலை...'–ஆசிரியர் உரை, 16.09.25). சீனாவின் ஆட்சி முறைச் சூழல் எவரின் அனுமதியின்றியும் எங்கிருந்தும் அரிய தனிமங்களைத் தோண்டியெடுத்து சுத்திகரித்து விநியோகிக்கச் செய்ய ஏதுவாக உள்ளது. ஆனால், இந்தியாவில் சட்டத்தின் ஆட்சியோடு நீதியின் ஆட்சியும் சீரிய முறையில் நடைபெறுவதால் மக்களுக்கு அச்சுறுத்தலாக உள்ள எந்தச் செயலையும் அரசு தன்னிச்சையாகச் செய்துவிட இயலாது. அரிய தனிமங்களுக்கு மாற்றாக ஆய்வுகளை முடுக்கிவிட்டு மாற்று உத்திகளை காண முயல வேண்டும். மக்களின் உரிமைகளையும் மாநில அரசின் உரிமைகளையும் பறிக்க முயல்வது ஜனநாயக ஆட்சி முறைக்கு எதிரானது என்பதால், அதைக் கைவிடுவதே பலன் அளிக்கும்.

**த.முருகவேள், விழுப்புரம்.**

### காந்தியமே நல்வழி

இளைஞர்கள் 100 பேரைத் தாருங்கள் இந்த தேசத்தை மாற்றிக் காட்டுகிறேன் என்ற துடிப்பும், பிடிப்புமிகு வார்த்தையை உணர்ச்சிகரமாகப் பரிமாறி இளைஞர்கள் மீதான நம்பிக்கையைப் பதிவு செய்தவர் சுவாமி விவேகானந்தர் ('இளைஞர்களின் இன்றைய தேவை'–கட்டுரை–கோதை ஜோதிலட்சுமி, 16.09.25). அண்மையில் தன் தலைவனைக் காணச் சென்ற இளைஞர் நெரிசலில் தூக்கி எறியப் படுவதையும், அவரின் குடும்பம் படும் பாட்டையும் எச்சரிக்கைப் பதிவாக்கியிருப்பது எதார்த்தமானது. மனம், உடல் இரண்டின் ஆரோக்கியத்துக்கும் காந்தியமே நல்ல வழி என்று கூறி, அதைப் புதுப்பித்து விட்டார் கட்டுரையாளர். தெய்வ நம்பிக்கையும், பக்தியும் மட்டும்தான் சத்தியப் பாதையில் செல்லும் வழி என்று கூறி பாராட்டி விட்டார்.

**ஆர்.விநாயகராமன், திசையன்விளை.**

### விளையாட்டுகள் அழிந்ததால்...

இன்றைய உலகில் மனிதன் பணம்சேர்க்கும் இயந்திரமாகவே வளர்ந்து வருகிறான். அதற்கேற்ப அனைத்தையும் வகுத்துக் கொள்கிறான் ('மருத்துவர்களும் மன அழுத்தமும்!'–, துணைக் கட்டுரை– மருத்துவர் ராஜேஷ் கோபால், 16.09.25). படிப்பு மட்டுமே வாழ்க்கை என்ற மன அழுத்தம் குழந்தைகளுக்கு சமுதாயத்தால் கட்டப்படுகிறது. குழந்தைகள் ஒன்றுகூடி விளையாடுவது குறைந்து விட்டது. கிராமப்புற விளையாட்டுகள் அழிந்துவிட்டன. கல்வி நிறுவனங்களில் உடற்கல்வி வகுப்புகள் அனைத்தும் பாட வகுப்புகளாக மாறுகின்ற அவலநிலை. குழந்தைகள் விளையாடுவதை பெற்றோரும் விரும்புவதில்லை. வீடுகளிலும் பள்ளிகளிலும் குழந்தைகளை விளையாட அனுமதிக்க மறுத்ததன் விளைவைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

**வீ. வேணு குமார்,கண்ணமங்கலம்.**

## முதலும்... முக்கியமும்...

முனைவர் கோ.விசுவநாதனின் கட்டுரை மிக நன்று ('அன்றே சொன்னார் அறிஞர் அண்ணா!'–கட்டுரை– கோ.விசுவநாதன், 15.09.25). பெரியார் ஈ.வெ.ரா.வும் அண்ணாவும் மிக முக்கியமான தீர்மானங்களை சிதம்பரம் நகர் டவுன் ஹால் மைதானத்தில் நடைபெறும் கூட்டங்களிலேயே வெளியிடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். திராவிட நாடு திராவிடருக்கே என்ற கொள்கையை ஒதுக்கிவைக்கும் நடைமுறையை அங்குதான் சொன்னார் அண்ணா. அப்போது, நான் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் ஆசிரியராக இருந்தேன். அவர் அன்று பயன்படுத்திய சொற்றொடர் 'முதல் வேலை. முக்கிய வேலை என்று இரண்டு. முக்கிய வேலை திராவிட நாடு பெறுவது. முதல் வேலை எதிரியை விரட்டுவது. முதல் வேலையை முடித்தபிறகு முக்கிய வேலைக்கு வரலாம்' என்பதே.

**சே.சாதிக், மேனாள் துணைவேந்தர் – சென்னைப் பல்கலைக்கழகம்.**

### ஏர்செல்–மேக்சிஸ் வழக்கு

# மேக்சிஸ் நிறுவனத்துக்கு தில்லி நீதிமன்றம் புதிதாக சம்மன்

**புது தில்லி, செப்.21:** ஏர்செல்–மேக்சிஸ் ஊழல் வழக்கு தொடர்பாக மலேசிய தொலைத்தொடர்பு நிறுவனமான மேக்சிஸ் நிறுவனத்துக்கு தில்லி சிறப்பு நீதிமன்றம் புதிதாக சம்மன் பிறப்பித்துள்ளது.

கடந்த 2006–ஆம் ஆண்டு மத்திய நிதியமைச்சராக ப.சிதம்பரம் பதவி வகித்தபோது ஏர்செல்–மேக்சிஸ் நிறுவனங்களுக்கு இடையே ரூ.3,500 கோடிக்கும் அதிகமான மதிப்புகொண்ட ஒப்பந்தத்துக்கு அந்நிய முதலீட்டு மேம்பாட்டு வாரியம் (எஃப்ஐபிபி) ஒப்புதல் அளித்தது.

ரூ.600 கோடி வரையிலான மதிப்புகொண்ட ஒப்பந்தங்களுக்கு மட்டுமே எஃப்ஐபிபி மூலம் ஒப்புதல் அளிக்க மத்திய நிதியமைச்சருக்கு அதிகாரம் உள்ள நிலையில், தனது அதிகார வரம்பை மீறி ஏர்செல்–மேக்சிஸ் ஒப்பந்தத்துக்கு ப.சிதம்பரம் ஒப்புதல் அளித்ததாக குற்றச்சாட்டு எழுந்தது. இதன்மூலம் அவரும், அவரின் மகனும் காங்கிரஸ் எம்.பி.யுமான கார்த்தி சிதம்பரமும் சட்டவிரோதமாக பலன் அடைந்ததாக சிபிஐ, அமலாக்கத் துறை வழக்குப் பதிவு செய்தன.

இந்த வழக்கு தொடர்பாக சிபிஐயின் கோரிக்கையை ஏற்று மேக்சிஸ் நிறுவனத்துக்கும், அந்த நிறுவனத்தின் முன்னாள் இயக்குநர் அகஸ்டஸ் ரால்ஃப் மார்ஷுக்கும் தில்லி சிறப்பு நீதிமன்றம் புதிதாக சம்மன் பிறப்பித்துள்ளது.

இவ்வழக்கு தொடர்பாக ஆஸ்ட்ரோ ஆல் ஏஷியா நெட்வர்க் என்ற மற்றொரு மலேசிய நிறுவனத்துக்கும் சம்மன் பிறப்பிக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் சிறப்பு நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

இந்த சம்மன்களை மலேசியாவில் வழங்க 3 மாதங்கள் கால அவகாசம் அளிக்குமாறு நீதிமன்றத்தில் சிபிஐ கோரிக்கை விடுத்துள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

# நேபாளத்தில் மேலும் 5 புதிய அமைச்சர்கள் நியமனம்

### இன்று பதவியேற்பு

**காத்மாண்டு, செப். 21:** நேபாளத்தில் மேலும் 5 புதிய அமைச்சர்களை அந்நாட்டு அதிபர் ராமசந்திர பௌடேல் நியமித்தார். 5 பேரும் திங்கள்கிழமை (செப்.22) பதவியேற்க உள்ளனர்.

நேபாளத்தில் ஆட்சியாளர்களின் ஊழலுக்கு எதிராக இளைஞர்கள் தீவிர போராட்டத்தில் ஈடுபட்டனர். 2 நாள்களாக நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் வன்முறை ஏற்பட்டு அந்நாட்டு நாடாளுமன்றம், உச்சநீதிமன்றம், அதிபர், பிரதமர் மற்றும் அமைச்சர்களின் வீடுகளை போராட்டக்காரர்கள் சூறையாடினர். இதைத் தொடர்ந்து, பிரதமர் பதவியை கே.பி.சர்மா ஓலி ராஜிநாமா செய்தார். அவர் ராஜிநாமா செய்ததைத் தொடர்ந்து, ராணுவத்தின் கட்டுப்பாட்டில் நேபாளம் இருந்தது.

பின்னர், நேபாள இடைக்கால பிரதமராக அந்நாட்டின் முன்னாள் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி சுசீலா கார்கி பதவியேற்றார். தற்போது அந்நாட்டில் அமைந்துள்ள இடைக்கால அரசின் அமைச்சரவையில் அனில்குமார் சின்ஹா, மகாவீர் பன், சங்கீதா கௌஷல் மிஸ்ரா, ஜகதீஷ் காரேல், மதன் பரியார் ஆகிய 5 பேரை அமைச்சர்களாக நியமிக்க வேண்டும் என்று அந்நாட்டு அதிபர் ராமசந்திர பௌடேலிடம் சுசீலா கார்கி பரிந்துரைத்தார்.

அவரின் பரிந்துரையை ஏற்று 5 பேரையும் அமைச்சர்களாக அதிபர் ராமசந்திர பௌடேல் நியமித்துள்ளார். அவர்கள் தலைநகர் காத்மாண்டில் உள்ள அதிபர் மாளிகையில் திங்கள்கிழமை பதவியேற்க உள்ளனர்.

5 பேரில் அனில்குமாருக்கு தொழில் துறை மற்றும் வர்த்தகம், மகாவீர் பன்னுக்கு கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சங்கீதாவுக்கு சுகாதாரம் மற்றும் மக்கள்தொகை, ஜகதீஷ் காரேலுக்கு தகவல் தொடர்பு, மதன் பரியாருக்கு விவசாயம் ஆகிய துறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவர்களையும் சேர்த்து நேபாள இடைக்கால அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கை 9–ஆக அதிகரித்துள்ளது.

# தில்லியில் செப்.26–இல் காவிரி நீர் மேலாண்மை ஆணையக் கூட்டம்


நமது நிருபர்

**புது தில்லி, செப்.21:** காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 44–ஆவது கூட்டம் தில்லியில் செப்.26–ஆம் தேதி நடைபெற உள்ளது.

தமிழ்நாடு, கர்நாடகம் இடையேயான காவிரி நதிநீர் பங்கீட்டு பிரச்னையை கண்காணிப்பதற்காக காவிரி நீர் மேலாண்மை ஆணையம் மற்றும் காவிரி நீர் முறைப்படுத்தும் குழுவை அமைத்து கடந்த 2018–ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

இதையடுத்து, இந்த இரு அமைப்புகளும் அவ்வப்போது கூடி முடிவுகளை மேற்கொண்டு வருகின்றன. காவிரி நீர் மேலாண்மை ஆணையம் இதுவரை 43 முறை கூடியுள்ளது.

இந்நிலையில், காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 44–ஆவது கூட்டம் தில்லியில் நடைபெற உள்ளது. செப்.26– ஆம் தேதி பிற்பகல் 2.30 மணிக்கு அதன் தலைவர் எஸ்.கே.ஹல்தார் தலைமையில் தில்லியில் இக்கூட்டம் நடைபெற உள்ளதாக காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் செயலர் டி. டி.சர்மா தமிழ்நாடு, கர்நாடகம், கேரளம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களுக்கு தகவல் அனுப்பியுள்ளார்.




# நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம்: இதுவரை 4 லட்சம் பேர் பயன்

**சென்னை, செப். 21:** 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டத்தின் கீழ் இதுவரை 4.04 லட்சம் பேர் பயன் பெற்றுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டத்தைக் கடந்த மாதம் 2–ஆம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். அதன்படி, வாரந்தோறும் சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் உயர் மருத்துவக் கண்காணிப்பு முகாம்கள் நடைபெறுகின்றன.

பொது மருத்துவம், பொது அறுவை சிகிச்சை, இதய நலம், எலும்பியல் மருத்துவம், நரம்பியல், தோல் நலம், காது–மூக்கு–தொண்டை, மகப்பேறு, இயன்முறை சிகிச்சை, பல் மருத்துவம், மன நலம், குழந்தைகள் நலம், நுரையீரல் மருத்துவம், இந்திய மருத்துவம் ஆகிய துறைகளின் கீழ் மருத்துவ நிபுணர்களைக் கொண்டு பரிசோதனைகளும், சிறப்பு சிகிச்சைகளும் வழங்கப்படுகின்றன.

அதேபோல், முதல்வரின் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்தல் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்று வழங்குதல் போன்ற சேவைகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஏழாவது வாரமாக கடந்த சனிக்கிழமை 37 மாவட்டங்களில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்கள் நடைபெற்றன. அவற்றில் 67,997 பேர் பயனடைந்தனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் இதுவரை 260 முகாம்கள் நடைபெற்றதாகவும், அவற்றின் மூலம் 4.04 லட்சம் பேர் பயன்பெற்றுள்ளதாகவும் மக்கள் நல்வாழ்வுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம்: செப். 30–க்குள் தயாராக வேண்டும்

## அனைத்து மாநில தேர்தல் அதிகாரிகளுக்கு ஆணையம் அறிவுறுத்தல்

**புது தில்லி, செப். 21:** வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிக்கு செப்.30–ஆம் தேதிக்குள் தயாராக இருக்க வேண்டும் என்று அனைத்து மாநில தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.

இந்தக் காலக்கெடு நிர்ணயத்தின் மூலம் நாடு முழுவதும் அக்டோபர் அல்லது நவம்பரில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணி தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாநிலங்களில் முந்தைய சிறப்பு தீவிர திருத்தத்துக்குப் பின் வெளியிடப்பட்ட வாக்காளர் பட்டியலைத் தயாராக வைத்திருக்கும்படி, தலைமைத் தேர்தல் அதிகாரிகளுக்கு ஆணையம் தரப்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஏற்கெனவே பல்வேறு மாநிலங்களில் முந்தைய தீவிர திருத்தத்துக்குப் பிறகான வாக்காளர் பட்டியல், தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலக வலைதளங்களில் வெளியிடப்பட்டுள்ளன. தில்லியில் கடந்த 2008–இல் தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்ட நிலையில், அந்த ஆண்டில் இருந்து வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

இதேபோல், உத்தரகண்ட் மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலக வலைதளத்தில், 2006–ஆம் ஆண்டிலிருந்து வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. நடப்பாண்டு இறுதியில் பேரவைத் தேர்தல் நடைபெறும் பிகாரில் வாக்காளர் பட்டியலில் இருந்து சட்டவிரோத குடியேறிகளின் பெயர்களை நீக்கும் நோக்கில் அண்மையில் சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்டது.




**யாருக்கு ஆவணம் கட்டாயம்?:** பிகாரில் கடைசியாக சிறப்பு தீவிர திருத்தம் மேற்கொள்ளப்பட்ட 2003–ஆம் ஆண்டை அடிப்படையாகக் கொண்டு, தற்போது திருத்தப் பணிகள் நடைபெற்றன. அதன்படி, 2003–க்கு முன்பு பிகாரில் வாக்காளர்களாகப் பதிவு செய்தவர்கள் (சுமார் 60%), கூடுதல் ஆவணம் எதையும் சமர்ப்பிக்காமல், வாக்காளர்களாகத் தொடர அனுமதிக்கப்பட்டனர்.

2003–க்குப் பிறகு பதிவு செய்தவர்கள் (சுமார் 40%), கடவுச்சீட்டு, பிறப்புச் சான்று, ஆதார் உள்ளிட்ட 12 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைச் சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டது.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்துக்கு எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்துவரும் நிலையில், நாடு முழுவதும் இப்பணியை மேற்கொள்ள தேர்தல் ஆணையம் தயாராகி வருகிறது.

பெரும்பாலான மாநிலங்களில் 2002–2004 ஆண்டுகளுக்கு இடையே முந்தைய தீவிர திருத்தம் நடைபெற்றுள்ளது; அந்த அடிப்படையில், தற்போது பாதிக்கும் மேற்பட்ட வாக்காளர்கள் எந்தவொரு ஆவணத்தையும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியம் இருக்காது என்று தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழகம், அஸ்ஸாம், கேரளம், புதுச்சேரி மற்றும் மேற்கு வங்கத்தில் அடுத்த ஆண்டு பேரவைத் தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில், இந்த நடவடிக்கை முக்கியத்துவம் பெற்றுள்ளது.

தமிழகத்தில் முந்தைய சிறப்பு தீவிர திருத்தம் 2002–இல் மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### பெண்ணையாறு விவகாரம்

# 10 மாதங்களுக்குப் பிறகு நாளை மீண்டும் விசாரணை

நமது நிருபர்

**புது தில்லி,செப்.21:** தமிழ்நாடு–கர்நாடகம் இடையேயான பெண்ணையாறு விவகாரம் தொடர்பான வழக்கை 10 மாதங்களுக்கு பிறகு உச்சநீதிமன்றம் செவ்வாய்க்கிழமை (செப்.23) விசாரணைக்கு பட்டியலிட்டுள்ளது.

கடைசியாக இந்த வழக்கை உச்சநீதிமன்றம் கடந்த 2024, நவ.26–இல் விசாரித்தது.

தமிழ்நாடு, கர்நாடகம் இடையேயான பெண்ணையாறு பிரச்னை தொடர்பான வழக்கு கடந்த 6 ஆண்டுகளாக உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

பெண்ணையாறு விவகாரத்தில் கர்நாடகம் விதிகளை மீறி செயல்படுவதாக உச்சநீதிமன்றத்தில் தமிழகம் கடந்த 2018, மே.18–இல் வழக்குத் தொடர்ந்தது. பெண்ணையாற்றின் குறுக்கே கர்நாடகம் சட்டத்திற்கு புறம்பாக பெரிய அணைக்கான கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதனால், தமிழகத்தின் தண்ணீர் முற்றிலும் பறிக்கப்பட்டு மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனக் கூறி வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் பெண்ணையாறு விவகாரத்தில் நடுவர் மன்றம் அமைத்து தீர்வு காணுமாறு கடந்த 2019, நவ.14–ஆம் தேதி தீர்ப்பு வழங்கியது. ஆனால், தீர்ப்பாயம் விரைந்து அமைக்கப்படாமல் மத்திய அரசு தொடர்ந்து காலதாமதம் செய்தது. இதையடுத்து, தமிழ்நாடு கர்நாடகம் இடையான பெண்ணையாறு விவகாரத்தில் தீர்வு காண பேச்சுவார்த்தை குழு அமைக்குமாறு 2024, ஜன.23–ஆம் தேதி உச்சநீதிமன்றம் மத்திய அரசுக்கு உத்தரவிட்டது.

இதையடுத்து, இந்தப் பிரச்னையில் உடன்பாடு காண உச்சநீதிமன்ற உத்தரவுப்படி, மத்திய நீர்வள ஆணையத் தலைவர் தலைமையில் தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரம் மற்றும் புதுச்சேரி மாநில பிரதிநிதிகள் 9 பேர் அடங்கிய பேச்சுவார்த்தை குழுவை மத்திய ஜல் சக்தி அமைச்சகம் அமைத்தது.

இக்குழுவின் 8–ஆவது மற்றும் இறுதி கூட்டம் தில்லியில் உள்ள மத்திய நீர்வள ஆணைய அலுவலகத்தில் கடந்த 2024, செப்.28–இல் நடைபெற்றது. அந்தக் கூட்டத்திலும் உடன்பாடு எட்டப்படவில்லை. பெண்ணையாறு விவகாரத்தில் நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று தமிழ்நாடு இக்கூட்டங்களில் உறுதிபட தெரிவித்தது. இதையடுத்து, மேற்பார்வைக் குழு மத்திய அரசிடம் இது தொடர்பான அறிக்கையை தாக்கல் செய்தது.

இந்நிலையில், இந்த வழக்கு கடந்த 2024, நவ.26–இல் உச்சநீதிமன்றத்தில் நீதிபதிகள் ஹிருஷிகேஷ் ராய், எஸ்.வி.என். பாட்டீ ஆகியோர் அடங்கிய அமர்வில் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், 'மத்திய அரசு கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களுக்கிடையில் மத்தியஸ்த முயற்சியை மேற்கொண்டு பல தேதிகளில் விவாதங்கள் நடத்தப்பட்ட போதிலும், மத்தியஸ்த செயல்முறை வெற்றி பெறவில்லை.

கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஐஷ்வர்யா பாட்டீ, அறிக்கை தாக்கல் செய்ய அவகாசம் வழங்குமாறு கேட்டுக் கொண்டதால் 3 வார கால அவகாசம் வழங்கப்படுகிறது' என உத்தரவிட்டு விசாரணையை நீதிபதிகள் ஒத்திவைத்தனர்.

இந்நிலையில், 10 மாதங்களுக்குப் பிறகு இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (செப்.23) விசாரணைக்கு பட்டியலிடப்பட்டுள்ளது. நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா அமர்வில் இந்த வழக்கு விசாரணைக்கு வர உள்ளது.

# நாளை திமுக எம்.பி.க்கள் கூட்டம்

**சென்னை, செப். 21:** திமுக மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள் கூட்டம், கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் செவ்வாய்க்கிழமை (செப்.23) நடைபெறும் என்று திமுக பொதுச் செயலர் துரைமுருகன் அறிவித்துள்ளார்.

அண்ணா அறிவாலயத்தில் நடைபெறும் அக்கூட்டத்தில் பல்வேறு முக்கிய விஷயங்கள் குறித்து விவாதிக்கப்படும் எனத் தெரிகிறது. திமுகவைச் சேர்ந்த அனைத்து எம்.பி.க்களும் தவறாமல் கூட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பு இத்தகைய கூட்டம் நடைபெற்றது. அதில் நாடாளுமன்ற அவை அலுவல்களில் பல்வேறு விவகாரங்களை எழுப்புவது தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது.

தற்போது நடைபெறவுள்ள கூட்டத்தில் மத்திய அரசிடமிருந்து பெறப்பட வேண்டிய நிதி குறித்தும், வாக்காளர் பட்டியல் திருத்த விவகாரங்கள் குறித்தும் விவாதிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

# மேல்நிலைப் பள்ளிகளில் திறன் மேம்பாடு சார்ந்த பாடத் திட்டம்

## மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான்

**சென்னை, செப். 21:** மேல்நிலைப் பள்ளிகளில் திறன் மேம்பாடு சார்ந்த பாடத்திட்டத்தைச் சேர்க்க அரசு பரிசீலிப்பதாக மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் தெரிவித்தார்.

சென்னை ஐஐடி வளாகத்தில் நடைபெற்ற அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் (ஏபிவிபி) மாணவர்கள் மற்றும் சிந்தனையாளர்கள் அடங்கிய 'தக்ஷிண பாத்' மாநாட்டின் 2–ஆம் நாளான ஞாயிற்றுக்கிழமை 'இந்தியாவை சிந்தியுங்கள்' என்ற கருத்தரங்கில் மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேசியதாவது:

பல சவால்களுக்கிடையே தேசிய கல்விக் கொள்கையை அரசு செயல்படுத்தி வருகிறது. நாட்டில் பள்ளிக் கல்வியில் 26 கோடி மாணவர்களும், உயர்நிலைக் கல்வியில் 4 கோடி மாணவர்களும் படித்து வருகின்றனர். பள்ளிப் படிப்பை முடிப்பவர்களில் 30 சதவீதம் பேர் உயர்கல்விக்குச் செல்வதில்லை. இவர்களில் பெரும்பாலானோர் வேலைக்குச் செல்லும் கட்டாயத்தில் உள்ளனர். சிலர் தொழில் படிப்புகளுக்குச் செல்லலாம். ஆனால், 10 கோடி இளைஞர்கள் போதிய திறன் கல்வியறிவு இல்லாமல் பணிக்குச் செல்கின்றனர்.




சென்னை ஐஐடியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான். உடன், ஐஐடி இயக்குநர் வி.காமகோடி, மாநாட்டின் அமைப்பாளர் அகன்ஷாவரரே.

தற்போதைய பள்ளிக் கல்வி வெறும் புத்தக கல்வியாக இருந்து வருகிறது. இதைக் கருத்தில் கொண்டே, திறன் அடிப்படையிலான கல்வியை முதன்மை பரிந்துரையாக தேசிய கல்விக் கொள்கை குறிப்பிட்டுள்ளது.

தற்போது 6–ஆம் வகுப்பு முதல் திறன் பயிற்சியானது விருப்பப் பாடமாக உள்ளது. தேசிய கல்விக் கொள்கையின்படி, இது முறையான கல்வியாக மாற்றப்பட்டு திறன் மேம்பாடு என்பது ஒரு பாடமாகக் கொண்டுவரப்படும். இதேபோன்று பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புகளில் அறிவியல், வணிகம், மனிதநேயம் போன்றவற்றில் கவனம் செலுத்தப்படுகிறது. அதோடு, திறன் மேம்பாடு அடிப்படையிலான பாடத்திட்டத்தை அறிமுகப்படுத்தும் பணியில் அரசு ஈடுபட்டு வருகிறது. இதில் கணினி மொழி (கோடிங்), ட்ரோன், செயற்கை நுண்ணறிவு, குறை கடத்திகள் (செமி கண்டக்டர்) போன்றவற்றுக்கு பெரும் வரவேற்புள்ள நிலையில் அந்தத் துறைகளில் இளைஞர்களுக்குப் பயிற்சிஅளிக்க புதிய பாடத்திட்டத்தில் இணைக்க வேண்டும்.

அடுத்ததாக, கூடுதல் மொழிகள் கற்பதற்கு தேசிய கல்விக் கொள்கை முக்கியத்துவம் அளிக்கிறது. தாய் மொழியில் புலமை அவசியம். அதேநேரம், தொழில், வர்த்தகத் தொடர்புகளுக்கு மற்ற மொழிகள் தேவை என்பதாலே கூடுதல் மொழிகள் கற்க வலியுறுத்தப்படுகிறது.

தமிழகத்தில் வணிகவியல் படிக்கும் மாணவர், சென்னை ஐஐடியில் பி.எஸ்சி. –தரவு அறிவியலை படிக்கும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. கடந்த இரு ஆண்டுகளாக இந்தத் திட்டம் நடைமுறையில் உள்ளது. இதுபோன்று மாணவர்கள் மேற்கொள்ளும் பல்வேறு பணிகளுக்கும் ஊக்கமதிப்பு கட்டமைப்பு ஏற்படுத்தப்படும்.

வருகிற 2047 –இல் வளர்ச்சியடைந்த நாடாக மாறுவதற்கு, 100 சதவீதம் கல்வியறிவு பெறுவது அவசியம். 25 சதவீதம் கல்வியறிவு இல்லாதவர்கள் இருக்கும் நிலையில், 30 கோடி மணவர்கள் தலா 2 பேரை எடுத்துக்கொண்டால் கூட முழுமையான கல்வியறிவு பெற்ற நாடாக மாற்ற முடியும். இந்த முன்னெடுப்புக்கு, தேசிய கல்விக் கொள்கையில் 5 சதவீதம் ஊக்க மதிப்பு வழங்கப்படும்.

குறிப்பாக மாணவர், மாணவிகள் இந்தப் பணிக்குச் செல்லும்போது அவர்கள் சமூகத்தின் நிலையை அறிந்து கொள்ள முடியும். செயற்கை நுண்ணறிவு வேலைவாய்ப்புகளைப் பறிக்காது. அதேநேரம் நாட்டில் அனைவருக்கும் செயற்கை நுண்ணறிவு குறித்த அறிவு அளிக்கப்பட வேண்டும். 2047–இல் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக உருவாக்க தேசிய கல்விக் கொள்கையில் உள்ளவற்றை அரசு செயல்படுத்தும் என்றார் அவர்.

# 'மும்மொழி திணிப்பு என்று கூறுவது அரசியல் காரணங்களுக்கானது'

**சென்னை, செப்.21:** தமிழகத்தில் பல கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் மும்மொழியை படிக்கும் நிலையில், மும்மொழி திணிப்பு என்று கூறுவது அரசியல் காரணங்களுக்கானது என மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறினார்.

சென்னை ஐஐடி வளாகத்தில் நடைபெற்ற 'தக்ஷிண பாத்' மாநாட்டில் கலந்து கொண்ட அவர், பின்னர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

தமிழக பள்ளிகளில் தமிழ், ஆங்கிலத்தைத் தவிர மூன்றாவது மொழி ஒன்றையும் எடுத்து படித்து வருகின்றனர். இந்த நிலையில், மும்மொழிக் கொள்கையை ஏன் எதிர்க்க வேண்டும்? இது அரசியல் இல்லையா?

மத்திய அரசு எந்த மொழியையும் யார் மீதும் திணிக்கவில்லை. ஆரம்பப் பள்ளிகளில் தாய் மொழியோடு மற்றொரு மொழியைக் கற்பிக்க வேண்டும். 6 முதல் 10–ஆம் வகுப்பு வரை மும்மொழியைக் கற்பிக்க கூறுகின்றோம். தாய் மொழியோடு மற்ற இரு மொழியை அவர்கள் விருப்பப்படி கற்றுக்கொடுக்க குறிப்பிடுகிறோம். மும்மொழிக் கொள்கையை திணிப்பதாகக் கூறுவது அரசியல் ரீதியானது.

நாட்டில் 10 சதவீதம் மக்கள்தான் ஆங்கிலத்தில் பேசுகிறார்கள். மீதமுள்ளவர்கள் தங்கள் தாய்மொழியில் பேச விரும்புகின்றனர்.

உங்கள் விருப்பப்படி எந்த மொழியையும் கற்பிக்கலாம். அரசியல் ரீதியாக குறுகிய கருத்துகளைக் கொண்டவர்கள் பிரச்னையை எழுப்புகின்றனர். தமிழக அரசின் கல்வித் துறைக்கு வழங்க வேண்டி நிதி விவகாரம் குறித்தும் நாடாளுமன்றத்தில் விளக்கப்பட்டுள்ளது.

மதிய உணவு திட்டம் உள்ளிட்டவற்றுக்கு மத்திய அரசின் நிதி தமிழக அரசுக்கு ஆண்டுதோறும் கிடைத்துக் கொண்டிருக்கிறது. கல்வி உரிமை சட்ட விவகாரத்தில் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. மற்ற நிதி விவகாரம் குறித்து மத்திய அரசு சில ஆலோசனைகளை தமிழக அரசுக்கு வழங்கியுள்ளது. தமிழக கல்வித் துறை அமைச்சரும் திமுக நாடாளுமன்ற குழுத் தலைவர் கனிமொழியும் சந்தித்த போது அவர்களிடமும் விளக்கப்பட்டது.

சமக்ர சிக்ஷா திட்டத்தில் மத்திய அரசுடன் தமிழக அரசு புரிந்துணர்வு மேற்கொள்ளவேண்டும். மத்திய அரசு சில கொள்கைகளுக்கு கட்டுப்பட்டு செயல்படும் நிலையில் மாநில அரசும் அதில் பரஸ்பரத்துடன் இருக்க வேண்டும். அரசியல் காரணங்களுக்காக மாணவர்கள் மீது திணிக்கக் கூடாது என்றார் அவர்.

# சபரிமலைக்குத் திரும்பக் கொண்டுவரப்பட்ட துவார பாலகர் தங்கக் கவசங்கள்

**பத்தனம்திட்டா, செப். 21:** சென்னையில் செப்பனிடும் பணிக்குப் பிறகு துவார பாலகர் தங்கக் கவசங்கள், சபரிமலை கோயிலுக்கு ஞாயிற்றுக்கிழமை மீண்டும் கொண்டுவரப்பட்டதாக திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சபரிமலை ஐயப்பன் கோயிலின் கருவறைக்கு இருபுறமும் உள்ள துவார பாலகர் சிலைகளின் தங்கக் கவசங்கள், செப்பனிடும் பணிக்காக அண்மையில் கழற்றப்பட்டு, சென்னைக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அதேநேரம், சபரிமலை சிறப்பு ஆணையரின் ஒப்புதலின்றி, தங்கக் கவசம் கழற்றப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. மேலும், கடந்த 2019-ஆம் ஆண்டில் தங்கக் கவசங்களின் மறுஉருவாக்கப் பணியில் 4.5 கிலோ எடை குறைந்ததாகவும் சர்ச்சை எழுந்தது. இந்த விவகாரத்தை தீவிரமாக கவனத்தில் கொண்ட கேரள உயர்நீதிமன்றம், ஊழல் கண்காணிப்புப் பிரிவு விசாரணைக்கு உத்தரவிட்டது.

இந்நிலையில், திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரிய அதிகாரிகள் தெரிவிக்கையில், 'சென்னையில் செப்பனிடும் பணி நிறைவடைந்து, துவார பாலகர் தங்கக் கவசங்கள் மீண்டும் சபரிமலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. இதுகுறித்து கேரள உயர் நீதிமன்றத்தில் விரைவில் தகவல் தெரிவிக்கப்படும். உரிய சடங்குகளுக்குப் பிறகு தந்திரியின் ஒப்புதலுடன் கவசங்கள் மீண்டும் பொருத்தப்படும்' என்றனர்.

# கேரள முதல்வர் பினராயி விஜயன் ஒரு போலி பக்தர்

## வி.டி.சதீசன் குற்றச்சாட்டு

**கொச்சி, செப். 21:** கேரள முதல்வர் பினராயி விஜயன் ஒரு போலி பக்தர் என்று அம்மாநில சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் பிரமுகருமான வி.டி.சதீசன் குற்றம்சாட்டினார்.

கேரள மாநிலம் சபரிமலையில் உள்ள ஐயப்பன் கோயிலை திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரியம் நிர்வகிக்கிறது. இந்த வாரியத்தின் 75-ஆவது ஆண்டு விழாவையொட்டி 'ஐயப்ப சங்கமம்' என்ற மாநாட்டை கேரள அரசு நடத்தியது.

இது தொடர்பாக கோதமங்கலத்தில் காங்கிரஸ் கட்சி சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற பின் வி.டி.சதீசன், செய்தியாளர்களிடம் கூறியதாவது: 'ஐயப்ப சங்கமம்' மாநாட்டைத் தொடங்கி வைத்த பின் போலி பக்தரைப் போல் முதல்வர் பினராயி விஜயன் பேசினார். அவர் காட்டியுள்ள பக்தியானது அவருக்கு பொருத்தமானது அல்ல; மாறாக மாநிலத்தில் நடைபெற உள்ள தேர்தல் மீது கண்வைத்து முதல்வர் நடத்தியுள்ள நாடகம் இது. தனது பதவிக்காலத்தில் மரபுகளை மீறி சபரிமலையில் போலீஸாரின் உதவியுடன் நடத்தப்பட்டவற்றை அவர் மறைத்துவிட்டார்.

சபரிமலையில் பெண்கள் நுழைவதற்கு உள்ள தடை விவகாரத்தில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப் பத்திரம் தொடர்பாக காங்கிரஸ் எழுப்பியுள்ள கேள்விகளுக்கு இதுவரை பதில் அளிக்கப்படவில்லை. அரசியலுக்கு மதச்சாயம் பூசக் கூடிய வேறுபட்ட அரசியல் இது. எங்களைப் பொறுத்தவரை, மதம், பக்தி போன்றவை தனிநபர் விவகாரங்கள் ஆகும்.

சபரிமலை தொடர்புடைய விவகாரங்களை கேரளத்தை ஆளும் மார்க்சிஸ்ட் கூட்டணி அரசு சரிவர கையாளவில்லை. சபரிமலை கோயிலை மேம்படுத்த முந்தைய ஐக்கிய ஜனநாயக முன்னணி அரசு 112 ஹெக்டேர் வனப்பகுதி நிலத்தை கையகப்படுத்தியிருந்தது. ஆனால் அங்கு இதுவரை எந்தப் பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த ஒன்பதரை ஆண்டு கால மார்க்சிஸ்ட் கூட்டணி ஆட்சியில் சபரிமலையில் எந்த வளர்ச்சிப் பணியும் மேற்கொள்ளப்படவில்லை.

சபரிமலை கோயிலுக்கு அளிப்பதாகக் கூறிய நிதியையும் மாநில அரசு ஒதுக்கவில்லை. சபரிமலைக்கு ஒவ்வோர் ஆண்டும் ரூ.10 கோடி தரப்படும் என்று அரசு அறிவித்திருந்தது. ஆனால் அந்த விவகாரத்தில் அரசு சொன்ன வார்த்தையைக் காப்பாற்றாமல் கடமை தவறிவிட்டது.

துப்புரவு சங்கச் செலவுகளை மாநில அரசும், திருவிதாங்கூர் தேவஸ்வம் வாரியமும் கூட்டாக செய்ய வேண்டும். ஆனால் இந்த விவகாரத்தில் மாநில அரசு எந்தத் தொகையையும் அளிக்கவில்லை. செலுத்த வேண்டிய முழுத் தொகையையும் தேவஸ்வம் வாரியம்தான் செலுத்தி வருகிறது.

'ஐயப்ப சங்கமம்' மாநாடு தொடர்பாக திருவனந்தபுரத்தில் ஒரு ஃபிளக்ஸ் பலகை வைக்கப்பட்டிருந்தது. ஆனால் அதில் சுவாமி ஐயப்பனின் படம் இல்லை. அந்தப் பலகையில் முதல்வர் பினராயி விஜயன் மற்றும் தேவஸ்வம் துறை அமைச்சர் வி.என்.வாசவன் படங்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. தேவஸ்வம் வாரியத் தலைவரின் படம் கூட அந்தப் பலகையில் இடம்பெறவில்லை என்றார் அவர்.

# ஜம்மு-காஷ்மீர் வளர்ச்சிக்கு அமைதி அவசியம்

## முதல்வர் ஒமர் அப்துல்லா

**ஸ்ரீநகர், செப். 21:** ஜம்மு-காஷ்மீரின் வளர்ச்சிக்கும், சுற்றுலா மற்றும் விளையாட்டுத் துறைகள் செழிக்கவும் பிராந்தியத்தில் அமைதி அவசியமாகும் என்று முதல்வர் ஒமர் அப்துல்லா ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

ஸ்ரீநகரில் உள்ள டிஆர்சி மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில், ரியல் காஷ்மீர் எஃப்சி கால்பந்து அணிக்காக உருவாக்கப்பட்ட அமைதியை வலியுறுத்தும் சிறப்பு ஜெர்சியை முதல்வர் ஒமர் அப்துல்லா அறிமுகப்படுத்தினார்.

இதைத்தொடர்ந்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் கூறியதாவது: ரியல் காஷ்மீர் எஃப்சி கால்பந்து அனைத்து மக்களை ஒன்றிணைக்க முடியும் என்பதை நிரூபிக்கிறது. இந்த ஜெர்சியின் வடிவமைப்பு காஷ்மீரின் கலாசாரம் மற்றும் நம்பிக்கைகளை மதிக்கிறது.

இது ஹரி பர்பத் கோட்டையால் ஈர்க்கப்பட்டு உருவாக்கப்பட்டது. இதில் உள்ள குருத்வாரா, கோயில் மற்றும் சந்நிதி மத நல்லிணக்கத்தைக் காட்டுகிறது. அமைதியைக் குறிக்கும் விதமாக நீல நிறத்தில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

வளர்ச்சி, சுற்றுலா மற்றும் விளையாட்டு என அனைத்துக்கும் அமைதி அவசியமானது. பகலிலும் இரவிலும் போட்டிகளை நடத்த வேண்டுமென்றால், நமக்கு அமைதியான சூழல் தேவை. இல்லையெனில், மாலையில் விளையாட யார் வருவார்கள்?

ஆனால், அமைதியை நிலைநாட்டுவது எனது பொறுப்பு அல்ல. பொறுப்பில் உள்ளவர்களே தங்கள் பணிகளைச் சரியாக செய்ய வேண்டும். சட்டம் ஒழுங்கு யூனியன் பிரதேச அரசின் கட்டுப்பாட்டில் இல்லாவிட்டாலும், ஜம்மு-காஷ்மீரில் நடக்கும் அனைத்திற்கும் எங்கள் அரசின் மீது பழி சுமத்தப்படுகிறது.

ஜம்மு-காஷ்மீரில் அமைதியை ஏற்படுத்தும் நோக்கில் ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதிகளிலும் விளையாட்டு வசதிகளை உருவாக்கி வருகிறோம். பந்தயங்கள் மற்றும் போட்டிகள் போன்ற நிகழ்வுகள் மாவட்ட மற்றும் துணை மாவட்ட அளவில் நடத்தப்படுகின்றன.

ஸ்ரீநகரில் இரண்டாவது காஷ்மீர் மாரத்தான் நவம்பர் 2-ஆம் தேதி நடைபெறுகிறது. நாடு முழுவதிலுமிருந்து குறிப்பாக அரை மாரத்தானில் ஆர்வமுள்ள விளையாட்டு வீரர்கள் இதில் கலந்து கொள்ள அழைப்பு விடுக்கிறேன் என தெரிவித்தார்.




ஸ்ரீநகரில் ரியல் காஷ்மீர் எஃப்சி கால்பந்து அணிக்காக உருவாக்கப்பட்ட சிறப்பு ஜெர்சியை ஞாயிற்றுக்கிழமை அறிமுகம் செய்த ஜம்மு-காஷ்மீர் முதல்வர் ஒமர் அப்துல்லா.

# ஜிஎஸ்டி குறைப்பு பாராட்டுக்கு மத்திய அரசு உரிமை கோருவதா?

## மம்தா பானர்ஜி கண்டனம்


**கொல்கத்தா, செப். 21:** ஜிஎஸ்டி விகிதங்களைக் குறைப்பதற்கான யோசனை மாநில அரசுகளிடம் இருந்து வந்தபோதிலும், அதற்கான தேவையற்ற பாராட்டுகளை மத்திய அரசு பெற்று வருகிறது என மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி விமர்சித்துள்ளார்.

நவராத்திரியின் முதல் நாளிலிருந்து ஜிஎஸ்டி சேமிப்பு விழா தொடங்கும் என்று பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை ஆற்றிய உரையைத் தொடர்ந்து மம்தா பானர்ஜி இவ்வாறு கூறியுள்ளார்.

'வருமான வரி விலக்குடன் சேர்த்து, பெரும்பாலான மக்களுக்கு இரட்டை வெகுமதியாக இந்த ஜிஎஸ்டி குறைப்பு இருக்கும்' என்று பிரதமர் மோடி தெரிவித்திருந்தார்.

இதைத் தொடர்ந்து பிரதமரின் பெயரைக் குறிப்பிடாமல் மம்தா பானர்ஜி கூறியதாவது: 'ஜிஎஸ்டியால் நாங்கள் ரூ.2000 கோடி வருவாயை இழக்கிறோம். இப்போது ஜிஎஸ்டி குறைக்கப்பட்டதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் உடனான ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் இது மாநிலங்களால் முன்மொழியப்பட்டது.

ஆனால், இதற்கு மத்திய அரசு ஏன் பெருமையைக் கோருகிறது' என தெரிவித்தார்.



கொல்கத்தாவில் நவராத்திரி பண்டிகையையொட்டி அமைக்கப்பட்டுள்ள பந்தலில் பிரம்மாண்ட துர்கை சிலையை ஞாயிற்றுக்கிழமை பார்வையிட்ட மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி.

# அமெரிக்க அச்சுறுத்தலுக்கு அடிபணியக் கூடாது

## மத்திய அரசுக்கு மார்க்சிஸ்ட் வலியுறுத்தல்

**புது தில்லி, செப். 21:** இந்தியாவுக்கு எதிராக அச்சுறுத்தும் தந்திரங்களை அமெரிக்கா கையாளுகிறது. இதற்கு மத்திய அரசு அடிபணிந்துவிடக் கூடாது என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இந்திய தகவல்தொழில்நுட்பப் பணியாளர்கள் அமெரிக்காவுக்கு சென்று பணியாற்ற வழி வகுக்கும் ஹெச்1பி விசா கட்டணத்தை சுமார் ரூ.88 லட்சமாக உயர்த்துவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்தற்கு மார்க்சிஸ்ட் அரசியல் தலைமைக் குழு (பொலிட் பீரோ) கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பான பொலிட்பீரோ அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

அச்சுறுத்தலான, நியாயமற்ற நடவடிக்கைகள் மூலம் அமெரிக்கா அளிக்கும் நெருக்கடியால் மத்திய அரசு அடிபணிந்துவிடக் கூடாது. அதிபர் டிரம்ப்பின் நிர்வாகம் ஒரு தலைப்பட்சமாக ஹெச்1பி விசா கட்டணத்தை உயர்த்தியதற்கு பொலிட்பீரோ கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

அமெரிக்க அரசின் இந்த செயல்பாடு பிற நாடுகளை அடிபணிய வைக்க அவர்கள் என்னவெல்லாம் செய்வார்கள் என்பதற்கு மற்றொரு உதாரணமாகும். ஏற்கெனவே, அவர்கள் வரி விதிப்பு விவகாரத்திலும் இதேபோல செயல்பட்டார்கள். இந்திய ஏற்றுமதிப் பொருள்கள் மீது 50 சதவீத வரி விதிப்பு, ஈரானில் இந்தியா மேற்கொள்ளும் சாபஹார் துறைமுகம் திட்டத்துக்கு அளித்துவந்த பொருளாதாரத் தடை விலக்கைத் திரும்பப் பெற்றது என இந்தியாவுக்கு நெருக்கடி அளிக்க வேண்டும் என்ற நோக்கிலேயே அமெரிக்கா செயல்பட்டு வருகிறது.

அமெரிக்காவின் நியாயமற்ற கோரிக்கைகளை இந்தியா ஏற்று நடக்க வேண்டும் என்பதே அவர்களின் திட்டமாக உள்ளது. இதற்கு உரிய முறையில் நேரடியாக பதிலளிக்காமல் நமது பிரதமர் சுயசார்பு குறித்துப் பேசி வருகிறார். இது பிரச்னையில் இருந்து நழுவிச் செல்லும் நடவடிக்கையாகும். வெளியுறவு அமைச்சகத்திடம் இருந்து பரிதாபகரமான பதில்களே வருகின்றன. இது தேசத்துக்கு அவமானத்தைத் தேடித் தருவதாக உள்ளது.

இந்திய அரசு ஒருபோதும் அமெரிக்காவுக்கு அடிபணியாது, இந்தியர்களின் நலன்களைக் காப்பதில் விட்டுக் கொடுக்க மாட்டோம் என்பதை அமெரிக்காவிடம் இந்தியா உறுதியாகத் தெரிவிக்க வேண்டும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# ஜிஎஸ்டி சீர்திருத்தங்களுக்கு பிரதமர் மட்டுமே உரிமைகோருகிறார்

## காங்கிரஸ் விமர்சனம்

**புது தில்லி, செப்.21:** சரக்கு மற்றும் சேவை வரியில் (ஜிஎஸ்டி) மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்தங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி மட்டுமே உரிமை கோருவது ஏற்புடையதல்ல என காங்கிரஸ் ஞாயிற்றுக்கிழமை விமர்சித்தது.

ஜிஎஸ்டியின்கீழ் விதிக்கப்படும் 5%, 12%, 18%, 28% என்ற நான்கு விகிதங்களை 5%,18% என இரண்டாக குறைக்கும் நடைமுறை திங்கள்கிழமை (செப்.22) முதல் அமலாகவுள்ள நிலையில், நாட்டு மக்களிடம் காணொலி வாயிலாக பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை உரையாற்றினார்.

இதை விமர்சித்து காங்கிரஸ் தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், 'காங்கிரஸ் கட்சி முன்மொழிந்த எளிமையான ஜிஎஸ்டிக்கு பதிலாக கடந்த 8 ஆண்டுகளில் 9 வகையான விகிதங்களில் வரி விதித்து ரூ.55 லட்சம் கோடியை மத்திய அரசு வசூலித்துள்ளது. இந்நிலையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள சீர்திருத்தங்கள் மூலம் ரூ.2.5 லட்சம் கோடி சேமிக்கப்படுவதை பிரதமர் மோடி மிகைப்படுத்தி சேமிப்புத் திருவிழா எனக்கூறுவது மீள முடியாத காயத்துக்கு முதலுதவி சிகிச்சை அளிப்பதுபோல் உள்ளது.



தானியங்கள், அரிசி, புத்தகங்கள், மருத்துவசிகிச்சை, டிராக்டர்கள் என அனைத்துப் பொருள்கள் மீதும் ஜிஎஸ்டி விதித்து அன்றாட வாழ்வை அவதிக்குள்ளாக்கிய உங்களை பொதுமக்கள் ஒருபோதும் மறக்க மாட்டார்கள். அவர்களிடம் மத்திய அரசு கட்டாயம் மன்னிப்பு கேட்க வேண்டும்' என குறிப்பிட்டார்.

காங்கிரஸ் பொதுச்செயலர் ஜெய்ராம்ரமேஷ் வெளியிட்ட எக்ஸ் வலைதளப் பதிவில், 'ஜிஎஸ்டி முறையில் சீர்திருத்தங்களை மேற்கொண்டதற்கு பிரதமர் மோடி மட்டுமே உரிமை கோருவது ஏற்புடையதல்ல; ஏனெனில் மாநிலங்களையும் உறுப்பினராகக் கொண்ட அரசமைப்புச் சட்ட அமைப்பான ஜிஎஸ்டி கவுன்சில் ஒப்புதல் அளித்த பிறகே இந்த சீர்திருத்தங்கள் அமலாகவுள்ளன.

பாஜக அரசில் அறிமுகப்படுத்தப்பட்ட 'சரக்கு மற்றும் சேவை வரி' என்பது 'வளர்ச்சியைத் தடுக்கும் வரி' என காங்கிரஸ் பலமுறை கூறியுள்ளது.

பல அடுக்குகளில் விதிக்கப்பட்டு மக்களின் வரிச்சுமையை அதிகரித்துவிட்டு தற்போது சீர்திருத்தம் மேற்கொண்டதாக பிரதமர் புகழாரம் சூட்டிக்கொள்கிறார். ஆனால் இந்த சீர்திருத்தங்களை மேற்கொள்ளக் கோரி ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்ட நாளில் இருந்து காங்கிரஸ் வலியுறுத்தி வருகிறது.

நாட்டின் பொருளாதாரத்துக்குப் பெரும் பங்களிப்பை வழங்கும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (எம்எஸ்எம்இ) தற்போதைய சீர்திருத்தத்தால் எவ்வித பயனும் இல்லை. மேலும் 5 ஆண்டுகளுக்கு இழப்பீட்டு வரியை நீட்டிக்குமாறு மாநிலங்கள் முன்வைத்த கோரிக்கைகளுக்கும் மத்திய அரசு செவிசாய்க்கவில்லை. அதேபோல் ஜவுளி, சுற்றுலா, ஏற்றுமதி, கைவினை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் உள்ள சிக்கல்களும் தீர்க்கப்படவில்லை' என குறிப்பிட்டார்.

# கர்நாடகத்தில் ஜாதிவாரி கணக்கெடுப்பு மூலம் ஹிந்துக்களை காங்கிரஸ் பிளவுபடுத்துகிறது

## பாஜக குற்றச்சாட்டு

**பெங்களூரு, செப். 21:** காங்கிரஸ் தலைமையிலான கர்நாடக அரசு, சமூக மற்றும் கல்விக் கணக்கெடுப்பு என்கிற பெயரில் ஜாதிவாரி கணக்கெடுப்பு மூலம் ஹிந்துக்களை பிரிக்க முயல்கிறது என பாஜக ஞாயிற்றுக்கிழமை குற்றஞ்சாட்டியது.

இந்தக் கணக்கெடுப்பு செப்டம்பர் 22 முதல் அக்டோபர் 7-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இதற்கு ரூ.420 கோடி செலவாகும் என தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பாக கர்நாடக பேரவை எதிர்க்கட்சித் தலைவர் ஆர் அஷோக் செய்தியாளர்களிடம் கூறியதாவது: இந்தக் கணக்கெடுப்புக்காக உருவாக்கப்பட்ட ஜாதிப் பட்டியலில் 'குருப கிறிஸ்தவர்', 'பிராமண கிறிஸ்தவர்' மற்றும் 'ஒக்கலிகா கிறிஸ்தவர்' போன்ற பெயர்கள் உள்ளன. கட்சிக்குள் ஏற்படும் மோதல்களை சமாளித்து முதல்வராக நீடிக்க கிறிஸ்தவ சமூகத்தையும், காங்கிரஸ் தலைவர்களையும் திருப்திப்படுத்த சித்தராமையா இதைச் செய்துள்ளார்.

ஹிந்து சமூகத்தை உடைக்கும் இந்தத் திட்டத்தின் பின்னணியில் சோனியா காந்தியும் ராகுல் காந்தியும் இருக்கிறார்கள்.

மத மாற்றங்களை ஊக்குவிக்கவும், மக்கள்தொகையில் குறைவாக ஹிந்துக்கள் இருப்பதாக சித்தரிக்கவும் இந்தக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது எனத் தெரிவித்தார்.

பாஜக மாநிலத் தலைவர் பி.ஒய். விஜயேந்திரா கூறுகையில், 'சித்தராமையா தலைமையிலான காங்கிரஸ் அரசின் சதித் திட்டங்களுக்கு அனைத்து ஜாதிகள் மற்றும் சமூகங்களைச் சேர்ந்த மக்களும் ஏமாறக் கூடாது. கணக்கெடுப்பின் மதப் பிரிவில் அனைவரும் 'ஹிந்து' என்றே எழுத வேண்டும்.

உங்கள் சமூகத்திற்கு ஏற்ப உங்கள் ஜாதி மற்றும் துணை ஜாதியைக் குறிப்பிடலாம்; ஆனால், நாட்டின் ஒற்றுமை மற்றும் பாதுகாப்புக்காக, நாம் அனைவரும் 'ஹிந்து' என்பதை நமது மதமாக எழுதுவது முக்கியம். இது நம்மை ஒற்றுமையாக வைத்திருக்க உதவும்' என்றார்.

'காங்கிரஸ் அதன் தலைவர் சோனியா காந்தி மற்றும் அவரது போலி காந்தி குடும்பத்தினரின் அறிவுறுத்தல்களின் கீழ் ஹிந்து சமூகத்தைப் பிரிக்க சதி செய்கிறது' என்று மத்திய அமைச்சரும் பாஜக மூத்த தலைவருமான பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

# நேபாள சிறையில் இருந்து தப்பிய 5 பேர் பிகாரில் கைது

**மோதிஹாரி, செப். 21:** நேபாளத்தில் அண்மையில் ஏற்பட்ட இளைஞர்கள்போராட்டத்தைப் பயன்படுத்தி சிறையில் இருந்து தப்பிய 5 வெளிநாட்டவர் பிகாரில் கைது செய்யப்பட்டனர். இவர்களில் நால்வர் சூடானைச் சேர்ந்தவர்கள், ஒருவர் பொலிவியா நாட்டவர் ஆவார்.

நேபாளத்தில் பல்வேறு சிறைகளில் 15,000-க்கும் மேற்பட்டோர் அடைக்கப்பட்டுள்ளனர். அண்மையில் அங்கு நடைபெற்ற இளைஞர்கள் போராட்டத்தில் வன்முறை மூண்டது. இதனைப் பயன்படுத்தி சிறையில் இருந்தும் பலர் தப்பினர்.

இவர்களில் சிலர் எல்லை தாண்டி இந்தியாவுக்குள் ஊடுருவியுள்ளனர்.

இது தொடர்பாக அந்நாட்டு அரசு எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கு தகவல் அளித்தது.

அதன்படி பிகார் காவல் துறையினருக்கு நேபாள சிறையில் இருந்த தப்பியோர் விவரம் அனுப்பி வைக்கப்பட்டது. இதன்படி காவல் துறையினர் பல்வேறு இடங்களில் சோதனை நடத்தினர்.

அப்போது மோதிஹாரி பகுதியில் பதுங்கியிருந்த 5 வெளிநாட்டவர் கைது செய்யப்பட்டனர். வன்முறையைப் பயன்படுத்தி நேபாள மத்திய சிறையில் இருந்த தப்பி இந்தியாவுக்குள் நுழைந்தது விசாரணையில் உறுதி செய்யப்பட்டது.

அவர்கள் இப்போது காவல் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளனர். மத்திய உளவுத்துறை அதிகாரிகளும் அவர்களிடம் விசாரணை நடத்தினர்.

# பிரதமரின் தாயார் குறித்து மீண்டும் அவதூறு: பாஜக குற்றச்சாட்டு

**பாட்னா, செப். 21:** பிரதமரின் மறைந்த தாயார் குறித்து மீண்டும் அவதூறான கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பாஜக குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்த ஆண்டு இறுதியில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற உள்ள பிகாரில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அண்மையில் வாக்காளர் உரிமைப் பயணத்தை நடத்தினார். இந்தப் பயணத்தியின் போது அமைக்கப்பட்ட மேடையில் இருந்தபடி ஒரு நபர் பிரதமரின் தாயாரைப் பற்றி அவதூறாகப் பேசியதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில், பிரதமரின் தாயார் குறித்து பிகாரில் மீண்டும் அவதூறான கருத்துகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பாஜக குற்றஞ்சாட்டியுள்ளது.

அண்மையில் ஆர்ஜேடி தலைவர் தேஜஸ்வி யாதவ் நடத்திய பிகார் அதிகார யாத்திரையில் பங்கேற்ற அக்கட்சியினரில் சிலர் பிரதமரின் தாயார் குறித்து அவதூறாகப் பேசியதாகக் கூறப்படுகிறது. இது தொடர்பான விடியோவை பிகார் துணை முதல்வர் சாம்ராட் செளதரி தனது எக்ஸ் வலைதளப் பக்கத்தில் ஞாயிற்றுக்கிழமை பகிர்ந்தார். அத்துடன் வெளியிட்ட பதிவில் அவர் கூறியிருப்பதாவது:

மோடியின் தாயாரை தேஜஸ்வி யாதவ் மீண்டும் அவமதித்துள்ளார். அவர் மீண்டும் ஒருமுறை பிகாரின் கலாசாரத்தை சிதைத்துள்ளார்.

தேஜஸ்வி யாதவ் நடத்திய யாத்திரையில் பங்கேற்றவர்கள் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு அவதூறாகப் பேசியுள்ளனர். அவர்களை தேஜஸ்வி ஊக்குவித்துள்ளார். இதுபோன்ற கொடூர மனப்பான்மைக்காகவும், அவதூறான நடத்தைக்காகவும் பிகாரின் தாய்மார்களும் சகோதரிகளும் தேஜஸ்வியை பொறுப்புக்கு ஆளாக்குவார்கள்.

எதிர்க்கட்சிகளுக்குப் பதிலடி தருவதற்கு தாய்மார்களையும் சகோதரிகளையும் அவமதிப்பது ஆர்ஜேடி கட்சியின் ஆயுதமாகிவிட்டதா? இந்த மலிவான அரசியலை பிகார் மக்கள் புரிந்துகொள்வதுடன் ஜனநாயக ரீதியில் பதிலடி கொடுக்கவும் செய்வார்கள் என்று அவர் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

பிகாரின் மற்றொரு துணை முதல்வரான விஜய் குமார் சின்ஹா, எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில் 'தேஜஸ்வியின் யாத்திரையில் பிரதமரின் தாயார் மீது மீண்டும் அவதூறு பரப்பப்பட்டுள்ளது. இவ்வாறு நடந்துகொள்ளும் தனது தொண்டர்களை ஆர்ஜேடி தலைவர் ஊக்குவிக்கிறார். இது அவர்களது மனப்பான்மையைக் காட்டுகிறது' என்று தெரிவித்துள்ளார்.

பாஜக மூத்த தலைவரும் மத்திய அமைச்சருமான நித்யானந்த் ராயும் நடந்த சம்பவத்தைக் கண்டித்துள்ளார். அவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவில் 'அவதூறாகப் பேசுவதில் பிஎச்டி பட்டம் பெற்றுள்ள தேஜஸ்வி யாதவும் அவரது கட்சியைச் சேர்ந்தவர்களும் மற்றொரு அவமானகரமான செயலைச் செய்துள்ளனர். தங்களின் தொடர் தோல்வியால் விரக்தி அடைந்துள்ள அவர்கள், பிரதமருக்கு எதிராக அவதூறு பரப்புகின்றனர். தங்களின் செயல் அம்பலமாகிவிட்டதை தேஜஸ்வி யாதவும் ஆர்ஜேடி தொண்டர்களும் உணர வேண்டும். தங்கள் நடத்தையின் மூலம் பிகார் மாநிலத்தின் 14 கோடி மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தியதற்கான விளைவை அவர்கள் சந்திக்க வேண்டியிருக்கும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

**ஆர்ஜேடி விளக்கம்:** பாஜகவின் குற்றச்சாட்டுகள் குறித்து ஆர்ஜேடி செய்தித் தொடர்பாளர் சித்தரஞ்சன் ககன் கூறுகையில் 'சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு முக்கியமான பிரச்னைகளில் இருந்து மக்களின் கவனத்தை திசைதிருப்ப பாஜக முயற்சிக்கிறது. இதை ஆர்ஜேடி அனுமதிக்காது. தற்போது வெளியாகியுள்ள விடியோ செயற்கையாக உருவாக்கப்பட்டது. தேஜஸ்வியின் யாத்திரை பெற்றுள்ள வெற்றியைக் கண்டு பாஜக தலைவர்கள் அச்சமடைந்துள்ளனர். சட்டப்பேரவைத் தேர்தலில் அவர்களுக்கு மக்கள் உரிய பதிலடியைக் கொடுப்பார்கள்' என்றார்.

## அறிவியல் நகரத்தில்...



பிகார் தலைநகர் பாட்னாவில் ஞாயிற்றுக்கிழமை புதிதாகத் திறக்கப்பட்டுள்ள அறிவியல் நகரத்தில் மறைந்த முன்னாள் குடியரசுத் தலைவர் ஏ.பி.ஜெ.அப்துல் கலாம் உருவச் சிலையை ஆர்வத்துடன் பார்வையிட்ட பார்வையாளர்கள்.

# பிஎஸ்எஃப் பயிற்சியில் ட்ரோன் இணைப்பு

**தேகான்பூர், செப். 21:** எல்லைப் பாதுகாப்புப் படையின் (பிஎஸ்எஃப்) பயிற்சித் திட்டத்தில் ட்ரோன் (ஆளில்லா விமானம்) போர்முறை பயிற்சிகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளன.

பாகிஸ்தானின் பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பிறகு மே மாதம் நடைபெற்ற ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையைத் தொடர்ந்து இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மத்திய பிரதேசத்தின் குவாலியர் மாவட்டத்தின் தேகான்பூரில் உள்ள பிஎஸ்எஃப் பயிற்சி மையத்தின் ருஸ்தம்ஜி தொழில்நுட்பக் கல்லூரியில் (ஆர்ஜேஐடி) மாணவர்களுக்கான ட்ரோன் தொழில்நுட்ப ஆய்வகம் தொடங்கப்பட்டுள்ளது. மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் துணை ராணுவப் படையால் நடத்தப்படும் ஒரே கல்லூரி ஆர்ஜேஐடி ஆகும். மேலும், அதிகாரிகள் மற்றும் நிபுணர்களின் உதவியுடன் காவல் துறை தொழில்நுட்ப புத்தாக்க மையத்தையும் பிஎஸ்எஃப் அமைத்துள்ளது.




பிஎஸ்எஃப் பயிற்சியில் இடம்பெற்ற ட்ரோன்.

இது தொடர்பாக பயிற்சி மையத்தின் இயக்குநர் ஷம்ஷேர் சிங் கூறியதாவது: பிஎஸ்எஃப் இப்போது ட்ரோன் தொழில்நுட்பத்தை அதன் பயிற்சியில் கட்டாயப் பாடமாகச் சேர்த்துள்ளது. இந்தியாவில் தயாரிக்கப்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பிஎஸ்எஃப் தன்னிறைவு பெற உதவும் வகையில் அண்மையில் ட்ரோன் பள்ளியும் திறக்கப்பட்டுள்ளது. இதை மேம்படுத்த புதிய விதிகள் மற்றும் நடைமுறைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

எல்லைகளில் ட்ரோன்களை எவ்வாறு திறம்பட பயன்படுத்துவது என்பதைத் திட்டமிட ஐஐடிகள் மற்றும் ஆராய்ச்சிக் குழுக்களுடன் ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. ட்ரோன் பள்ளி இதுவரை 45 பணியாளர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது. இரண்டாவது பிரிவு தற்போது பயிற்சியில் உள்ளது. ஒவ்வோர் ஆண்டும் 500 பேருக்கு பயிற்சி அளிக்க பிஎஸ்எஃப் திட்டமிட்டுள்ளது. இதற்கான உபகரணங்களை வாங்க சுமார் ரூ.20 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

வளர்ந்து வரும் அச்சுறுத்தல்களை சமாளிக்க உக்ரைன்-ரஷியா போன்ற போர்களிலும் அமெரிக்கா, சீனா, துருக்கி மற்றும் பாகிஸ்தான் போன்ற நாடுகளிலும் ட்ரோன் பயன்பாட்டை பிஎஸ்எஃப் ஆய்வு செய்து வருகிறது எனத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் மற்றும் வங்கதேசத்துடனான இந்தியாவின் 6,000 கி.மீ. எல்லையை பிஎஸ்எஃப் பாதுகாக்கிறது.

# குஜராத்தில் இருமுறை நிலஅதிர்வு: மக்கள் பீதி

**அகமதாபாத், செப். 21:** குஜராத் மாநிலம், கட்ச் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை இருமுறை நிலஅதிர்வு ஏற்பட்டதால் மக்கள் பீதியடைந்தனர்.

இது தொடர்பாக குஜராத் நிலநடுக்க ஆய்வு மையம் வெளியிட்ட அறிக்கையில், 'கட்ச் மாவட்டத்தின் தோலாவிரா பகுதியில் ஞாயிற்றுக்கிழமை காலை 6.40 மணியளவில் நிலஅதிர்வு ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோலில் 2.6 புள்ளிகளாக பதிவானது. பின்னர், பச்சாவ் பகுதியில் பகல் 12.40 மணியளவில் 3.1 ரிக்டர் அளவில் நிலஅதிர்வு ஏற்பட்டது' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலஅதிர்வுகளால் உயிர்ச் சேதமோ, பொருட்சேதமோ ஏற்பட்டதாகத் தகவல் இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். அதேநேரம், வீடுகள்-கட்டடங்கள் அதிர்ந்ததால் மக்கள் பீதியடைந்தனர்.

நிலநடுக்க அபாயம் அதிகம் உள்ள பூமிப் பகுதியில் கட்ச் மாவட்டம் அமைந்துள்ளது. இங்கு அடிக்கடி மிதமான நிலநடுக்கங்கள் ஏற்படுகின்றன.

கட்ச் பகுதியில் கடந்த 2001-இல் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் ஏராளமான நகரங்கள்-கிராமங்கள் பேரழிவைச் சந்தித்தன. சுமார் 13,800 பேர் உயிரிழந்தனர்; சுமார் 1.67 லட்சம் பேர் காயமடைந்தனர். கடந்த இரு நூற்றாண்டுகளில் இந்தியாவில் நேரிட்ட இரண்டாவது மிகப் பெரிய அழிவுகரமான நிலநடுக்கம் இதுவாகும்.

**மேகாலயத்தில் நிலஅதிர்வு:** மேகாலய மாநிலத்தையொட்டிய வங்கதேச பகுதியில் ஞாயிற்றுக்கிழமை காலை 11.50 மணியளவில் 4 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதன் எதிரொலியாக, மேகாலயத்தின் பல்வேறு பகுதிகளில் நிலஅதிர்வு உணரப்பட்டது. இதில் உயிர்ச்சேதமோ, பொருட்சேதமோ இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

# ஊதியம், ஓய்வூதியத்துக்கான மாநில அரசுகளின் செலவுகள் 2.5 மடங்கு உயர்வு

## தலைமை கணக்குத் தணிக்கையாளர்

**புது தில்லி, செப். 21:** ஊதியம், ஓய்வூதியம் மற்றும் பொதுக் கடனுக்கான வட்டி ஆகியவற்றுக்கு கடந்த பத்தாண்டுகளில் மாநில அரசுகள் மேற்கொண்ட செலவுகள் 2.5 மடங்கு உயர்ந்துள்ளதாக தலைமை கணக்குத் தணிக்கையாளர் (சிஏஜி) அலுவலகம் தெரிவித்தது.

மேற்கூறிய காரணங்களுக்காக கடந்த 2013-14-இல் அனைத்து மாநிலங்களும் ரூ.6.26 லட்சம் கோடி செலவிட்டிருந்த நிலையில், 2022-23-இல் இது ரூ.15.6 லட்சம் கோடியாக உயர்ந்ததாக மாநிலங்களின் நிதிநிலை குறித்து சிஏஜி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: 2013-14 முதல் 2022-23 வரையிலான 10 ஆண்டுகளில் மாநில அரசுகளின் மொத்த செலவுகளில் வருவாய் செலவுகளின் பங்கு 80-87 சதவீதமாக இருந்தது. அதேபோல் மாநிலங்களின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிஎஸ்டிபி) இது 13-15 சதவீதமாக இருந்தது.

**2022-23 மதிப்பீடு:** குறிப்பாக 2022-23-இல் மாநில அரசுகளின் மொத்த செலவுகளில் வருவாய் செலவுகளின் பங்கு 84.73 சதவீதமாகவும், அவற்றின் ஜிஎஸ்டிபியில் 13.85 சதவீதமாகவும் இருந்தது.

இதே காலகட்டத்தில் ஒட்டுமொத்தமாக மாநில அரசுகளின் வருவாய் செலவுகள் ரூ.35.95 லட்சம் கோடியாக இருந்தது. இதில் ஊதியம், ஓய்வூதியம் மற்றும் பொதுக் கடனுக்கான வட்டி ஆகியவற்றுக்கு கட்டாய செலவாக ரூ.15.63 லட்சம் கோடி, மானியங்களுக்கு ரூ.3.09 லட்சம் கோடி, உதவி மானியங்களுக்கு ரூ.11.26 லட்சம் கோடி என மொத்தம் ரூ.29.99 லட்சம் கோடி செலவிடப்பட்டுள்ளது. இது மொத்த வருவாய் செலவில் 83 சதவீதமாகும்.

அதேபோல் 2013-14-இல் ஊதியம், ஓய்வூதியம் மற்றும் பொதுக் கடனுக்கான வட்டி ஆகியவற்றுக்கு அனைத்து மாநிலங்களும் ரூ.6.26 லட்சம் கோடி செலவிட்டிருந்த நிலையில், 2022-23-இல் இது 2.5 மடங்கு அதிகரித்து ரூ.15.63 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

ஒட்டுமொத்தமாக இந்தப் பத்தாண்டு காலத்தில் வருவாய் செலவுகள் 2.66 மடங்காகவும், கட்டாய செலவுகள் 2.5 மடங்காகவும், மானியங்களுக்கான செலவுகள் 3.21 மடங்காகவும் அதிகரித்துள்ளன.

**வட்டிக்கு அதிகம் செலவிட்ட மாநிலங்கள்:** மாநில அரசுகள் தங்களது ஊழியர்களுக்கு ஊதியம் வழங்குவதற்காகவே 2022-23-இல் அதிக பணத்தைச் செலவிட்டுள்ளன. அதற்கு அடுத்தபடியாக ஓய்வூதியம் மற்றும் பொதுக் கடனுக்கான வட்டி செலுத்துவது ஆகியவை உள்ளன. 2022-23-இல் 19 மாநிலங்களில் இதே சூழல்தான் நீடித்துள்ளது.

ஆந்திரம், குஜராத், ஹரியாணா, கர்நாடகம், பஞ்சாப், ராஜஸ்தான், தமிழ்நாடு, தெலங்கானா மற்றும் மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களில் ஓய்வூதியத்தைவிட பொதுக் கடனுக்கான வட்டிக்கே அதிகம் செலவிடப்பட்டுள்ளது.

அதேபோல் 2013-14 முதல் 2021-22வரையிலான9 ஆண்டுகால கட்டத்தில் மாநில அரசுகள் ஊதியத்துக்கு அடுத்தபடியாக பொதுக் கடனுக்கான வட்டிக்கே அதிக பணத்தைச் செலவிட்டுள்ளன.

**12 மாநிலங்களில் வருவாய் உபரி:** 2022-23-இல் மொத்தமுள்ள 28 மாநிலங்களில் 17 மாநிலங்கள் வருவாய் உபரியை எட்டவும், 5 மாநிலங்கள் குறிப்பிட்ட வருவாய்ப் பற்றாக்குறை மற்றும் 6 மாநிலங்கள் பூஜ்ஜிய வருவாய் பற்றாக்குறையை எட்டுவதை இலக்காக நிர்ணயித்தன.

இதில் வருவாய் உபரியை இலக்காக நிர்ணயித்த 17 மாநிலங்களில் 12 மாநிலங்கள் தங்கள் இலக்கை எட்டின. அஸ்ஸாம், பிகார், ஹிமாசல பிரதேசம், மேகாலயா மற்றும் ராஜஸ்தான் ஆகியவை இந்த இலக்கை அடையவில்லை.

**வருவாய்ப் பற்றாக்குறை:** ஆந்திரம் 3.30 சதவீதம், ஹரியாணா 0.98 சதவீதம், கர்நாடகம் 0.78 சதவீதம், மகாராஷ்டிரம் 1.42 சதவீதம் மற்றும் பஞ்சாப் 1.99 சதவீதம் வருவாய்ப் பற்றாக்குறையை இலக்காக நிர்ணயித்தன. அவற்றில் கர்நாடக மாநிலம் வருவாய் உபரி நிலையை எட்டியது. மகாராஷ்டிரம் நிர்ணயித்த இலக்கை அடைந்தது. மீதமுள்ள 3 மாநிலங்களில் வருவாய்ப் பற்றாக்குறை அதிகரித்தது.

**12 மாநிலங்களுக்கு மானியங்கள்:** 2022-23-இல் 12 மாநிலங்களில் வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டது. அவற்றில் ஆந்திரம், அஸ்ஸாம், ஹிமாசல பிரதேசம், கர்நாடகம், கேரளம், பஞ்சாப், ராஜஸ்தான், தமிழ்நாடு மற்றும் மேற்கு வங்கம் ஆகிய 9 மாநிலங்கள் நிதி ஆணையத்திடம் இருந்து வருவாய்ப் பற்றாக்குறைக்கான மானியங்களைப் பெற்றன எனத் தெரிவிக்கப்பட்டது.

# மத, ஜாதி ரீதியான அரசியல் நடத்தி வெற்றி பெற நினைக்கிறது ஆர்ஜேடி

## மத்திய அமைச்சர் சிராக் பாஸ்வான்

**புருனியா, செப். 21:** 'பிகார் சட்டப்பேரவைத் தேர்தலில் மத, ஜாதி ரீதியான அரசியல் நடத்தி வெற்றி பெற்றுவிடலாம் என எதிர்க்கட்சியான ராஷ்ட்ரீய ஜனதா தளம் (ஆர்ஜேடி) கருதுகிறது. ஆனால், பேரவைத் தேர்தலில் பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான கூட்டணிக்கே மக்கள் வாக்களிப்பார்கள்' என்று மத்திய அமைச்சரும், லோக் ஜனசக்தி (ராம் விலாஸ்) கட்சித் தலைவருமான சிராக் பாஸ்வான் கூறினார்.

பிகாரின் புருனியாவில் தனது கட்சி சார்பில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நவ சங்கல்ப சபை கூட்டத்தில் அவர் பேசியதாவது:

இன்று அனைத்து இளைஞர்களும் நவீன கைப்பேசிகளைப் பயன்படுத்துகின்றனர். இது வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் எனது தந்தை ராம் விலாஸ் பாஸ்வான் தகவல்தொழில்நுட்பத் துறை அமைச்சராக இருந்தபோது எடுத்த முடிவுகள் மூலம் சாத்தியமாயிற்று.

ஏழை மக்கள் 81 கோடி பேருக்கு இலவசமாக உணவு தானியம் ரேஷன் கடைகள் மூலம் விநியோகிக்கப்படுகிறது. இதுவும் ராம்விலாஸ் பாஸ்வான் மத்திய உணவுத் துறை அமைச்சராக இருந்தபோது மேற்கொண்ட தொலைநோக்குப் பார்வையுள்ள திட்டங்கள் மூலம் கிடைத்த பயன்தான். இதை எண்ணி பெருமிதம் கொள்கிறேன்.

அடுத்து வரும் சட்டப்பேரவைத் தேர்தல்களிலும் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான கூட்டணிக்கே மக்கள் வாக்களிப்பார்கள். ஜாதி, மதரீதியில் மக்கள் ஒருபோதும் பிளவுபட்டுவிடக் கூடாது. பிகார் தேர்தலில் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். இப்போதைய நிலையில் நாட்டில் ஏழை-பணக்காரர் என்ற பிரிவினைதான் அதிகம் உள்ளது. இந்த வேறுபாட்டை களைவது மிகவும் அவசியமாகும்.

பிகாரில் பிரதான எதிர்க்கட்சியான ராஷ்ட்ரீய ஜனதா தளம் முஸ்லிம், யாதவர்கள் என மத, ஜாதிரீதியாக அரசியல் நடத்தி தேர்தலில் வெற்றி பெற்றுவிடலாம் என்று கருதுகிறது. ஆனால், பெண்கள், இளைஞர்கள் துணைகொண்டு பாஜக கூட்டணி அவர்களை வீழ்த்தும் என்றார்.

# முதல்வர் வேட்பாளரை அறிவித்து பிகார் தேர்தலில் போட்டி

## தேஜஸ்வி யாதவ் உறுதி

**பாட்னா, செப். 21:** எதிர்க்கட்சிகள் கூட்டணி சார்பில் முதல்வர் வேட்பாளர் யார் என்பதை அறிவித்தே பிகார் சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியிடுவோம் என்று ராஷ்ட்ரீய ஜனதா தளம் தலைவர் தேஜஸ்வி யாதவ் கூறியுள்ளார்.

கூட்டணியின் மற்றொரு முக்கியக்கட்சியான காங்கிரஸ், முதல்வர் வேட்பாளராக தேஜஸ்வியை முன்னிறுத்த தயக்கம் காட்டி வருகிறது. அதே நேரத்தில் தன்னை முதல்வர் வேட்பாளராக அறிவித்து தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்பதில் தேஜஸ்வி உறுதியாக உள்ளார்.

முதல்வர் நிதீஷ் குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதா தளம், பாஜக உள்ளிட்ட கட்சிகள் அடங்கிய கூட்டணி பிகாரில் ஆட்சியில் உள்ளது. இதில் முதல்வர் நிதீஷ் தலைமையில் தேர்தலை எதிர்கொள்வோம் என்று பாஜக ஏற்கெனவே அறிவித்துவிட்டது.

அதே நேரத்தில் எதிர்க்கட்சிகளான ராஷ்ட்ரீய ஜனதா தளம், காங்கிரஸ், இடதுசாரி கட்சிகள் அடங்கிய கூட்டணியில் முதல்வர் வேட்பாளரை இறுதி செய்வதில் தொடர்ந்து இழுபறி நீடிக்கிறது. தேர்தலுக்குப் பிறகு முதல்வரைத் தேர்வு செய்ய வேண்டும் என்பது காங்கிரஸின் நிலைப்பாடாக உள்ளது. அதே நேரத்தில் தேஜஸ்வியை முதல்வர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்பது ராஷ்ட்ரீய ஜனதா தளம் கட்சியின் விருப்பமாக உள்ளது.

இந்நிலையில், பாட்னாவில் செய்தியாளர்களைச் சந்தித்த தேஜஸ்வி யாதவ் இது தொடர்பாக கூறுகையில், 'முன்னிறுத்துவதற்கு எந்த முக்கியத் தலைவரும் இல்லாத பாஜகவை போன்றதல்ல எங்கள் கட்சி. தேர்தலில் முதல்வர் வேட்பாளர் யார் என்பதை அறிவிக்காமல் தேர்தலை எதிர்கொள்ள மாட்டோம்' என்றார்.

இதன்மூலம் தன்னை முதல்வர் வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்று கூட்டணிக் கட்சிகளுக்கு தேஜஸ்வி மறைமுகமாக வலியுறுத்தியுள்ளார்.

மக்களவைத் தேர்தலின்போது 'இண்டி' கூட்டணியின் பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தியை தேஜஸ்வி ஏற்றுக் கொண்டார். எனவே, இப்போது தன்னை பிகார் முதல்வர் வேட்பாளராக ராகுல் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று தேஜஸ்வி விரும்புகிறார்.

இது தொடர்பாக எதிர்க்கட்சி அணியில் உள்ள சிபிஐ-எம்எல் (எல்) கட்சி பொதுச் செயலர் தீபாங்கர் பட்டாச்சார்யா கூறுகையில், 'பிகாரில் முதல்வர் வேட்பாளரை அறிவிக்காமலேயே எதிர்க்கட்சிகள் அணி போட்டியிடும். அதே நேரத்தில் கூட்டணி வெற்றி பெற்றதும் தேஜஸ்வி முதல்வர் பதவிக்கான நபராக இருப்பார். தேர்தலுக்குப் பிறகு முதல்வரைத் தேர்வு செய்ய வேண்டும் என்பதே எங்கள் நிலைப்பாடு' என்றார்.

அகில இந்திய காங்கிரஸ் பிகார் மாநில பொறுப்பாளர் கிருஷ்ணா அலாவாரு இது தொடர்பாக கூறுகையில், 'முதல்வர் யார் என்பதை தேர்தல் மூலம் பிகார் மக்கள் முடிவு செய்வார்கள்' என்றார்.

# நடுவர் மன்றங்களிலும் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் தாமதம்: நீதிபதி சூர்யகாந்த்

**புது தில்லி, செப். 21:** நீதிமன்றங்களில் வழக்கு தொடுப்பதற்கு மாற்றாக கருதப்பட்ட நடுவர் மன்றங்களிலும் தற்போது பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் தாமதம் ஏற்படுவதாக உச்சநீதிமன்ற நீதிபதி சூர்யகாந்த் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.

உச்சநீதிமன்றம், தில்லி உயர்நீதிமன்றம் மற்றும் தில்லி சர்வதேச நடுவர் மையம் சார்பில் நடத்தப்பட்ட தில்லி நடுவர் மன்ற நிகழ்ச்சியில் பங்கேற்றபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் பேசியதாவது: சட்டத் துறை பல பரிணாமங்களைக் கண்டபோதும் சமகால சவால்கள் தொடர்ந்து வருகின்றன. அதில் முதல் சவாலாக இருப்பது தாமதம். நீதிமன்றங்களில் தொடுக்கப்படும் வழக்குகளுக்கு மாற்றாகவே நடுவர் மன்றங்கள் பார்க்கப்பட்டன. இந்த மன்றங்களில் மத்தியஸ்தம் மூலம் பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு காணப்பட்டது.

ஆனால், தற்போது தொடர் ஒத்திவைப்புகளால் இதன் உண்மையான நோக்கம் சிதைந்து வருகிறது. நடுவர் மன்றத்தின் ஆன்மா வேகமான செயல்பாடு என்றால் அதை அச்சுறுத்தும் கருவியாக தாமதம் உள்ளது.

இதற்கு காலக்கெடுவை நிர்ணயித்து பணியாற்றுவது மட்டுமே தீர்வாகாது. வழக்கு மேலாண்மை பற்றிய மாநாடுகள், விசாரணைகளை ஒத்திவைப்பதற்கு கட்டுப்பாடுகள் எனப் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொள்ள வேண்டும்.

திறன் மற்றும் நிபுணத்துவத்துடன் இறுதி முடிவை மேற்கொள்ளும் அமைப்பாக நடுவர் மன்றங்கள் திகழ்ந்தாலும் சுதந்திரம் மற்றும் ஒற்றுமையே அதன் இரு தூண்களாக கருதப்படும்.

ஆதிக்கத்தின் பிடியில் சிக்காமல் சுதந்திரமாக செயல்படுவதோடு நேர்மை, வெளிப்படைத்தன்மையுடன் நடுவர் மன்றங்களை நாடி வருவோரின் நம்பிக்கையையும் பெற வேண்டும்.

இவை முறையாகப் பின்பற்றப்படாதபட்சத்தில் நடுவர் மன்றங்களின் முக்கியத்துவம் குறைந்து மீண்டும் நீதிமன்றங்களையே நாடும் நிலை ஏற்படும் என்றார்.

## பாகிஸ்தான் சார்பு கருத்து

# வருத்தம் தெரிவித்த சாம் பிட்ரோடா; விட்டுக் கொடுக்காத பாஜக

நமது சிறப்பு நிருபர்

**புது தில்லி, செப். 21:** பாகிஸ்தான், வங்கதேசம் போன்ற நாடுகளுக்கு சென்ற போதெல்லாம் சொந்த நாட்டில் இருப்பதுபோல உணர்ந்ததாக அண்மையில் காங்கிரஸ் அயலக அணித் தலைவர் சாம் பிட்ரோடா வெளியிட்ட கருத்து சர்ச்சையான நிலையில், அது தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளதாக அவர் விளக்கம் அளித்துள்ளார்.

இருப்பினும், இந்த விவகாரத்தில் பாகிஸ்தானுக்கு சாதகமான காங்கிரஸின் போக்கு வெளிப்பட்டுள்ளதாக மத்தியில் ஆளும் பாஜக விமர்சித்துள்ளது.

கடந்த வாரம் ஐஏஎன்எஸ் செய்தி நிறுவனத்துக்கு சாம் பிட்ரோடா அளித்த காணொலிப் பேட்டியில், பாகிஸ்தான் உள்பட இந்தப் பிராந்தியத்தில் (தெற்காசியா) உறவுகளை வலுப்படுத்துவதில் இருந்து இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை தொடங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மேலும், 'என்னைப் பொருத்தவரை இந்திய வெளியுறவுக் கொள்கை என்பது முதலில் நமது அண்டை நாடுகள் மீது கவனத்தைக் கொண்டதாக இருக்க வேண்டும். ஆனால், உண்மையில் நமது அண்டை நாடுகளுடனான உறவுகளை நாம் கணிசமாக மேம்படுத்துகிறோமா? நான் பாகிஸ்தானுக்குச் சென்றிருக்கிறேன். அப்போது சொந்த நாட்டில் இருப்பது போல் உணர்ந்தேன். வங்கதேசத்துக்கும் நேபாளத்துக்கும் கூட சென்றிருக்கிறேன். அங்கும் சொந்த நாட்டில் இருப்பது போன்றே உணர்கிறேன். ஒரு வெளிநாட்டில் இருப்பது போல உணரவில்லை...' என்று கூறினார்.



சாம் பிட்ரோடா

மத்தியில் பிரதமர் மன்மோகின் சிங் தலைமையிலான ஆட்சியில் பிரதமரின் ஆலோசகராக இருந்தவர் சாம் பிட்ரோடா. தற்போது மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்திக்கு இந்திய வெளியுறவு விவகாரங்களில் ஆலோசனை வழங்குபவராகவும் அறியப்படுகிறார்.

இந்நிலையில், தனது கருத்து சர்ச்சைக்குள்ளானதால் 'எக்ஸ்' பக்கத்தில் விரிவான விளக்கத்தைக் கொடுத்துள்ளார் பிட்ரோடா.

அதில் அவர், 'எனது வார்த்தைகள் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளன. இந்தியா அதன் அண்டை நாடுகளுடன் பகிர்ந்து கொள்ளும் கலாசார வேர்கள் மற்றும் வரலாற்றுப் பிணைப்புகளை முன்னிலைப்படுத்துவதே எனது நோக்கமாக இருந்தது. எனது வார்த்தைகள் குழப்பத்தையோ காயத்தையோ ஏற்படுத்தியிருந்தால் வருந்துகிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், வருத்தத்துடன் நிற்காமல் மத்தியில் ஆளும் பாஜகவின் 'விஸ்வகுரு' கொள்கையை சாடியுள்ள பிட்ரோடா, இதுபோன்ற வெற்று வாசகங்களுக்கு பதிலாக நம்பிக்கை, அமைதி மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மை அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட வெளியுறவுக் கொள்கையை இந்தியா பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.



பிரதீப் பண்டாரி

இதற்கிடையே, சாம் பிட்ரோடாவுக்கு ஆதரவாக காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரும் மக்களவை உறுப்பினருமான மாணிக்கம் தாகூர் கருத்து தெரிவித்துள்ளார். 'பொதுவாழ்வில் மிகவும் அனுபவம் வாய்ந்த ஒருவர் ராஜீய உறவுகள் தொடர்பாக வெளியிடும் கருத்துகளின் நோக்கத்தையும் ஆழத்தையும் உணராமல் அவரை சிறுமைப்படுத்துவது பாஜகவுக்கு வாடிக்கையாகிவிட்டது. பிட்ரோடாவின் கருத்து தவறு என்றால் 2014-இல் பாகிஸ்தான் பிரதமராக நவாஸ் ஷெரீஃப் இருந்தபோது அவரது தாயாருக்கு இந்திய பிரதமர் மோடி சால்வை பரிசளித்ததையும், அதற்கு நன்றி தெரிவிக்க பிரதமர் மோடியின் தாயாருக்கு நவாஸ் ஷெரீஃப் புடவை பரிசளித்ததையும் தவறாகக் கருத முடியுமா?' என்று மாணிக்கம் தாகூர் குறிப்பிட்டுள்ளார்.

மறுபுறம், சாம் பிட்ரோடாவின் விளக்கத்தை ஏற்காத பாஜக செய்தித் தொடர்பாளர் பிரதீப் பண்டாரி, 'மக்களவை எதிர்க்கட்சித் தலைவரான ராகுல் காந்தி இந்தியாவுக்கு எதிராகப் போராடும் கருத்துகளை ஒருபுறம் வெளியிடுகிறார். மறுபுறம் அவரது ஆலோசகரான சாம் பிட்ரோடா பாகிஸ்தான் சார்பு கருத்துகளை வெளியிடுகிறார். பயங்கரவாதிகளுடன் நெருக்கம் பாராட்டுவதும் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதத்தை மதிப்பதும் காங்கிரஸுக்கு வழக்கமாகிவிட்டது. இவர்களின் செயல்பாடுகள், இந்திய இறையாண்மை மற்றும் படையினரின் வீரத்தை அவமதிப்பதற்கு ஒப்பாகும்' என்றார்.

## ஓயாத சர்ச்சைகள்

சாம் பிட்ரோடா இதற்கு முன்பும் சர்ச்கைக்குரிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அவற்றின் விவரம்: கடந்த பிப்ரவரியில் அவர் இந்தியா மீதான சீன அச்சுறுத்தல் மிகைப்படுத்தப்படுகிறது என்று பேசினார். கடந்த ஆண்டு மக்களவைத் தேர்தலையொட்டி செய்தி நிறுவனத்துக்கு பேட்டியளித்த சாம் பிட்ரோடா, அமெரிக்காவில் பரம்பரை சொத்து வரிச்சட்டம் அமலில் உள்ளது.

அதன்படி ஒருவரிடம் 10 கோடி டாலர் மதிப்புக்கு சொத்து இருந்தால் அவர் உயிரிழக்கும்போது அவரது சொத்தில் 55 சதவீதத்தை அரசு ஏற்கும்.

மீதமுள்ள 45 சதவீத சொத்துகளை மட்டுமே அவரது வாரிசுகள் பிரித்து எடுத்துக் கொள்ள முடியும். இந்தச் சட்டம் நியாயமானது. இது குறித்து பொதுமக்கள் விவாதிக்க வேண்டும் என்று கூறினார்.

2023-இல் ராமர் கோயில் விவகாரத்தையும் நாட்டின் பணவீக்க நிலையையும் சாம் பிட்ரோடா விமர்சித்து சர்ச்சையில் சிக்கினார்.

கடந்த ஆண்டு மக்களவைத் தேர்தலுக்கு முன்னதாக, 'தி ஸ்டேட்ஸ்மேன்' ஆங்கில நாளிதழுக்கு பிட்ரோடா அளித்த பேட்டியில், 'இந்தியா போன்ற பன்முகத்தன்மை கொண்ட நாட்டில் கிழக்கில் வசிப்பவர்கள் சீனர்களைப் போலவும், மேற்கில் வசிப்பவர்கள் அரேபியர்களைப் போலவும் தெற்கில் வசிப்பவர்கள் ஆப்பிரிக்கர்களைப் போலவும் இருக்கிறார்கள்' என்று பேசியது சர்ச்சையானது.

குடியரசுத் தலைவர் வேட்பாளராக திரெளபதி முர்முவை ஆளும் கூட்டணி நிறுத்தியபோது அவரை காங்கிரஸ் எதிர்க்க பிட்ரோடாவும் ஒரு காரணம் என்பது போல அவரது கருத்தை பிரதமர் மோடி தேர்தல் பரப்புரை கூட்டத்தில் குற்றஞ்சாட்டி விமர்சித்தார்.

பாரா பாட்மின்டன்

## இந்தியாவுக்கு 5 பதக்கங்கள்


பிரமோத் பகத்

புது தில்லி, செப். 21: சீனாவில் நடைபெற்ற சர்வதேச பாரா பாட்மின்டன் போட்டியில் இந்தியாவுக்கு 2 தங்கம், 3 வெள்ளி என 5 பதக்கங்கள் கிடைத்தன. இதில் பிரமோத் பகத், சுகந்த் கடம் ஆகியோர் தலா 2 பதக்கங்கள் வென்று அசத்தினர்.

எஸ்எல்3 பிரிவு ஆடவர் ஒற்றையர் இறுதிச்சுற்றில், டோக்கியோ பாராலிம்பிக்கில் தங்கம் வென்ற பிரமோத் பகத் 21-19, 21-16 என்ற நேர் கேம்களில், இந்தோனேசியாவின் முஹ் அல் இம்ரானை வீழ்த்தி வாகை சூடினார்.

ஆடவர் இரட்டையர் இறுதிச்சுற்றில், பிரமோத் பகத்/சுகந்த் கடம் இணை, 18-21, 22-20, 18-21 என்ற கேம்களில், சக இந்திய கூட்டணியான ஜெகதீஷ் டில்லி/நவீன் சிவகுமாரிடம் போராடி வீழ்ந்து வெள்ளி பெற்றது.

எஸ்எல்4 ஆடவர் ஒற்றையர் இறுதிச்சுற்றில், உலகின் நம்பர் 1 வீரரான சுகந்த் கடம் 9-21, 8-21 என பிரான்ஸின் லூகாஸ் மஸூரிடம் தோல்வி கண்டார். அதேபோல் எஸ்ஹெச்6 பிரிவு ஆடவர் ஒற்றையரில், 2020 டோக்கியோ பாராலிம்பிக் சாம்பியனான கிருஷ்ணா நாகர் 22-20, 7-21, 17-21 என்ற கேம்களில், தாய்லாந்தின் நத்தபோங் மீசாயிடம் போராடித் தோற்றார்.

ASIA CUP

# பாகிஸ்தானை வீழ்த்தியது இந்தியா

துபை, செப். 21: ஆசிய கோப்பை கிரிக்கெட் போட்டியின் சூப்பர் 4 ஆட்டத்தில், இந்தியா 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் பாகிஸ்தானை ஞாயிற்றுக்கிழமை வென்றது.

முதலில் பாகிஸ்தான் 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 171 ரன்கள் சேர்க்க, இந்தியா 18.5 ஓவர்களில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 174 ரன்கள் எடுத்து வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற இந்தியா, பந்துவீசத் தயாரானது. இந்திய பிளேயிங் லெவனில் மீண்டும் ஜஸ்பிரீத் பும்ரா, வருண் சக்கரவர்த்தி சேர்க்கப்பட்டனர்.

பாகிஸ்தான் இன்னிங்ஸை தொடங்கியோரில் ஃபகார் ஜமான் 3 பவுண்டரிகளுடன் 15 ரன்களுக்கு வெளியேற, தொடக்க வீரர் சாஹிப்ஸாதா ஃபர்ஹானுடன், சயிம் அயுப் இணைந்தார். இந்த பார்ட்னர்ஷிப் 2-ஆவது விக்கெட்டுக்கு 72 ரன்கள் சேர்த்தது. அயுப் 1 பவுண்டரி, 1 சிக்ஸருடன் 21 ரன்களுக்கு விடைபெற்றார்.

4-ஆவது பேட்டராக வந்த ஹுசைன் தலத் 10 ரன்களுக்கு பெவிலியன் திரும்பினார். தொடர்ந்து முகமது நவாஸ் களம் புக, சாஹிப்ஸாதா 5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உள்பட 58 ரன்களுக்கு ஆட்டமிழந்தார்.

இந்நிலையில், 5-ஆவது வீரர் நவாஸ் 1 பவுண்டரி, 1 சிக்ஸர் உள்பட 21 ரன்களுக்கு, 'ரன் அவுட்' செய்யப்பட்டார்.

ஓவர்கள் முடிவில், கேப்டன் சல்மான் அகா 1 சிக்ஸருடன் 17, ஃபஹீம் அஷ்ரஃப் 1 பவுண்டரி, 2 சிக்ஸர்களுடன் 20 ரன்களுக்கு ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இந்திய தரப்பில் ஷிவம் துபே 2, ஹர்திக் பாண்டியா, குல்தீப் யாதவ் ஆகியோர் தலா 1 விக்கெட் எடுத்தனர்.

அடுத்து, 172 ரன்களை வெற்றி இலக்காகக் கொண்டு விளையாடிய இந்திய அணியில், அபிஷேக் சர்மா - ஷுப்மன் கில் கூட்டணி முதல் விக்கெட்டுக்கு 105 ரன்கள் சேர்த்து வெற்றிக்கு அடித்தளமிட்டது.

கில் 8 பவுண்டரிகளுடன் 47 ரன்களுக்கு விடைபெற, கேப்டன் சூர்யகுமார் யாதவ் டக் அவுட்டாகி அதிர்ச்சி அளித்தார். அதிரடியாக ரன்கள் சேர்த்த அபிஷேக் சர்மா 6 பவுண்டரிகள், 5 சிக்ஸர்களுடன் 74 ரன்களுக்கு ஆட்டமிழந்தார்.

சஞ்சு சாம்சன் 1 பவுண்டரியுடன் 13 ரன்களுக்கு வெளியேற்றப்பட, திலக் வர்மா 2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உள்பட 30, ஹர்திக் பாண்டியா 7 ரன்களுடன் அணியை வெற்றிக்கு வழிநடத்தி ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பாகிஸ்தான் பௌலர்களில் ஹாரிஸ் ரௌஃப் 2, அப்ரார் அகமது, ஃபஹீம் அஷ்ரஃப் ஆகியோர் தலா 1 விக்கெட் கைப்பற்றினர்.


ஆட்டத்தின்போது வாக்குவாதத்தில் ஈடுபட்ட அபிஷேக், கில் – ஹாரிஸ் ரௌஃப்.

### புள்ளிகள் பட்டியல்

சூப்பர் 4

| அணி | ஆட்டம் | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|
| இந்தியா | 1 | 1 | 0 | 2 |
| வங்கதேசம் | 1 | 1 | 0 | 2 |
| இலங்கை | 1 | 0 | 1 | 0 |
| பாகிஸ்தான் | 1 | 0 | 1 | 0 |

### இந்த முறையும்...

கடந்த ஆட்டத்தைப் போலவே, இந்த ஆட்டத்திலும் டாஸின் போதும், முடிவிலும் இந்திய – பாகிஸ்தான் வீரர்கள் பரஸ்பரம் கைகுலுக்கவில்லை.

LI-NING CHINA MASTERS

# சாத்விக்/சிராக் இணைக்கு மீண்டும் வெள்ளிப் பதக்கம்


சிராக் – சாத்விக்

சென்ஸென், செப். 21: சீனா மாஸ்டர்ஸ் பாட்மின்டன் போட்டியில் இந்தியாவின் சாத்விக்சாய்ராஜ் ராங்கிரெட்டி/சிராக் ஷெட்டி கூட்டணி இறுதிச்சுற்றில் தோற்று, ஞாயிற்றுக்கிழமை வெள்ளிப் பதக்கம் வென்றது.

அண்மையில் ஹாங்காங் ஓபன் போட்டியிலும் இறுதிச்சுற்றில் தோல்வி கண்ட சாத்விக்/சிராக் இணை, மீண்டும் அதே நிலையை அடைந்திருக்கிறது.

சீனா மாஸ்டர்ஸ் ஆடவர் இரட்டையர் இறுதிச்சுற்றில், போட்டித்தரவரிசையில் 8-ஆம் இடத்திலிருந்த சாத்விக்/சிராக் கூட்டணி 19-21, 15-21 என்ற நேர் கேம்களில், முதலிடத்தில் இருந்த தென் கொரியாவின் கிம் வோன் ஹோ/சியோ சியுங் ஜே இணையிடம் தோல்வி கண்டது. இந்த ஆட்டத்தை 45 நிமிஷங்களில் முடிவுக்குக் கொண்டு வந்தது தென் கொரிய இணை.

இந்தியாவின் முன்னிலை ஆடவர் இரட்டையரான சாத்விக்/சிராக், இந்த தென் கொரிய ஜோடியை 2-ஆவது முறையாக சந்தித்த நிலையில், இதிலும் தோல்வியைத் தழுவியுள்ளனர். இந்தப் போட்டியின் முதல் சுற்றிலிருந்தே ஒரு கேமை கூட இழக்காமல் நேர் கேம்களில் வென்று வந்த இந்திய இணை, இறுதிச்சுற்றில் நேர் கேம்களில் தோல்வி கண்டிருக்கிறது.

சாம்பியனான தென் கொரிய இணைக்கு ரூ.74 லட்சமும், ரன்னர் அப்-ஆன இந்திய இணைக்கு ரூ.35 லட்சமும் ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டன.

**இதர வெற்றியாளர்கள்:** இதனிடையே, சீனா மாஸ்டர்ஸ் போட்டியில் மகளிர் ஒற்றையரில் தென் கொரியாவின் ஆன் செ யங், ஆடவர் ஒற்றையரில் சீனாவின் வெங் ஹாங் யாங் ஆகியோர் சாம்பியனாகினர்.

மகளிர் இரட்டையரில் சீனாவின் யி ஃபான் ஜியா/ஷு ஜியான் ஜாங் கூட்டணியும், கலப்பு இரட்டையரில் தாய்லாந்தின் தீசபோல் புவரனுக்ரோ/சுபிசரா பேவ்சம்பிரான் ஜோடியும் வாகை சூடின.

Premier League

# செல்ஸியை வென்றது மான்செஸ்டர் யுனைடெட்


புருனோ ஃபெர்னாண்டஸ்

மான்செஸ்டர், செப். 21: இங்கிலாந்தில் நடைபெறும் பிரீமியர் லீக் கால்பந்து போட்டியில் மான்செஸ்டர் யுனைடெட் 2-1 கோல் கணக்கில் செல்ஸியை வீழ்த்தியது.

இந்த ஆட்டத்தில் மான்செஸ்டருக்காக புருனோ ஃபெர்னாண்டஸ் 14-ஆவது நிமிஷத்திலும், கேஸ்மிரோ 37-ஆவது நிமிஷத்திலும் கோலடிக்க, செல்ஸி தரப்பில் டிரெவோ சலோபா 80-ஆவது நிமிஷத்தில் ஸ்கோர் செய்தார்.

இத்துடன் மான்செஸ்டர் அணி, 2023-க்குப் பிறகு முதல் முறையாக, ஒரே சீசனில் சொந்த மண்ணில் நடைபெற்ற அடுத்தடுத்த ஆட்டங்களில் வென்றுள்ளது. மறுபுறம் செல்ஸி அணி, மான்செஸ்டர் அணியை அதன் சொந்த மண்ணில் சந்தித்த 13 ஆட்டங்களிலுமே வென்றதில்லை (7 டிரா, 6 தோல்வி).

போட்டியில் வேறு எந்த இரு அணிகளுக்கு இடையேயும் இத்தனை வெற்றியில்லாத ஆட்டங்கள் இல்லை. இந்த ஆட்டத்தின் மூலமாக, புருனோ ஃபெர்னாண்டஸ், மான்செஸ்டர் யுனைடெட்டுக்காக தனது 100-ஆவது கோலை பதிவு செய்திருக்கிறார்.

அத்துடன் பிரீமியர் லீக் போட்டியில் அந்த அணிக்காக 200-ஆவது முறையாக களமிறங்கிய 5-ஆவது வீரர் ஆனார்.

இதனிடையே மற்ற ஆட்டங்களில் லிவர்பூல் - எவர்டனையும் (2-1), கிரிஸ்டல் பேலஸ் - வெஸ்ட் ஹாமையும் (2-1), லீட்ஸ் யுனைடெட் - வோல்வ்ஸையும் (3-1), ஃபுல்ஹாம் - பிரென்ட்ஃபோர்டையும் (3-1) வென்றன. பர்ன்லி - நாட்டிங்ஹாம் ஃபாரஸ்ட் (1-1), பிரைட்டன் - டாட்டன்ஹாம் (2-2) மோதல் டிராவில் முடிந்தது.

F1

# அஜர்பைஜான் கிராண்ட் ப்ரீ: மேக்ஸ் வெர்ஸ்டாபென் வெற்றி


பந்தயத்தில் முன்னிலையில் வெர்ஸ்டாபென் கார்.

பாகு, செப். 21: ஃபார்முலா 1 கார் பந்தயத்தின் நடப்பு சீசனில், 17-ஆவது ரேஸான அஜர்பைஜான் கிராண்ட் ப்ரீயில் நெதர்லாந்து வீரரும், ரெட்புல் டிரைவருமான மேக்ஸ் வெர்ஸ்டாபென் ஞாயிற்றுக்கிழமை வெற்றி பெற்றார்.

பிரிட்டன் வீரரும், மெர்ஸிடெஸ் டிரைவருமான ஜார்ஜ் ரஸ்ஸெல் 2-ஆம் இடமும், ஸ்பெயின் வீரரும், வில்லியம்ஸ் டிரைவருமான கார்லோஸ் செயின்ஸ் ஜூனியர் 3-ஆம் இடமும் பிடித்தனர்.

கடைசியாக நடைபெற்ற இத்தாலியன் கிராண்ட் ப்ரீயிலும் வென்றிருந்த வெர்ஸ்டாபென், நடப்பு சீசனில் அடுத்தடுத்த வெற்றியை பதிவு செய்தது இதுவே முதல்முறையாகும். மேலும், இந்த சீசனில் இது அவரின் 4-ஆவது வெற்றியாக அமைந்தது.

நடப்பு சாம்பியனாக இருக்கும் வெர்ஸ்டாபென் இந்த சீசனில் தடுமாற்றத்தை சந்தித்து வந்த நிலையில், தற்போது அடுத்தடுத்த வெற்றிகளால் மீண்டும் வேகமெடுத்துள்ளார்.

இந்த சீசனில் இதுவரை 7 வெற்றிகளுடன் முன்னிலையில் இருக்கும் ஆஸ்திரேலிய வீரரும், மெக்லாரென் டிரைவருமான ஆஸ்கர் பியஸ்ட்ரி, இந்தப் பந்தயத்தின் முதல் லாப்பிலேயே தனது கார், தடுப்பில் மோதலுக்கு உள்ளானதால் விலகினார்.

அவருக்கு அடுத்தபடியாக 5 வெற்றிகளுடன் இருக்கும் பிரிட்டன் வீரரும், சக மெக்லாரென் டிரைவருமான லாண்டோ நோரிஸ், இந்த முறை 7-ஆவது இடமே பிடிக்க நேர்ந்தது.

முன்னதாக, உடல்நலக் குறைவுடன் இருந்தபோதும் பந்தயத்தில் பங்கேற்று 2-ஆம் இடம் பிடித்ததற்காக ரஸ்ஸெல் மகிழ்ச்சி தெரிவித்தார்.

கார்லோஸ் செயின்ஸ், கடந்த 4 ஆண்டுகளில் முதல்முறையாக வில்லியம்ஸ் அணியை வெற்றி மேடையேற்றியிருக்கிறார்.


வெர்ஸ்டாபென்

## தேசிய கார் பந்தயம்: இஷான், தீபக் சிறப்பிடம்


தீபக்

சென்னை, செப். 21: எம்ஆர்எஃப், எம்எம்எஸ்சி, எஃப்எம்எஸ்சிஐ தேசிய கார் பந்தய சாம்பியன்ஷிப்பில் இஷான் மாதேஷ், தீபக் ரவிக்குமார் சிறப்பிடம் பெற்றனர்.

சென்னை அடுத்த இருங்காட்டுக்கோட்டையில் உள்ள மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் சுற்று நடைபெற்றது. இதில் பெங்களூரு இளைஞர் இஷான் மாதேஷ் எம்ஆர்எஃப் பார்முலா 2000 பிரிவில் முதலிடம் பெற்றார்.

இண்டியன் டூரிங் கார்கள் பிரிவில் உள்ளூர் வீரர் ரிதேஷ் ராய் மூன்று பந்தயங்களிலும் வென்று பட்டம் வென்றார். கோவை மூத்த வீரர் அர்ஜுன் பாலு கடும் சவால் அளித்தாலும் பலன் கிட்டவில்லை.

பார்முலா 6600 பிரிவில் புணே வீரர் சாய் சிவா மகேஷ், மும்பையின் ஸாஹன் வெற்றி பெற்றனர். பெங்களூரின் அர்ஜுன் நாயர் மூன்றாம் இடம் பெற்றார்.

சூப்பர் ஸ்டாக் பிரிவில் சென்னை வீரர் தீபக் ரவிக்குமார் இண்டியன் டூரிங் கார்கள் ஜூனியர் பிரிவில் இரு பட்டங்களை கைப்பற்றினார்.

பார்முலா எல்ஜிபி 1300 பிரிவில் நவி மும்பை ஆதித்ய பட்நாயக், திருப்பூரின் வினித் குமார் சிறப்பிடம் பெற்றனர்.

BILLIE JEAN KING CUP

# அமெரிக்காவை வீழ்த்தி சாம்பியனானது இத்தாலி


சாம்பியனான மகிழ்ச்சியில் இத்தாலி அணியினர்.

சென்ஸென், செப். 21: சீனாவில் நடைபெற்ற பில்லி ஜீன் கிங் கோப்பை மகளிர் டென்னிஸ் போட்டியின் இறுதிச்சுற்றில், நடப்பு சாம்பியனான இத்தாலி 2-0 என அமெரிக்காவை வீழ்த்தி சாம்பியன் கோப்பையை ஞாயிற்றுக்கிழமை தக்கவைத்துக் கொண்டது.

போட்டியின் வரலாற்றில் இத்தாலிக்கு இது 6-ஆவது சாம்பியன் பட்டமாகும். இதற்கு முன் 2006, 2009, 2010, 2013, 2024 ஆகிய ஆண்டுகளில் இத்தாலி வாகை சூடியிருக்கிறது.

முன்னதாக இறுதிச்சுற்றில் இத்தாலி - அமெரிக்கா மோதலில், முதல் ஒற்றையர் ஆட்டத்தில், உலகின் 91-ஆம் நிலையில் இருக்கும் இத்தாலியின் எலிஸபெத்தா கோசியாரெட்டோ 6-4, 6-4 என்ற நேர் செட்களில், 18-ஆம் நிலையில் இருக்கும் அமெரிக்காவின் எம்மா நவாரோவை வீழ்த்தி அசத்தினார்.

அனைத்து போட்டிகளிலுமாக இருவரும் மோதியது இது 2-ஆவது முறையாக இருக்க, எலிஸபெத்தா முதல் வெற்றியுடன் கணக்கை சமன் செய்திருக்கிறார்.

அடுத்து நடைபெற்ற 2-ஆவது ஒற்றையர் ஆட்டத்தில், உலகின் 8-ஆம் நிலையில் இருக்கும் இத்தாலியின் ஜாஸ்மின் பாலினி 6-4, 6-2 என்ற நேர் செட்களில், 7-ஆம் நிலையில் இருக்கும் அமெரிக்காவின் ஜெஸ்ஸிகா பெகுலாவை வென்றார். இருவரும் 6-ஆவது முறையாக சந்தித்த நிலையில், பாலினி தனது முதல் வெற்றியைப் பதிவு செய்துள்ளார்.

இரு ஒற்றையர் ஆட்டங்களையும் கைப்பற்றி இத்தாலி 2-0 என முன்னிலை பெற்றதையடுத்து, அந்த அணி வெற்றி பெற்றது. இரட்டையர் ஆட்டத்துக்கு அவசியமில்லாமல் போனது.

சாம்பியனான இத்தாலி அணிக்கு ரூ.17 கோடியும், 2-ஆம் இடம் பிடித்த அமெரிக்க அணிக்கு ரூ.11 கோடியும் ரொக்கப் பரிசாக வழங்கப்பட்டன.

முன்னதாக இந்தப் போட்டியின் பிரதான சுற்றில், சீனா, பிரிட்டன், இத்தாலி, ஜப்பான், கஜகஸ்தான், ஸ்பெயின், உக்ரைன், அமெரிக்கா ஆகிய 8 அணிகள் மோதியது குறிப்பிடத்தக்கது.

### துளிகள்...

❖ டோக்கியோவில் நடைபெற்ற உலக தடகள சாம்பியன்ஷிப் ஞாயிற்றுக்கிழமை நிறைவடைந்த நிலையில், அமெரிக்கா 16 தங்கம், 5 வெள்ளி, 5 வெண்கலம் என 26 பதக்கங்களுடன் முதலிடம் பிடித்தது. கென்யா (7/2/2 – 11), கனடா (3/1/1 – 5) முறையே அடுத்த இரு இடங்கள் பெற்றன. தனிநபர்களில் அதிகபட்சமாக, அமெரிக்காவின் மெலிஸா ஜெஃபர்சன் (3 தங்கம்), நோவா லைல்ஸ் (2 தங்கம், 1 வெண்கலம்) ஆகியோர் அதிக பதக்கங்கள் வென்றனர்.


மெலிஸா

❖ பிசிசிஐ தலைவர் பதவிக்காக, தில்லி அணி முன்னாள் கேப்டன் மிதுன் மனஸ் (45) ஞாயிற்றுக்கிழமை வேட்புமனு தாக்கல் செய்தார்.

❖ கொரியா ஓபன் டென்னிஸ் போட்டியின் இறுதிச்சுற்றில், போலந்தின் இகா ஸ்வியாடெக்–ரஷியாவின் எகாடெரினா அலெக்ஸாண்ட்ரோவாவை வீழ்த்தி சாம்பியன் ஆனார்.

❖ ஃபெனெஸ்டா ஓபன் தேசிய டென்னிஸ் சாம்பியன்ஷிப், தில்லியில் வரும் 29–ஆம் தேதி தொடங்கவுள்ளது.

❖ யூத் கிரிக்கெட்டில் (யு19) இந்தியா முதல் ஒருநாள் ஆட்டத்தில் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஆஸ்திரேலியாவை ஞாயிற்றுக்கிழமை வீழ்த்தியது.

### புனித நீராட...


மகாளய அமாவாசை தினத்தையொட்டி, உத்தரகண்ட் மாநிலம், ஹரித்வாரில் கங்கை நதியில் புனித நீராட ஞாயிற்றுக்கிழமை திரண்ட மக்கள்.

# ஸ்ரீநாராயண குரு நினைவு தினம்: சோனியா, ராகுல் மரியாதை

வயநாடு, செப்.21: சமூக சீர்திருத்தவாதி ஸ்ரீ நாராயண குருவின் நினைவு தினத்தையொட்டி அவருக்கு காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சோனியா காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, வயநாடு எம்.பி.பிரியங்கா காந்தி ஆகியோர் ஞாயிற்றுக்கிழமை மரியாதை செலுத்தினர்.

கேரளம் மாநிலம் வயநாடு மாவட்டத்தின் கல்பெட்டாவில் உள்ள ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன யோகம் அலுவலகத்தில் ஸ்ரீ நாராயண குருவின் உருவப்படத்துக்கு மூவரும் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

அப்போது பிரியங்கா காந்தி பேசுகையில், 'ஸ்ரீ நாராயண குருவின் பங்களிப்புகளை எப்போதும் நாம் நினைவுகூர வேண்டும். அனைவரையும் சமமாக நடத்துவது மற்றும் அனைத்து உயிர்களிடத்தும் இரக்கம் காட்டுவது சமூகத்துக்கு மிகத் தேவையான ஒன்று.

இந்தக் கொள்கைகளை பின்பற்றியதுடன் உலகுக்கு கற்றுக் கொடுத்த ஸ்ரீ நாராயண குருவுக்கு மரியாதை செலுத்துகிறேன்' என்றார்.

வயநாடு, கோழிக்கோடு மற்றும் மலப்புரம் மாவட்டங்களில் கடந்த 10 நாள்களாக சுற்றுப்பயணம் மேற்கொண்டு வரும் பிரியங்கா காந்தி இலக்கியம், கலாசாரம் உள்பட பல்வேறு துறைசார் ஆளுமைகளைச் சந்தித்து வருகிறார்.

அவரது பயணம் திங்கள்கிழமையுடன் முடிவடையும் என காங்கிரஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேபோல் வயநாட்டுக்கு கடந்த சனிக்கிழமை வந்த சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி ஆகியோரும் திங்கள்கிழமை தங்களது பயணத்தை நிறைவுசெய்யவுள்ளதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.


கல்பெட்டாவில் ஸ்ரீ நாராயண குரு உருவப்படத்துக்கு ஞாயிற்றுக்கிழமை மலர்தூவி மரியாதை செலுத்திய காங்கிரஸ் முன்னாள் தலைவர் சோனியா காந்தி.

## டிரம்ப் கோரிக்கை: மீண்டும் நிராகரித்தது தலிபான்

**ஜலாலாபாத், செப். 21:** ஆப்கானிஸ்தானின் மிகப் பெரிய விமான தளமான பக்ராம் தளத்தை அமெரிக்க கட்டுப்பாட்டில் மீண்டும் வழங்க வேண்டும் என்ற அந்நாட்டு அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் கோரிக்கையை தலிபான் அரசு ஞாயிற்றுக்கிழமை மீண்டும் நிராகரித்தது.

சுமார் 4 ஆண்டுகளுக்கு முன்பு ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகள் முழுமையாக வெளியேறியபோது இந்த விமான தளம் தலிபான்கள் வசம் சென்றது. இப்போது, அதைத் தங்களிடம் அளிக்க வேண்டும் என்று அதிபர் டிரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

பக்ராம் விமான தளம் சீனாவுக்கு சற்று அருகே உள்ளதால் அதை மீண்டும் கைப்பற்ற டிரம்ப் விரும்புவதாகத் தெரிகிறது.

இது தொடர்பாக தலிபான் செய்தித் தொடர்பாளர் ஸபியுல்லா முஜாஹித் 'எக்ஸ்' வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், 'ஆப்கானிஸ்தானின் சுதந்திரமும், பிராந்திய ஒருங்கிணைப்பும் எங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இரு தரப்பு உறவை மேம்படுத்துவது குறித்து அமெரிக்காவிடம் பேச்சு நடைபெறுகிறது.

தோஹாவில் மேற்கொண்ட ஒப்பந்தத்தின்படி, ஆப்கானிஸ்தானின் அரசியல், பிராந்திய சுதந்திரத்தில் அமெரிக்கா தலையிடக் கூடாது.



எங்களுக்கு எதிராக எவ்வித அச்சுறுத்தல் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளக் கூடாது. ஆப்கானிஸ்தான் உள்விவகாரங்களிலும் தலையிடக் கூடாது. இதை அமெரிக்கா நினைவில் கொள்ள வேண்டும்' என்று கூறியுள்ளார்.

## பிலிப்பின்ஸ்: ஊழலுக்கு எதிராக பொதுமக்கள் போராட்டம்

**மணிலா, செப். 21:** பிலிப்பின்ஸ் நாட்டின் வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்களில் நடைபெற்ற ஊழலுக்கு எதிராக ஆயிரக்கணக்கான பொதுமக்கள் ஞாயிற்றுக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க மணிலா பூங்கா மற்றும் இஎஸ்டிஏ ஜனநாயக நினைவுச் சின்னத்துக்கு அருகே இந்தப் போராட்டங்கள் தனித்தனியே நடத்தப்பட்டன. இதில் ஊழல் அரசியல்வாதிகளுக்கு எதிரான பதாகைகளை ஏந்தியவாறு போராட்டக்காரர்கள் பேரணியாகச் சென்றனர்.

அசம்பாவிதம் எதுவும் ஏற்படாமல் தடுக்க ஆயிரக்கணக்கான காவல் துறையினர் இந்தப் பகுதிகளில் குவிக்கப்பட்டிருந்தனர். அமெரிக்க மற்றும் ஆஸ்திரேலிய தூதரகங்கள் போராட்டப் பகுதிகளைத் தவிர்க்குமாறு தங்கள் நாட்டுப் பயணிகளுக்கு அறிவுறுத்தல்களை வெளியிட்டன.



பிலிப்பின்ஸ் தலைநகர் மணிலாவில் அதிபர் மாளிகை வளாகத்துக்குள் நுழைய முயற்சித்தபோது, தீப்பற்றி எரியும் கன்டெய்னர் வாகனத்துக்கு அருகில் காவல் துறை மீது ஞாயிற்றுக்கிழமை கல்வீச்சில் ஈடுபட்ட போராட்டக்காரர்கள்.

2022-ஆம் ஆண்டு பதவியேற்ற பிலிப்பின்ஸ் நாட்டின் அதிபர் ஃபெர்டினாண்ட் மார்கோஸ் ஜூனியர், நாடு முழுவதும் 545 பில்லியன் பிஸோ (சுமார் ரூ.8,000 கோடி) மதிப்புள்ள வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்களைத் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டங்களில் பெரிய அளவில் ஊழல் குற்றச்சாட்டுகள் எழுந்த நிலையில், நடப்பாண்டு ஜூலை மாதம் மக்களிடம் உரையாற்றிய அவர், ஊழல் நடந்திருப்பதை ஒப்புக்கொண்டார்.

இதையடுத்து, 9,855 வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்ட முறைகேடுகளை விசாரிக்க ஆணையம் அமைக்கப்பட்டது. இதற்கிடையில், இந்த திட்டங்களைச் செயல்படுத்திய கட்டுமான நிறுவனங்களின் உரிமையாளர்களான சாரா மற்றும் பசிஃபிகோ டிஸ்கியா என்ற பணக்கார தம்பதி, நேர்காணல்களில் தங்கள் சொகுசு கார்களை காட்சிப்படுத்தியது பொதுமக்களின் கோபத்தை மேலும் தூண்டியது.

அவர்களிடம் நடைபெற்ற விசாரணையில், வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்களுக்கான ஒப்பந்தங்களைப் பெற 17 நாடாளுமன்ற உறுப்பினர்களும், பொதுப் பணித் துறை அதிகாரிகளும் பெரும் லஞ்சத் தொகையைக் கேட்டுப் பெற்றதாகத் தெரிவித்தனர்.

இதைத் தொடர்ந்து, நாடாளுமன்றத்தின் மேலவைத் தலைவர் ஃபிரான்சிஸ் எஸ்குடெரோ, கீழவைத் தலைவர் மார்ட்டின் ரோமுவால்டெஸ் மற்றும் பொதுப் பணித் துறைச் செயலர் வின்ஸ் டிசன் உள்ளிட்டோர் தங்கள் பதவிகளை ராஜிநாமா செய்தனர்.

அரசுப் பொறியாளர்கள் மூவர் பணிநீக்கம் செய்யப்பட்டனர். மேலும் 15 பேர் விசாரணையில் உள்ளனர். அவர்களின் வங்கிக் கணக்குகள், வீடுகள் மற்றும் வாகனங்கள் முடக்கப்பட்டன. இந்நிலையில், அவர்கள் மீதான குற்றச்சாட்டுகளை விரைந்து விசாரிக்குமாறு வலியுறுத்தி பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

## பாகிஸ்தானுக்கு குறைந்த வட்டியில் கடன்: சவூதி அரேபியா முதலிடம்

**இஸ்லாமாபாத், செப். 21:** பாகிஸ்தானுக்கு குறைந்த வட்டியில் கடன் வழங்கும் வெளிநாடுகள் பட்டியலில் சவூதி அரேபியா முதலிடத்தில் உள்ளது. ஆண்டுக்கு 4 சதவீத வட்டி என்ற மிகக் குறைந்த விகிதத்தில் பாகிஸ்தானுக்கு அந்நாடு கடன் வழங்கி வருகிறது.

கடுமையான பொருளாதார நெருக்கடியில் உள்ள பாகிஸ்தான் சர்வதேச நிதியம் (ஐஎம்எஃப்), உலக வங்கி, சீனா மற்றும் அரபு நாடுகளில் இருந்து தொடர்ந்து பல்வேறு தவணைகளாக கடன் பெற்று வருகிறது.

வேளாண்மை உற்பத்தியில் அதிக முன்னேற்றம் இல்லாதது, தொழில் வளர்ச்சி சுணக்கம், அரசு நிர்வாகத்தில் தொடரும் ஊழல், பயங்கரவாதத் தாக்குதல்கள், உள்நாட்டுக் கிளர்ச்சியாளர்களின் போராட்டம் உள்ளிட்ட காரணங்களால் பாகிஸ்தான் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் இருந்து பாகிஸ்தானுக்கு முதலீடு வருவதும் குறைந்துவிட்டது. அரசியல் ஸ்திரமற்ற நிலையும் பொருளாதார பாதிப்புக்கு மற்றொரு முக்கியக் காரணமாகும்.

2024-25-ஆம் ஆண்டு அந்நாட்டில் நடத்தப்பட்ட பொருளாதார ஆய்வின்படி பாகிஸ்தானின் கடன் அந்நாட்டு ரூபாய் மதிப்பில் 76,000 பில்லியனாக (இந்திய மதிப்பில் சுமார் ரூ.23 லட்சம் கோடி) உள்ளது. இதில் மூன்றில் ஒரு பகுதி வெளிநாடுகளில் பெற்ற கடனாகும்.

இந்நிலையில், சவூதி அரேபியாவிடம் இருந்து பெறும் கடன் தொடர்பாக பாகிஸ்தானில் இருந்து வெளியாகும் 'எக்ஸ்பிரஸ் ட்ரிபியூன்' பத்திரிகை செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:

சவூதி அரேபியாவிடம் இருந்து ஏற்கெனவே பாகிஸ்தான் அதிக கடன் பெற்றுள்ளது. அதில் பல கடன்களைத் திரும்பிச் செலுத்த வேண்டிய கால அவகாசம் நெருங்கிய நிலையில் பாகிஸ்தான் திருப்பிச் செலுத்த முடியவில்லை. இதனால், கடனை வசூலிப்பதை சவூதி அரேபியா மேலும் தள்ளி வைத்துள்ளது.

சவூதி அரேபியா, சீனா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய மூன்று நாடுகளும் பாகிஸ்தானுக்கு அதிக கடனுதவி அளிக்கும் நாடுகளாக உள்ளன. இந்த மூன்று நாடுகளும் இணைந்து சுமார் 3 ஆண்டுகளில் 12 பில்லியன் டாலர் (சுமார் ரூ.1 லட்சம் கோடிக்கு மேல்) கடன் வழங்கியுள்ளன. இது பாகிஸ்தானின் மொத்த அந்நியச் செலாவணி கையிருப்பைவிட (14.3 பில்லியன் டாலர்) சற்றே குறைவாகும். பிற நாடுகளில் பெற்ற கடனுக்கு 6 சதவீதத்துக்கு மேல் பாகிஸ்தான் வட்டி செலுத்தும் நிலையில், சவூதி அரேபியா மட்டும் 4 சதவீத வட்டியே வசூலிக்கிறது.

சர்வதேச நிதியம் போன்ற அமைப்புகள் ஏற்கெனவே அதிக கடன் வழங்கியிருப்பதால், இனியும் தொடர்ந்து கடன் கேட்க முடியாது.

பிரிட்டனின் ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் வங்கியில் இருந்து 8.2 சதவீதம் என்ற அதிகபட்ச வட்டிக்கும் பாகிஸ்தான் கடந்த ஆண்டு கடன் பெற்றுள்ளது. பாங்க் ஆஃப் சீனா 6.5 சதவீத வட்டியில் முதலில் கடன் வழங்கியது. மீண்டும் கடன் பெற்ற போது வட்டி 7.3 சதவீதமாக அதிகரித்துவிட்டது.

அதே நேரத்தில் சீனாவின் தொழில் வர்த்தக வங்கி 4.5 சதவீத வட்டியில் பாகிஸ்தானுக்கு கடன் வழங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இஸ்ரேல் தாக்குதல்**

## காஸாவில் 40-க்கும் மேற்பட்டோர் உயிரிழப்பு

**கெய்ரோ, செப். 21:** இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் காஸாவில் 40-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததாக தகவலறிந்த வட்டாரங்கள் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தன.

காஸா சிட்டி மற்றும் மத்திய காஸாவில் உள்ள அகதிகள் முகாம் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில், 19 பெண்கள் மற்றும் சிறார்கள் உள்பட 40-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். 22 பேர் காயமடைந்தனர்.

ஹமாஸிடம் உள்ள இஸ்ரேல் பிணைக் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும், தம்மிடம் ஹமாஸ் படை சரணடைய வேண்டும் என்று அழுத்தம் அளிக்கும் நோக்கில், தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

தாக்குதல் தொடர்ந்துவரும் நிலையில், காஸா சிட்டியில் உள்ள ஆயிரக்கணக்கான மக்கள் தெற்கு திசை நோக்கி நகர்ந்து தஞ்சமடைய வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளது. ஆனால், இந்த நடவடிக்கை அவர்களின் வேதனையை மேலும் அதிகரிக்கும் என்று தன்னார்வ உதவிக் குழுக்கள் தெரிவித்துள்ளன. பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்ய போரை நிறுத்த வேண்டும் என்று அந்தக் குழுக்கள் வலியுறுத்தியுள்ளன. கடந்த 23 மாதங்களாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், காஸாவில் 65,000-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

**லெபனானில் ஐவர் உயிரிழப்பு:** ஹமாஸுக்கு ஆதரவாக லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா கிளர்ச்சிக் குழுவினர் இஸ்ரேலுடன் மோதலில் ஈடுபட்டதால், தெற்கு லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

லெபனானில் உள்ள பின்ட் ஜெபெல் நகரில் இஸ்ரேல் ஞாயிற்றுக்கிழமை நடத்திய ட்ரோன் தாக்குதலில், 3 சிறார்கள் உள்பட 5 பேர் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்தனர் என்று லெபனான் சுகாதார அமைச்சகம் தெரிவித்தது.

**சிரியாவுடன் பேச்சு:** கடந்த ஆண்டு டிசம்பரில் சிரியா அதிபர் பஷார்-அல்-அசாதின் ஆட்சி கவிழ்க்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்நாட்டின் தென்மேற்குப் பகுதிகளை இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளது.

அந்நாட்டின் துரூஸ் சமூகத்தினரை காக்கும் நோக்கில், அங்கு இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் மேற்கொண்டது. இதனால் சிரியாவின் புதிய அரசுடன் இஸ்ரேலின் உறவு பாதிக்கப்பட்டுள்ள நிலையில், சிரியாவுடன் நடத்தப்பட்டு வரும் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.

**வன்முறை எதிர்காலத்தை உருவாக்காது- போப்:** இத்தாலியின் வாடிகன் நகரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வாராந்திர திருப்பலியின்போது, காஸா போர் குறித்து கத்தாலிக்க திருச்சபை தலைவர் போப் 16-ஆம் லியோ பேசுகையில், 'வன்முறை, கட்டாய வெளியேற்றம், பழிவாங்கும் நோக்கம் ஆகியவை எதிர்காலத்தை உருவாக்கித் தராது' என்றார்.



## நூல் அரங்கம்

### வரப்பெற்றோம்

**100 சிறந்த சிறார் கதைகள்- தொகுப்பாசிரியர் சுகுமாரன்; பக்.367; ரூ.400;** டிஸ்கவரி புக் பேலஸ், சென்னை- 600 078. ✆ 87545 07070.

**இன்றைய தமிழ்க் கல்வி (அன்றும் இன்றும்)- முனைவர் அ.பிச்சை; பக்.304, ரூ.350;** நியூஸ்மேன் பப்ளிகேஷன்ஸ், அண்ணாநகர், மதுரை- 625 020.

**கல்லிடைக்குறிச்சி டி.யெம். பீர்முகம்மது- செ.திவான்; பக்.152; ரூ.200;** ரொகான்- ரய்யா பதிப்பகம், திருநெல்வேலி- 627 002. ✆ 90803 30200.

**எறும்புகள்- எஸ்.சுஜாதா; பக்.64 ; ரூ.90;** பட்டர்ஃபிளை புக்ஸ், சென்னை- 600 004. ✆ 96003 98660.

**குவைத்தில் மூன்று நாட்கள்-முத்தாலங்குறிச்சி காமராசு; பக்.256; ரூ.250;** பொன். சொர்ணா, செய்துங்கநல்லூர்-628 809, தூத்துக்குடி மாவட்டம். ✆ 87609 70002.

**உதிர்ந்த சருகுகள் காவியம்- கவிமாமணி வாசல் பட்டு ராசபாரதி; பக்.176; ரூ.180;** கவிச்சுடர் பதிப்பகம், சென்னை-600 041.

**தாழிட மறுக்கும் மௌனங்கள்-முனைவர் தி.நெல்லையப்பன்; பக்.152; ரூ.400;** மைண்ட் ரீடிங் பப்ளிகேஷன்ஸ், 1068, டிஎன்பிஹெச் காலனி, மதுரை-625 011.

**உலக வரலாற்றில் வி.ஜி.சந்தோசம்-நல்லாமூர் முனைவர் கோ.பெரியண்ணன்; பக்.160; ரூ.160;** வனிதா பதிப்பகம், சென்னை-600 017. ✆ 98844 41941.

***கலைநுட்பங்கள்-க.நா.சுப்ரமண்யம் பக். 170; ரூ.180; தேநீர் பதிப்பகம், ஜோலார்பேட்டை-635 851. ✆ 90809 09600.***



கலை நுட்பங்கள்- என்னும் இந்தத் தொகுதியில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் க.நா.சு. 1987 வாக்கில், புதுவையில் தமிழியல் துறையில் சிறப்புப் பேராசிரியராகப் பணியாற்றிய ஏழு மாதங்களில் எழுதியவை. 18 கட்டுரைகள் இதில் உள்ளன.


'கலை நுட்பங்கள்' 1,2,3 என மூன்று கட்டுரைகள் 'இலக்கிய மரபும் தனி மனித தேவையும்' 'இலக்கியப் படிப்பு தேவையா?' 'மேலை நாட்டு இலக்கியத் திறனாய்வுக் கொள்கைகளும் தமிழ் மரபுகளும்' மேலை நாட்டு இலக்கிய இயக்கங்களும் தமிழ் இலக்கியத்தில் அவற்றின் தாக்கங்களும், 'கவிதை பற்றி', 'நாவலில் கதை சம்பவங்கள்-பாத்திர கட்டுக்கோப்பு கருத்து'- ஆகிய கட்டுரைகள் நீளமானவை. பெரும்பாலான கட்டுரைகளிலும் அவர் வைக்கிற வாதம், இலக்கிய விமர்சனம் தேவை என்பதும்-ஆனால் அவை இலக்கியம் வளர வழிவகுக்க வேண்டுமே தவிர அழித்துவிடக் கூடாது என்பதும்தான்.

'இலக்கிய மரபும் தனிமனித தேவையும்'- என்ற கட்டுரையில் 14 வகை மரபுகளை வரிசைப்படுத்துகிறார். அவை ஒவ்வொன்றுக்குமான விளக்கமும் தருகிறார். 'மரபை அறிந்தால்தான் மரபை மீற முடியும்' என்கிறார். மரபை மீறக்கூடாது என்றால் புதுமை இலக்கியம் படைக்கவே முடியாது என்கிறார் க.நா.சு.

கலைநுட்பங்கள்- கட்டுரையில் 'வளைந்தது வில்லு-விளைந்தது பூசல்' என்று மாணிக்கவாசகர் சொல்கையில் சிவபெருமான் திரிபுரத்தை அழித்தது நினைவுக்கு வந்துவிடும்- என்கிறார். நுட்பமாக யோசித்து பல எழுத்தாளர்களின் உத்திகளை விரிவாக விளக்குகிறார்.

கவிதை பற்றிய கட்டுரையில் எந்தக் கவிஞனும் எழுதிய கவிதையைவிட எழுத நினைத்து-எழுதாமல் விட்ட கவிதைகள் அதிகம் இருக்கும்'- என்கிறார். பல கட்டுரைகளில் ஒரு விஷயத்தை திரும்பத் திரும்பச் சொல்வதற்கான காரணம்-வேறு யாரும் சொல்லத் துணியாத- நினைக்காத காரியங்களை நான் வற்புறுத்திச் சோல்லி வந்திருக்கிறேன்.!'- என்கிறார். முன் சொன்னவற்றிலிருந்து முரண் படுவது என்பது மாறுபட்ட சிந்தனையாகவே கொள்ளவேண்டும்.

**காவியம் முழுவதும் நல்லறமே பாடிய கம்பன்!-குரு இராமமூர்த்தி; பக்.800; ரூ.850; மணிமேகலைப் பிரசுரம், சென்னை- 600 017. ✆ 044-2434 2926.**



திருக்குறளுக்கு அடுத்தபடியாக ஒவ்வொரு தமிழறிஞரும் தங்களது தமிழ்ப் புலமையை உலகுக்கு வெளிப்படுத்தவும், தங்களது வாழ்நாள் கடனாகக் கருதுவதும் கம்ப காதை குறித்து எழுதுவதைத்தான். வள்ளுவன் தந்த மறைக்கும் கம்பன் எழுதிய ராமகாதைக்கும் அடிப்படை ஒன்றுதான் -அறம்!


அதனால்தான் 10,200 விருத்தப்பாக்களைக் கொண்ட கம்ப ராமாயணத்தில், 1330 குறள் வெண்பாக்களைக் கொண்ட திருக்குறள் ஆதி முதல் அந்தம் வரை பரவிக் கிடக்கிறது. குறளைப் பரப்பும் நோக்கிலேயே கம்ப காதை படைக்கப்பட்டதோ என்று கருதும் வகையில் ஏறத்தாழ 700-க்கும் அதிகமான குறள்கள் கம்பரால் தமது ராமாயணத்தில் கையாளப்பட்டிருக்கின்றன. அதில் வியப்படைய ஒன்றுமில்லை. இரண்டுமே அறம் பாடிய நூல்கள்.

இந்தப் பின்னணியைப் புரிந்துகொண்டால் குருஇராமமூர்த்தி எழுதிய 'காவியம் முழுவதும் நல்லறமே பாடிய கம்பன்!' என்கிற நூலின் நோக்கத்தையும், அதன் ஆக்கத்தையும் வரவேற்பதில் யாருக்கும் தயக்கம் இருக்காது. கம்ப காதையின் ஒவ்வொரு படலத்தையும், ஏன் ஒவ்வொரு பாடலையும் நுண்ணாடியில் ஆய்வதுபோல அதில் புதைந்திருக்கும் அறத்தின் கூறுகளைக் கண்டறியும் முனைப்புதான், அவர் தொகுத்து வழங்கி இருக்கும் இந்த நூல்.

கம்பன் எழுதிய இராமகாதை எதிர்கொண்ட சவால்களும், அரங்கேற்றத்துக்கு முன்பும் பின்பும் சந்தித்த சுவாரஸ்யமான சோதனைகளும் நூலாசிரியரால் ராமாயண சுவாரஸ்யம்போலவே தொகுத்து வழங்கப்பட்டிருக்கிறது. அவை செவிவழிச் செய்திகள்தான் என்றாலும்கூட, புத்தகத்தைப் புரட்டிப் படிக்க முற்படும் கம்பனில் பரிச்சயம் இல்லாத பாமரனையும்கூட, புத்தகத்தைப் புரட்டிப் பார்க்கவும், கம்பன் பாடிய நல்லறங்களை படித்து உள்வாங்கவும் தூண்டும் என்பதில் சந்தேகமில்லை.

பரதனின் சொல்லறம், குகனின் பேரறம், சீதையின் நல்லறம், இராமனின் பேரறம், அனைத்தையும் வெளிக்கொணர்வதில் கம்பனின் கவிதையும் இமயமாக உயர்ந்து நிற்கிறது என்பதை உணர்த்த முற்பட்டிருக்கிறார் நூலாசிரியர். அறத்தின் நாயகன் இராமனின் காவியத்தில் கம்பன் பாடிய நல்லறங்களை தான் ரசித்ததுபோலப் பதிவு செய்திருக்கிறார் குரு இராமமூர்த்தி.

**நாவல் ஆய்வு முறை-முனைவர் பெ.சுப்பிரமணியன்; பக்.142; விலை ரூ. 160; காவ்யா பப்ளிகேஷன், சென்னை- 24. ✆ 98404 80232.**



மனித சமூகத்தின் தொடக்க காலத்தில் குழு மற்றும் குல அமைப்பாக, அதாவது சிறு அமைப்புகளாக மனித இனம் வாழ்ந்தபோது, பாடுபொருளாக பாடல்களே இருந்தன. அதன் வருணனைகள், உவமைகள்கூட இயற்கையாகவே இருந்தன.


19-ஆம் நூற்றாண்டில் தொழில் புரட்சியின் விளைவால் நாவல் இலக்கியம் தோற்றம் பெற்றது. அச்சு இயந்திரம், காகிதம் கண்டுபிடிக்கப்பட்டது. உரைநடை தோன்றியது. அதன் விளைவால் நாவல் இலக்கியம் வளர்ந்தது. நாவல் இலக்கியம் தோன்றுவதற்கு முன்பு, காப்பிய இலக்கியம் செல்வாக்கு பெற்றிருந்தது. காப்பியம் நிலமானிய சமூக இலக்கிய வகையாகும்.

நாவல் என்பது எடுத்துரைத்தல் முறையில் அமைவது, சங்கிலித் தொடராக நிகழ்ச்சிகளைக் கொண்டது, நெகிழ்வான கதைப் பின்னல், போதுமான அளவுக்குப் பக்கங்கள், பலதரப்பட்ட பாத்திரங்கள், உரைநடை வடிவம், நாவலாசிரியருக்கு போதுமான உலக அறிவு, சமூகத்தைப் படம்பிடித்துக் காட்டும் வல்லமை இருக்க வேண்டும்.

இவ்வாறான விஷயங்களைத்தான் 'நாவல் ஆய்வு முறை' விவரிக்கிறது. இந்நூலில், நாவல் கலை, கதை சொல்லும் முறை, நாவலின் கோணம் அல்லது நோக்குநிலை, கதைப் பின்னல், அதன் அமைப்பு முறை, பாத்திரப் படைப்பு முறை, பாத்திரப் பேச்சு, பின்புலம், நாவலில் உத்திமுறைகள், நாவலில் மொழி நடை ஆகிய தலைப்புகளில் சிறுசிறு கட்டுரையாக விளக்கப்பட்டுள்ளன.

நாவலின் வடிவம், வகைமை, கதை மாந்தர்கள், புனைவு மொழி, கதையாடல் களம் என அனைத்திலும் மரபாகத் திகழும் கோட்பாடுகளைப் பல்வேறு நாவல்களின் சான்றாதாரங்களோடு நூலாசிரியர் விளக்கிச் சொல்கிறார். நாவலை எப்படி ஆராய வேண்டும் என்று கூறும் நூலாகும்.

**உன்னை அறிந்தால்-சோம.வள்ளியப்பன்; பக்.128; ரூ.140; கிழக்கு பதிப்பகம், சென்னை-600 014. ✆ 044 42009603.**



அன்றாடம் நாம் நடந்து கொள்ளும் விதத்திலும், நமது பழக்கவழக்கங்களிலும், பேசும் வார்த்தைகளிலும், உணரும் விதத்திலும் இருக்கிறது நம் வெற்றி என்கிறார் நூலாசிரியர்.

இவர் ஏராளமான சுய முன்னேற்ற நூல்களை எழுதியுள்ளார். ஒரு விஷயத்தை வாசகனுக்குப் புரியவைப்பதில் உள்ள உத்தியை கச்சிதமாகத் தெரிந்தவர் இந்நூலாசிரியர். அதையே இந்நூல் காட்டுகிறது.

மொத்தம் 20 தலைப்புகளில் கட்டுரைகள் கொண்டு விரியும் இந்த நூலில் அந்தக் கட்டுரைகள் ஒவ்வொன்றிலும் ஏதாவது ஒரு புராணக் கதையோ, வரலாற்று நிகழ்வோ, விளையாட்டின் சாதனையோ, நகைச்சுவைக் கற்பனை என்று சொல்ல வந்த கருத்தை வெகு எளிதாக வாசகன் புரியும்படிச் சொல்லிச்செல்கிறார் ஆசிரியர்.

அன்றாட வாழ்வில் நாம் சந்திக்கும் நிகழ்வு குறித்து நாம் இதுவரை அணுகிய கோணம் என்ன? அப்படி அணுகியதால் நமக்குக் கிடைத்தது என்ன? அதை இனி எப்படி அணுக வேண்டும் என்ற தெளிவான பாதையைக் காட்டுகிறது இந்த நூல்.

முக்கியமாக, உணர்ச்சிவசப்படலின் காரணமாக மனிதன் அடையும் தோல்விகள் குறித்து அதிகம் பேசுகிறார் ஆசிரியர். பதற்றமான சூழலில் நாம் சொல்லும் வார்த்தைகள்கூட அபாயகரமான முடிவுகளைக் கொடுத்து நமக்கு எளிதாகக் கிடைக்கக்கூடிய வெற்றியை தள்ளிச்சென்றுவிடும் என்பதைத்தான் அதிகமாகக் குறிப்பிடுகிறார் ஆசிரியர்.

மொத்தத்தில் இந்த நூலை வாசித்து முடிக்கும்போது நமக்கு வரும் உணர்வு என்னவென்றால், வெளி உலகில் நடக்கும் எந்தச் சம்பவமும், நம்மைப் பாதிக்காவண்ணம் நம் மனதைக் காத்துக்கொண்டோமானால், எந்தச் சூழலையும் நாம் கையாண்டு வெற்றி வாகை சூடமுடியும் என்பதுதான்.

**வேதாகம நூல்களுக்கு ஓர் அறிமுகம்-ந.ஜான் ஜெயானந்தம்; பக்.510; மோரியா ஊழியங்கள், சென் னை 600 108. ✆ 99624 94010.**



இன்றைய காலகட்டங்களில் வேத வாசிப்பு குறைந்து வரும் நிலையில், 'வேதாகம நூல்களுக்கு ஓர் அறிமுகம்' என்ற தலைப்பிலான இந்த நூலில் வேதத்தில் உள்ள தீர்க்கதரிசிகள், ராஜாக்கள், அவர்கள் வாழ்ந்த காலத்தின் வரைபடங்கள், இலக்கியப் புலமைகளை வெளிப்படுத்தும் வசனங்கள், அவற்றின் மொழிபெயர்ப்புகள், குறிப்புகள் என பலதரப்பட்ட விஷயங்கள் தெளிவாக கூறப்பட்டுள்ளன.

66 புத்தகங்களை உள்ளடக்கிய வேதாகமத்தை ஆழ்ந்து ஆராய்ந்து நேர்த்தியாக, முழுமையான நூலாக வெளிக்கொணரப்பட்டுள்ளது. பரிசுத்த வேதாகமத்தைப் பற்றிய அடிப்படை அறிமுகத் தகவல்கள், அதன் மேன்மைகள் போன்றவை விளக்கமாக தரப்பட்டுள்ளன. பழைய ஏற்பாட்டின் 39 நூல்களும், புதிய ஏற்பாட்டின் 27 நூல்களும் பகுத்தாய்வு செய்யப்பட்டு, அந்த நூல்களை அறிமுகம் செய்வதில் பொதுவான உத்தியை ஆசிரியர் கையாண்டிருக்கிறார். அந்த நூல்கள் எப்போது, யாரால் எழுதப்பட்டவை என்பன போன்றவை விவிலிய நூல்களின் பின்புலத்தை அறிந்து கொள்ள ஏதுவாக அமைந்துள்ளது.

பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் ஒப்பீடு செய்து இரண்டிலும் நடுநாயகமாக விளங்குபவர் இயேசு கிறிஸ்துவே என விளக்கிக் காட்டப்பட்டுள்ளது. திருத்தூதர் பணிகள், அப்போஸ்தலரின் பணிகள் தெளிவாகவும், விளக்கமாகவும் கூறப்பட்டுள்ளது. விசுவாசிகளுக்கான பொதுவான போதனை நூல்கள் என்னும் தலைப்பில் யோக்கோப்பு, பேதுரு, யோவான், யூதா முதலியோரின் மடல்களும், அவற்றின் பின்புலம், காலம், அவை குறித்து அறிஞர்கள் என்ன கூறுகின்றனர் போன்ற கருத்துகளின் அடிப்படையில் விளக்கப்பட்டுள்ளன. கிறிஸ்தவ சமூகத்துக்கு ஒரு குறிப்பிடத்தக்க நூல்களில் ஒன்றாக இதுவும் திகழும்.

**மனிதரைப் படிப்போம்- தீபிகா தீனதயாளன் மேகலா; பக்.144; ரூ.225; ஹெர் ஸ்டோரிஸ், சென்னை-600 083; ✆ 96003 98660.**



தமிழகத்தைச் சேர்ந்த நூலாசிரியர், கனடாவின் மக் ஈவன் பல்கலைக்கழகத்தில் மானுடவியல் பட்டப்படிப்பை முடித்துள்ளார். பல்கலைக்கழக ஆய்விதழில் இவரது பட்ட ஆய்வும் வெளியாகியுள்ளது. தான் கற்ற மானுடவியல் கோட்பாடுகளை தமிழ் நிலப்பரப்புக்கும், அமெரிக்கக் கண்டத்துக்கும் பொருத்திப் பார்த்து இணையத்தில் கட்டுரைகளை எழுத, அது நூல்வடிவமாகியுள்ளது.

வட இந்திய, இந்திய சமூகங்களை ஒப்பிட்டு மானுடவியல் பார்வையால் அடையாளம், அரசியலின் விரிவான ஆய்வுகள், பல்வேறு பண்பாட்டு உரையாடல்கள், மானுடவியல் கண்ணோட்டத்தில் பெண்களின் முன்னேற்றம் குறித்து நூலாசிரியர் தனது ஆழ்ந்த கோணத்தில் விவரிக்கிறார். சமூகக் கட்டமைப்புகள், அதிகார உறவுகளின் மீதான நுணுக்கமான பார்வையை அவர் கையாள்கிறார்.

மனிதப் பரிணாம வளர்ச்சியின் தொடக்கத்தில் இருந்து நிலத்துடனான மனிதர்களின் தொடர்பு, தொடர்ந்து மாறிக் கொண்டே இருக்கிறது என்று நூலாசிரியர் எடுத்துரைக்கிறார்.

5 தலைப்புகளில் 20 கட்டுரைகளில், வரதட்சிணையின் பரிணாம வளர்ச்சி, விதவை- மலடியின் எதிர்ச்சொல் என்ன?, அடையாளத்தில் பெருமை என்ன?, புலம்பெயர் தமிழர்களின் அடையாளச் சிக்கல், இனப் படுகொலையின் தொடக்கப் புள்ளி, மனித நினைவுகளின் எச்சங்கள், தேசிய வாதம், வட இந்தியா- தென் இந்தியா பகுப்பாய்வு என்று தேசிய அளவிலான, உலகளாவிய பல்வேறு பிரச்னைகள் குறித்து பேசும் நூலாசிரியர் அதற்கான தீர்வுகளுக்கும் வழிகோலுகிறார்.

பக்கத்துக்குப் பக்கம், பத்திக்குப் பத்தி பல்வேறு தகவல்கள் எடுத்துரைத்துள்ளதில், நூலாசிரியரின் அரசியல் அறிவு வியப்பைத் தருகிறது. தமிழ் கூறும் நல்லுலகம் வாசிக்க வேண்டிய நல்லதொரு நூல் இது. ■

திருவான்மியூர் COTTON HOUSE®
காட்டன் ஹவுஸ் திருவான்மியூர் சிக்னலில் மட்டுமே
No.68, L.B.Road, Chennai - 600 041.
Phone: 044- 2445 4442 / 4201 0609

தினமணி
திங்கள்கிழமை, 22 செப்டம்பர் 2025

ஞாயிற்றுக்கிழமைதோறும்
தினமணி கதிர்
இளமை! புதுமை! இனிமை!

# மகாளய அமாவாசை: ராமேசுவரம் கடலில் திரளான பக்தர்கள் புனித நீராடல்

**ராமேசுவரம்/கன்னியாகுமரி, செப். 21:** மகாளய அமாவாசையையொட்டி, ராமேசுவரம் அக்னி தீர்த்தக் கடலில் ஆயிரக்கணக்கான பக்தர்கள் ஞாயிற்றுக்கிழமை புனித நீராடி சுவாமி தரிசனம் செய்தனர்.

மகாளய அமாவாசையையொட்டி, ராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரத்தில் அமைந்துள்ள ராமநாதசுவாமி கோயிலுக்கு ஞாயிற்றுக்கிழமை பல்வேறு மாவட்டங்களிலிருந்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் வந்தனர்.

இவர்கள் ராமேசுவரம் அக்னி தீர்த்தக் கடலில் புனித நீராடி தங்களது முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தனர். இதன் பின்னர், ராமநாதசுவாமி கோயிலுக்குள் உள்ள 22 தீர்த்தக் கிணறுகளில் நீராடி ராமநாதசுவாமி, பர்வதவர்த்தினி அம்பாளை தரிசனம் செய்தனர்.

700-க்கும் மேற்பட்ட போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

**குமரி முக்கடல் சங்கமத்தில்...:** புரட்டாசி மாத மகாளய அமாவாசையையொட்டி கன்னியாகுமரி பகவதியம்மன் கோயிலில் சிறப்பு வழிபாடுகள், விசேஷ பூஜைகள், தீபாராதனை நடைபெற்றது. மேலும், வைரக்கிரீடம், வைரக்கல் மூக்குத்தி, தங்க ஆபரணங்கள் அணிவிக்கப்பட்டு, சந்தனக்காப்பு அலங்காரத்துடன் அம்மன் பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

மகாளய அமாவாசையை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை காலை கன்னியாகுமரி முக்கடல் சங்கமத்தில் ஏராளமான பக்தர்கள் புனித நீராடி முன்னோர்களுக்கு தர்ப்பணம் கொடுத்தனர்.




மகாளய அமாவாசையையொட்டி, ராமேசுவரம் அக்னி தீர்த்தக் கடலில் ஞாயிற்றுக்கிழமை புனித நீராடிய பக்தர்கள். (வலது) கன்னியாகுமரி முக்கடல் சங்கமத்தில் புனித நீராடிய பக்தர்கள்.

## நவராத்திரி விக்ரகங்களுக்கு கேரளத்தில் வரவேற்பு



சுவாமி விக்ரகங்களுக்கு கேரள அரசு சார்பில் போலீஸ் அணிவகுப்புடன் அளிக்கப்பட்ட வரவேற்பு.

**களியக்காவிளை, செப். 21:** திருவனந்தபுரத்தில் நடைபெறும் நவராத்திரி பூஜையில் பங்கேற்க கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரத்திலிருந்து கேரளம் செல்லும் சுவாமி விக்ரகங்களுக்கு அம்மாநில அரசு சார்பில், களியக்காவிளையில் ஞாயிற்றுக்கிழமை வரவேற்பு அளிக்கப்பட்டது.

இவ்விழாவில், கேரள ஆளுநர் ராஜேந்திர அர்லேக்கர் கலந்து கொண்டார்.

கம்பர் பூஜித்ததாக கருதப்படும், பத்மநாபபுரம் தேவாரக்கெட்டு சரஸ்வதி அம்மன் நெற்றிப் பட்டம் சூட்டப்பட்ட யானை மீதும், சுசீந்திரம் முன்னுதித்த நங்கை அம்மன், வேளிமலை குமாரகோவில் குமார சுவாமி, பல்லக்கிலும் திருவனந்தபுரம் செல்கின்றனர். விக்ரகங்களுக்கு முன்னால், திருவிதாங்கூர் மன்னர் பயன்படுத்திய உடைவாள் ஊர்வலமாக கொண்டுவரப்பட்டது. சுவாமி விக்ரகங்களுக்கு மாவட்ட எல்லைப் பகுதியான களியக்காவிளையில் கேரள அரசு சார்பில் துப்பாக்கி ஏந்திய போலீஸாரின் அணிவகுப்புடன் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

தொடர்ந்து, கன்னியாகுமரி மாவட்ட அறநிலையத் துறை இணை ஆணையர் ஜான்சிராணி, திருவிதாங்கூர் தேவசம்போர்டு தலைவர் பிரசாந்திடம் ஊர்வலப் பொறுப்பை ஒப்படைத்தார்.

விழாவில், விளவங்கோடு எம்எல்ஏ தாரகை கத்பட், இந்து முன்னணி மாநிலத் தலைவர் காடேஸ்வரா சுப்பிரமணியம், முன்னாள் தலைவர் அரசு ராஜா, பாஜக மாநில செயற்குழு உறுப்பினர் ஜெயசீலன் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். மார்த்தாண்டம் சரக துணை காவல் கண்காணிப்பாளர் நல்லசிவம் தலைமையில் போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

## மாதிரி நீதிமன்றப் போட்டி: 'சாஸ்த்ரா' வெற்றி



சென்னையில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மாதிரி நீதிமன்ற இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தின் சட்டவியல் பள்ளி அணிக்கு பரிசு வழங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதி எம்.எம். சுந்தரேஷ்.

**தஞ்சாவூர், செப். 21:** சென்னையில் நடைபெற்ற என்.நடராஜன் அறக்கட்டளையின் குற்றவியல் தொடர்பான மாதிரி நீதிமன்றப் போட்டியில் தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தின் சட்டவியல் பள்ளி வெற்றி பெற்றது.

என்.நடராஜன் அறக்கட்டளை, சென்னை வழக்குரைஞர் சங்கம் சார்பில் கடந்த 19-ஆம் தேதி தொடங்கி ஞாயிற்றுக்கிழமை வரை நடைபெற்ற இப்போட்டியில் பல்வேறு தேசிய சட்டவியல் பல்கலைக்கழகங்கள் உள்பட 30 அணிகள் பங்கேற்றன. இதில், ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் சதீஷ்குமார், பரத சக்கரவர்த்தி, முகமது ஷபீக், ஆர்.என். மஞ்சுளா ஆகியோர் நடுவர்களாக இருந்தனர்.

இப்போட்டியில் தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தின் சட்டவியல் பள்ளியில் இறுதி ஆண்டு பயிலும் எஸ். க்ஷியா, வி. அபிராமி, வி. பிரதிக்ஷா ஆகியோர் கொண்ட அணி ரூ. 50 ஆயிரம் ரொக்கப் பரிசைப் பெற்றது.

இவர்களில் அபிராமி சிறந்த பேச்சாளருக்கான பரிசையும், பிரதிக்ஷா சிறந்த ஆய்வாளருக்கான இரண்டாம் பரிசையும் பெற்றனர். வெற்றி பெற்றவர்களுக்கு உச்ச நீதிமன்ற நீதிபதி எம்.எம். சுந்தரேஷ் பரிசுகளை வழங்கினார். அப்போது சென்னை உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி எம்.எம். ஸ்ரீவஸ்தவா, தமிழ்நாடு அரசின் மூத்த வழக்குரைஞர் பி.எஸ். ராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# குடிமைப் பணியாளர்கள் பாரபட்சமின்றி செயல்பட வேண்டும்

### முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த்

**சென்னை, செப். 21:** குடிமைப் பணியாளர்கள் தங்களது மனதில் இருப்பதை தைரியமாகப் பேசுவதுடன், பாரபட்சமின்றி செயல்பட வேண்டும் என முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தெரிவித்தார்.

சென்னை அண்ணா நகரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கிங் மேக்கர்ஸ் ஐஏஎஸ் அகாதெமியின் 12-ஆவது ஆண்டு விழாவில் அவர் பேசியதாவது:

இந்தியா பன்முகத்தன்மை கொண்ட நாடு. பல்வேறு மொழிகளையும் கலாசாரத்தையும் கொண்டிருக்கிறது. நம் நாட்டுக்கு சேவை செய்ய அறிவுமட்டுமன்றி, சேவை மனப்பான்மை, கருணை தேவை. அனைத்து சமூக மக்களின் தேவைகளையும்புரிந்துகொண்டு அதற்கு ஏற்ப சேவைகளை வழங்கினால்தான் அனைவரையும் சமமாக அணுக முடியும். குடிமைப் பணிகளில் சேர்ந்து அர்ப்பணிப்புடனும், நேர்மையுடனும் நம் நாட்டுக்கு மகத்தான சேவையை இளைஞர்கள் வழங்கி வருகின்றனர். நாட்டின் ஒற்றுமைக்கும், சிறந்த நிர்வாகத்துக்கும் முதுகெலும்பாக குடிமைப் பணியாளர்கள் திகழ்ந்து வருகின்றனர். குடிமைப் பணியாளர்கள் சிறந்த நிர்வாகத்தை அளிக்க வேண்டும். தங்களது மனதில் இருப்பதை தைரியமாக பேசுவதுடன், பாரபட்சமின்றி செயல்பட்டு அரசுக்கு சிறந்த ஆலோசனைகளை வழங்கவேண்டும்.

கடந்த 12 ஆண்டுகளில் 100-க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு கிங் மேக்கர்ஸ் அகாதெமி வழிகாட்டியிருக்கிறது. முதல்முறையாக பார்வை மாற்றுத்திறனாளியை குடிமைப் பணி அதிகாரியாக இந்த அகாதெமி உருவாக்கியுள்ளது. தேசத்தை கட்டியெழுப்புவதற்கு இதுபோன்ற பங்களிப்புகள் இன்றியமையாதவை என்றார் அவர்.

விழாவில் பங்கேற்ற தமாகா தலைவர் ஜி.கே.வாசன் பேசியதாவது:

குடிமைப்பணி அதிகாரிகள் மக்களுக்கு பல்வேறு அரசு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் முக்கியப்பங்கு வகித்து வருகின்றனர். பொதுமக்களிடம் எளிதாக நல்ல முறையில் நலத் திட்டங்களைக் கொண்டு சேர்க்கும் திறமையான நிர்வாகத்துக்கு குடிமைப்பணி அதிகாரிகள்தான் தூண்கள்.

அந்தவகையில் இந்த அகாதெமியைச் சேர்ந்த குடிமைப்பணி அதிகாரிகள் சிறந்த முறையில் பணியாற்றி நாட்டின் வளர்ச்சிக்கு சிறந்த பங்களிப்பை வழங்க வாழ்த்துகிறேன் என்றார்.

விழாவில், சென்னை, தஞ்சாவூரில் புதிதாகக் கட்டப்பட்ட அகாதெமியின் புதிய வளாகங்களை முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் கிங் மேக்கர்ஸ் ஐஏஎஸ் அகாதெமி நிறுவனரும், இயக்குநருமான எம்.பூமிநாதன், துணை நிறுவனர் சத்யஸ்ரீ பூமிநாதன், கௌரவ ஆலோசகர் விவேக் ஹரிநாராயணன், ஸ்ரீவர்ஷா பூமிநாதன், சாய் சந்தோஷ் பூமிநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.




சென்னை அண்ணா நகரில் உள்ள கிங் மேக்கர்ஸ் ஐஏஎஸ் அகாதெமியின் புதிய வளாகத்தை ஞாயிற்றுக்கிழமை திறந்து வைத்த முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த். உடன், தமாகா தலைவர் ஜி.கே.வாசன், கிங் மேக்கர்ஸ் ஐஏஎஸ் அகாதெமியின் இயக்குநர் பூமிநாதன், அவரது மனைவியும் முதன்மை நிர்வாக அதிகாரியுமான சத்யஸ்ரீ பூமிநாதன் உள்ளிட்டோர்.

### உள்வாங்கிய கடல்...




அமாவாசையையொட்டி திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயில் கடற்கரையில் அய்யா கோயில் அருகே ஞாயிற்றுக்கிழமை காலை சுமார் 60 அடி உள்வாங்கிய கடல்.

## சாலையில் வாகனங்களை வழிமறித்த யானை

**சத்தியமங்கலம், செப். 21:** சத்தியமங்கலம் - மைசூரு தேசிய நெடுஞ்சாலையில் ஒற்றை காட்டு யானை வாகனங்களை ஞாயிற்றுக்கிழமை வழிமறித்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் புலிகள் காப்பக வனப் பகுதி வழியாக தமிழக- கர்நாடக மாநிலங்களை இணைக்கும் சத்தியமங்கலம்- மைசூரு தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ளது. வனப் பகுதியில் இருந்து வெளியேறும் காட்டு யானைகள் தேசிய நெடுஞ்சாலையில் வாகனங்களை வழிமறிப்பதோடு, அவ்வழியாக பயணிக்கும் கரும்பு லாரிகளை வழிமறித்து கரும்புத் துண்டுகளைப் பறித்து சாப்பிடும் நிகழ்வு தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது.



இந்நிலையில், சத்தியமங்கலம்- மைசூரு தேசிய நெடுஞ்சாலையில் ஆசனூர் அருகே திம்பம் வனப் பகுதியில் இருந்து வெளியேறிய ஒற்றை காட்டு யானை சாலையில் சென்ற வாகனங்களை வழிமறித்ததோடு அவ்வழியாக வந்த லாரியில் கரும்பு பாரம் உள்ளதா என தேடிப் பார்த்தது.

அப்போது அவ்வழியாக சென்ற கார், அரசுப் பேருந்து உள்ளிட்ட வாகனங்களை திடீரென காட்டு யானை துரத்தத் தொடங்கியது. இதனால் அரசுப் பேருந்தில் இருந்த பயணிகள் அச்சமடைந்தனர்.

யானை சாலையில் அங்குமிங்கும் நடமாடியபடி வழிமறித்து நின்றதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. சிறிது நேரம் நடமாடிய காட்டு யானை பின்னர் வனப் பகுதிக்குள் சென்றது. இதைத் தொடர்ந்து வாகனங்கள் புறப்பட்டுச் சென்றன.

## குலசேகரன்பட்டினத்தில் நாளை தசரா திருவிழா கொடியேற்றம்

**உடன்குடி, செப். 21:** தூத்துக்குடி மாவட்டம் குலசேகரன்பட்டினம் அருள்மிகு ஞானமூர்த்தீஸ்வரர் உடனுறை முத்தாரம்மன் கோயிலில் தசரா திருவிழா செவ்வாய்க்கிழமை (செப். 23) கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

இதையொட்டி, திங்கள்கிழமை (செப். 22) முற்பகல் 11 மணிக்கு காளிபூஜை, அன்னதானம், மாலையில் மகுட இசை, சகஸ்ரநாம அர்ச்சனை, புஷ்பாஞ்சலி, பரதநாட்டியம், வில்லிசை, இரவு 9 மணிக்கு அம்மன் காப்பு கட்டுதல் நடைபெறுகிறது. தொடர்ந்து, செவ்வாய்க்கிழமை அதிகாலை கொடிப்பட்டம் வீதியுலாவுக்குப் பின்னர், 6 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும்.

நாள்தோறும் காலை 7.30 முதல் இரவு 7.30 மணி வரை சிறப்பு அபிஷேகம், ஆராதனை, இரவு 10 மணிக்கு அம்மன் பல்வேறு திருக்கோலங்களில் வாகனங்களில் பவனி வருதல் நடைபெறும்.

கொடியேற்றத்தைத் தொடர்ந்து காப்பு அணியும் பக்தர்கள் பல்வேறு வேடங்களை அணிந்து அம்மனுக்கு காணிக்கை வசூலிப்பர். கோயில் கலையரங்கில் பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

விழாவின் சிகர நிகழ்வான சூரசம்ஹாரம் அக். 2இல் நடைபெறுகிறது. அக். 3ஆம் தேதி காலையில் பூஞ்சப்பரத்தில் வீதியுலா புறப்படும் அம்மன், மாலை 4 மணிக்கு கோயிலை வந்தடைந்ததும் கொடியிறக்கம் நடைபெறும். வேடமணிந்த பக்தர்கள் காப்புகளை களைந்து விரதத்தை நிறைவு செய்வர்.

ஏற்பாடுகளை அறநிலையத் துறை இணை ஆணையர் அன்புமணி, உதவி ஆணையர் க. செல்வி, ஆய்வர் முத்துமாரியம்மாள், அறங்காவலர் குழுத் தலைவர் வே. கண்ணன், செயல் அலுவலர் மு. வள்ளிநாயகம் ஆகியோர் செய்து வருகின்றனர். கோயில் நடைமுறைகள், தசரா குறித்த விவரங்களுக்கு 04639-250355 என்ற தொலைபேசி எண்ணைத் தொடர்பு கொள்ளலாம்.



கோயில் முன் ஞாயிற்றுக்கிழமை திரண்டிருந்த பக்தர்கள்.

# டெல்டாவில் தடையை மீறி மீண்டும் மீத்தேன் வாயு ஆய்வுக் கிணறுகள்

### தமிழக அரசு தடுக்கக் கோரிக்கை

**தஞ்சாவூர், செப். 21:** பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமான டெல்டாவில் மீண்டும் மீத்தேன் வாயு (ஷேல் வாயு) ஆய்வு கிணறுகள் மறைமுகமாக தோண்டப்பட்டது குறித்து தமிழக அரசு தலையிட்டு தடுக்க வேண்டும் என தமிழ்நாடு அறிவியல் இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தஞ்சாவூரில் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சூழலியல் உபக்குழு ஒருங்கிணைப்பாளர் வி. சேதுராமன் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தின் நெற்களஞ்சியமான காவிரி டெல்டா பகுதி பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலமாக 2020-இல் அறிவிக்கப்பட்டு, 5 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. இந்நிலையில் அண்மையில் வெளிவந்துள்ள மத்திய எரிசக்தி இயக்ககத்தின் 2024-2025- ஆம் ஆண்டறிக்கையில், இதைப் பொருட்படுத்தாமல் ஹைட்ரோ கார்பன் திட்டங்களைத் தொடர்ந்து நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆண்டுகளாக பெயர் குறிப்பிடாமல் காவிரி டெல்டாவில் 3 இடங்களில் மீத்தேன் வாயு ஆய்வுக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி இயக்கக அறிக்கையில் குறிப்பிட்டு வந்த நிலையில், இந்த ஆண்டு வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், பெரியகுடி, திருவாரூர், அன்னவாசநல்லூர் ஆகிய இடங்களில் மீத்தேன் வாயு ஆய்வு கிணறுகளை ஓஎன்ஜிசி நிறுவனம் அமைத்துள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஓஎன்ஜிசி தனது முந்தைய அறிவிப்புக்கு மாறாக, நீரியல் விரிசல் முறையில் மட்டுமே நிறைவேற்ற சாத்தியமுள்ள மீத்தேன் வாயு ஆய்வுக் கிணறுகளை மறைமுகமாக தோண்டியிருப்பது அம்பலமாகியுள்ளது.

இது தமிழக அரசால் கொண்டு வரப்பட்ட பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டல சட்டத்துக்கு முற்றிலும் எதிரானதாகும். எனவே, இந்த விவகாரத்தில், கடந்த 2023-இல், பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் உள்ள வடசேரி பகுதியில் அறிவிக்கப்பட்ட நிலக்கரித் திட்டத்தை உடனடியாக ரத்து செய்ய நடவடிக்கை எடுத்து வேளாண்மையைக் காப்பாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் உடனடியாக ஓஎன்ஜிசி-இன் தற்போதைய நடவடிக்கைகள் குறித்தும், விதிகளுக்குப் புறம்பாக 3 மீத்தேன் வாயு ஆய்வுக் கிணறுகள் தோண்டப்பட்டிருப்பது குறித்தும் உயர்நிலை வல்லுநர் குழு அமைத்து, ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாதுகாக்கப்பட்ட வேளாண் மண்டலத்தில் மத்திய அரசு செயல்படுத்தத் துடிக்கும் மன்னார்குடி மீத்தேன் திட்டம், புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் உள்ளிட்ட 3 பகுதிகளில் கொண்டு வரப்பட்ட எண்ணெய் எரிவாயு திட்டங்களை முற்றிலும் ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

DINAMANI, Chennai Phone: 23457601 Fax: 044-23457619 RNI Reg. No. 3459/60 Printed and Published by R.K. Jhunjhunwala on behalf of Express Publications (Madurai) Private Limited., at Express Press, 'Express Gardens', 29, Second Main Road, Ambattur Industrial Estate, Chennai - 600 058. ஆசிரியர்: கே. வைத்தியநாதன் - Editor: K.Vaidiyanathan Chennai. Vol. 92, No. 264
COPYRIGHT: Express Publications (Madurai) Private Limited., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.